# எதிரொலி ETHIROLI
ஆஸ்திரேலியா

குரல் 06 அதிர்வு 72 ஆனி 2023 editor@ethiroli.com தொ.பே:1800 960 162


Transco CARGO
We love to deliver

ONLY TRANSCO DOES WEEKLY SHIPMENTS TO SRI LANKA
Track your parcel online
Air delivery within 4-7 days NEW
Door delivery available
1300 187 267
TranscoCargo.com.au

SHIPPING SCHEDULE

| CUT OFF | SL ARRIVAL |
|---|---|
| JUN 3* | JUL 14 |
| JUN 10 | JUL 21 |
| JUN 17* | JUL 28 |
| JUN 24 | AUG 4 |
| JUL 1* | AUG 11 |
| JUL 8 | AUG 18 |
| JUL 15* | AUG 25 |
| JUL 22 | SEP 1 |
| JUL 29* | SEP 8 |

*Exclusive to Transco warehouses in Dandenong South and Campbellfield






MCN Cakes

Birthday கேக்



Wedding கேக்





Butter, Ribbon & Chocolate கேக்



Also available : Fish buns, Onion buns, Stuffed Godamba Roti, Lamprais, Rice & Curry & many more ...



MCN Cakes
Shop 105, Level 1
Dandenong Plaza
in the food court near Reject Shop/Westpac
(03) 90188188
0433662477
Open 7 days


See Page 09



EZY CASH PAWN SHOP
அடகுகடை

EZY CASH

DANDENONG



நகை அடகுச்சேவை



Maximum Value | Quick Service | Lowest Rate
Bala 0420 877 303

GOLD LOAN
Need some Emergency Fund
Don't worry we have got you covered!


ஆஸ்திரேலியாவிலிருந்து வெளிவரும் தமிழ் மாத இதழ்

ROYAL INTERNATIONAL MONEY TRANSFERS

EASY • FAST • SAFETY

நாணயமிக்க பணப்பரிமாற்றம்
'டன்டினொங்' இல்
புதியதோர் சேவை

BOC
PEOPLE'S BANK
COMMERCIAL BANK
HNB
Sampath Bank
UNION BANK
Amãna Bank
It's Your Bank

Same day bank transfer

No One Beat Our Rate

THE HUB ARCADE
4/131-147, Walker Street, Dandenong VIC 3175

(03) 87649143 0406409403
royalinfomoney@gmail.com


KUMARAN'S
Cafe
Enjoy the
South Indian
Favourites
IDLI | DOSA | VADA | BAJJI
A Complete Vegetarian Restaurant
Call Us For Orders
0413 306 575
RIVERDALE VILLAGE PLUS SHOPPING CENTRE
200, HUMMINGBIRD BOULEVARD, TARNEIT, VIC - 3029.


SAME DAY DELIVERY SERVICE க்கு
தங்களின் அமோக வரவேற்புக்கு
எங்களின் அன்பு நன்றிகள்
SRI KUMARAN
our local store
Whatsapp us 0421 255 557
We have now expanded our services to
CBD | POINT COOK | MANOR LAKES | WERRIBEE | TARNEIT
உங்களின் ஆதரவு! எங்களின் உத்வேகம்!!
OUR STORES
SHEPPARTON | TARNEIT | CLYDE NORTH | NARRE WARREN | CARRUM DOWNS
info@srikumaran.com.au
www.srikumaran.com.au

# ஆஸியில் மோடி



கார்த்திக்வேலு


இந்தியப் பிரதமர் மோடி முதன்முறையாக 2014 இல் ஆஸ்திரேலியா வந்திருந்தார் . ஆஸ்திரேலியாவுக்கு இந்தியப் பிரதமர்கள் அரிதாகவே வந்திருக்கிறார்கள் . இந்திரா காந்தி 68 இல் முதன் முறை வந்தார், அதன் பின் 81 இல் கொமன்வெல்த் நாடுகளின் கூட்டத்தில் கலந்து கொள்ள வந்தார்.அதன்பின் இந்திரா காந்தி அவர்களின் படுகொலையின், பின் நடந்த பொதுத்தேர்தலில் வரலாறு காணாத அளவில் பெரும்பான்மை பெற்று ராஜீவ் காந்தி ஆட்சிப்பொறுப்பை ஏற்றார்.பதவி ஏற்ற இரண்டு ஆண்டுகளிலேயே ,1986 இல் அவர் ஆஸ்திரேலியாவுக்கு வருகை தந்தார்.

ராஜீவ் காந்தியின் பயணத்தின் போது ஆஸியில் இந்தியர்களின் எண்ணிக்கை குறைவாகவே இருந்தது. தோராயமாக ஒரு இருபதாயிரம் பேர் இருந்திருக்கலாம். 73 ஆம் ஆண்டு வரை அமுலில் இருந்த ‘வெள்ளையர்கள் மட்டுமே’ என்ற குடியேற்றக் கொள்கையையும் இதற்கு ஒரு காரணமாகச் சொல்லலாம், பொருளாதாரத் தாராளமயமாக்கல் நிகழ்ந்த 90 களில் பிற்பகுதியிலேயே கணிசமான அளவு இந்தியர்கள் இங்கு குடியேற ஆரம்பித்தார்கள். எனவே ராஜீவ் இங்கு வந்த போது மோடிக்கு அளிக்கப் பட்டது போல் திரளான சமூக வரவேற்பெல்லாம் அமைய வாய்ப்பிருக்கவில்லை.



மாறாக ராஜீவ் காந்தி ஆஸி பிரஸ் கிளப்பில் ஒரு சிறிய உரையாற்றினார் . ஆஸி ஊடகர்கள் அவரிடம் சம காலப் பிரச்சினைகள் குறித்து கேள்விகள் எழுப்பினர் .அவரின் உரை ஐந்து நிமிடமே, ஆனாலும் கேள்வி - பதில் நிகழ்ச்சி ஒரு மணி நேரம் வரை நடந்தது.ஈழப்பிரச்சனை, SAARC , தென்னாப்பிரிக்க பிரச்சினை, ஆப்கானிஸ்தான் ஆக்கிரமிப்பு என்று பல சர்வதேசப் பிரச்சினைகளை முன்வைத்து கேட்கப்பட்ட கேள்விகளுக்கு சரளமாகவும் தெளிவாகவும் அவர் பதிலளித்திருந்தார். அரசியலில் மதத்தின் பங்கு என்ன? என்ற கேள்வி அப்போதே எழுப்பப்பட்டிருக்கிறது.

ராஜீவ் வருகைக்குப் பிறகு இந்திய- ஆஸி உறவு தூரத்தில் நின்று கையசைத்துக்கொள்ளும் நட்பாகவே இருந்து வந்தது. ஆஸியின் அமெரிக்க நெருக்கமும் இந்தியாவின் ரஷ்ய நெருக்கமும் இரு நாடுகளையும் அதிகம் நெருங்க விடாமல் வைத்திருந்தன. ஆஸியின் வெளியுறவுக்கொள்கை மெல்ல தெற்காசியாவில் இருந்து நகர்ந்து தென்கிழக்கு ஆசியா நோக்கித் திரும்பியது. சீனாவின் அசுர வளர்ச்சி, வலுவான சீன-ஆஸி உறவு அமைய பாலம் அமைத்தது.





இந்த இடைப்பட்ட காலத்தில் இந்திய அரசியல் சூழலே முற்றாக மாறியிருந்தது, மதவாதத்தின் எழுச்சி 90களின் ரத யாத்திரை நிகழ்வில் இருந்தே ஆரம்பித்து விட்டிருந்தது . மண்டல் கமிஷன், பாபர் மசூதி இடிப்பு, கார்கில் போர் , மும்பை தொடர் குண்டுவெடிப்புகள், காஷ்மீர் பிரச்சினை , பாகிஸ்தான் தீவிரவாத ஊடுருவல், கோத்ரா படுகொலைகள் என்று இந்தியாவின் செல்திசை வெகுவாக மாறிவிட்டிருந்தது.

சர்வதேச அளவிலும் பல பெரும் மாற்றங்கள். சோவியத் உடைவு, தொழிநுட்பப் பாய்ச்சல், சமூக ஊடகங்கள் , இரட்டைக்கோபுரத் தாக்குதல், சர்வதேசப் பொருளாதார நெருக்கடி போன்றன உலக அரசியலை வெகுவாக குலுக்கி விட்டிருந்தன. இந்த அதீத மாற்றங்களினால் பல நாடுகளில் வலதுசாரித் தன்மை (conservative) கொண்ட அரசாங்கம் அமையும் சூழல் உருவாகியது , ஐரோப்பா உட்பட.

இந்த இடைப்பட்ட வருடங்களில் ஆஸி வாழ் இந்தியர்களின் எண்ணிக்கையும் மிகக் கணிசமாக உயர்ந்திருந்தது. தகவல் தொழில்நுட்பத் துறையின் பாய்ச்சல் பெருமளவில்இந்தியர்கள்குடியேறவழிவகுத்தது, குஜராத்தின் முதல்வராக இருந்த மோடி அவர்கள் ஒரு strongman தலைவராக முன்வைக்கப்பட்டு பெரும் எதிர்பார்ப்புடன் 2014 இந்தியப் பொதுத்தேர்தலின் வென்றார் . பதவியேற்ற சில மாதங்களிலேயே ஆஸி பயணம் மேற்கொண்டார் . இந்தப் பின்னணியில் பிரதமர் மோடி அவர்களின் , 28 வருடங்களுக்கு பிறகான ஒரு இந்தியப் பிரதமரின் வருகை என்பதாக பெரிதும் எதிர்பார்க்கப்பட்டது

இந்த நிகழ்வுக்கு நம்பிக்கையுடனும் ஆர்வத்துடனுமே நானும் சென்றிருந்தேன். ஒரு நிகழ்வில் இத்தனை ஆஸி வாழ் இந்தியர்கள் திரண்டது இது தான் முதல் முறை என்று நினைக்கிறேன் . பிரதமர் மோடி அந்தக்கூட்டத்தில் சரியானவைகளையே பேசினார். ஆனால் அதற்குப் பின்னான அவர் அரசின் திட்டங்கள் - பணமதிப்பிழப்பு, CAA, விவசாய சட்டங்கள், வலது சாரி பொருளாதாரக் கொள்கைகள் என்று மெல்ல அதிருப்தியை உருவாக்கத் தொடங்கியிருந்தன , முக்கியமாக இந்துத்துவ பெருமான்மைவாதம் பல தளங்களில் இதுவரை உருவாகி வந்திருந்த மதச்சார்பின்மையை, சகிப்புத்தன்மையை உருக்குலைப்பதாக அமைந்தது. மத்திய- மாநில உறவுகள் பெரும் அழுத்தத்திற்கு உள்ளாகின.

மதச்சார்பை முதன்மையாக முன்வைத்து ஆதரவைத் திரட்டும் இந்த புதுவித அரசியலை எப்படி எதிர்கொள்வதென்று அறியாமல் எதிர்க்கட்சிகள் திணறின. மதப் பெரும்பான்மைவாதம் - தேசப்பற்று, வளர்ச்சி என்ற பெயர்களில் உலா வர ஆரம்பித்தது. மதவாதத்தை வெற்றிகரமாக மோடியின் அரசு ஒரு மாற்று அரசியல் கதையாடலாக மாற்றிவிட்டிருந்தது. அடுத்து வந்து 2019 பொதுத்தேர்தலிலும் பா.ஜ.க. மேலும் வலுவான வெற்றியை பெற்று ஆட்சி அமைத்தது .

இதெல்லாம் இந்திய அளவில் நிகழ்ந்தாலும் சர்வதேச அரங்கில் இந்தியா கூடுதலாக கவனிக்கப்படும் நாடாக மாறியது. பொருளாதார வளர்ச்சி, சீனாவைவிட அதிகரித்திருக்கும் மக்கள் தொகை போன்றவை யாருமே மறுக்க முடியாத ஒரு சந்தையாக இந்தியாவை மாற்றியிருந்தன, மேலும் வெளிநாடு வாழ் இந்தியர்களின் எண்ணிக்கை இந்தியப் பிரதமர் செல்லும் இடமெல்லாம் அவரை ஒரு நாயகராக ஆக்கியிருக்கிறது. ஆஸி போன்ற நாடுகளில் ஒரு விளையாட்டு மைதானத்தை நிரப்பும் அளவு கூட்டம் உள்ளூர் அரசியலில் யாருக்குமே கிட்டாது. எனவே இது போன்ற பொன்னான வாய்ப்பை எந்த உள்ளூர் அரசியல்வாதியும் தவறவிடுவதில்லை .

கிட்டத்தட்ட 9 ஆண்டுகளுக்குப் பிறகு இரண்டாவது முறையாக 2023 இல் மோடி அவர்கள் வருகை தரும்போது எனக்கு முன்பு இருந்த ஆர்வம் வெகுவாகக் குறைந்துவிட்டது. இந்துத்துவம் செல்லும் திசை தேசநலனுக்கும் மக்களுக்கும் நீண்ட கால நோக்கில் குந்தகம் விளைவிப்பதாகவே இருக்கும் என்ற எண்ணம் வலுப்பட ஆரம்பித்துள்ளது .வரலாறும் நமக்கு இதையே சொல்கிறது. ஆனால் ஆஸி வாழ் இந்தியர்களில் கணிசமானோருக்கு அவர் இன்னும் நாயகனாகவே காட்சி அளிக்கிறார் . அந்த பிம்பம் முன்னை விட வலுவாகி நம் முன் நிற்கிறது,

இந்தியா உலகின் மாபெரும் ஜனநாயக நாடு, வேறெங்கும் இல்லாத படி சாதி, மத, மொழி, உணவு, கலாசார வேறுபாடுகளைக் கொண்டது. சுதந்திரம் கிடைத்து ஐந்தே வருடத்தில் இந்தியா பல துண்டுகளாக உடைந்து சிதறும், ஒற்றை நாடாக இந்தியா இயங்கவே முடியாது என்று வெளிப்படையாகவே பல நாடுகள் எண்ணின, இங்கிலாந்து உட்பட . பல சிக்கல்கள் ,சவால்கள் இருந்தாலும் சுதந்திரம் கிடைத்து ஐம்பது ஆண்டுகளுக்கு மேலாக ‘வேற்றுமையில் ஒற்றுமை’ என்ற தாரக மந்திரத்தை பின்பற்றியே இந்தியர்கள் கூடி வாழ்ந்து வருகின்றனர் , இதையே நாட்டின் முன்னோடிகளும் கனவு கண்டனர், அதையே அரசியல் சாசனமாகவும் வடித்துவைத்தனர் .

பிரிட்டிஷ் ஆட்சியில் இருந்து விடுபட்ட போது பாகிஸ்தான் மதவாத அரசியலை முன்னெடுத்தது. இந்தியா மதச்சார்பற்ற அணுகுமுறையை தேர்ந்தெடுத்தது. அந்த முடிவின் கொடும் பாதிப்புகளை பாகிஸ்தான் இன்றும் அனுபவித்து வருகிறது. இராணுவத் தலையீடு, வளர்ச்சியின்மை, நிலையற்ற அரசு, தீவிரவாத ஊடுருவல், பெண் அடிமைத்தனம் , கல்வியின்மை என்று பல விதங்களில் இந்தியாவை விட 30 / 40 வருடங்கள் பின் தங்கி விட்டிருக்கிறது. இந்த விளைவுகளையெல்லாம் கண்ணாரக் கண்ட பின்னும் இந்தியா அதே வழியில் தானும் செல்லத்துடிப்பது வருத்தமளிக்கிறது.

இதை நிராகரித்து எல்லோருக்குமான ஒரு சமூகமாக இந்தியா அமைவதே பெரும்பான்மையினர் உட்பட எல்லோருக்கும் நன்மை பயப்பதாக இருக்கும். ஆஸி போன்ற ஒரு பன்முகக் கலாசார நாட்டில் வாழ்ந்துகொண்டு, இங்குள்ள அரசும், சமூகமும் பல்லின கலாசாரத்துக்கு அளிக்கும் சுதந்திரத்தையும், வசதிகளையும் பெற்றுக்கொண்டு இந்தியாவில் அதற்கு நேர்மாறான அணுகுமுறையை ஆதரிப்பதென்பதுதான் வெளிநாடு வாழ் இந்தியர்களில் காணும் மிகப்பெரிய முரண் .

அடுத்த முறை ஆஸி வரும் பிரதமர் யாராக இருந்தாலும் அவர் அனைவருக்குமான பிரதமராக, இந்திய ஜனநாயக மாண்பையும் மதச்சார்பின்மையை பேணும் ஒருவராக இருக்க வேண்டும் என்பதே என் அவா .இவைகளை ஒரு சமூகமாக நாம் கைவிட்டால் நம் முன்னோடிகள் கண்ட இந்தியா என்ற கனவையே நாம் கைவிடுவதாகத்தான் அது அமையும்,

# Sai Shree Foods Pty. Ltd.

## AUSTRALIA - CANADA - INDIA

## REMARKABLE QUALITY AND RELISHING TASTE.




If you're after the authentic taste of Indian style foods look no further, Sai Shree Foods is the manufacturer of quality Indian Yoghurt, Idli & Dosa mix, Paneer, Shrikhand Kesar Elaichi, Mango Lassi, Punjabi Lassi and much much more. Sai Shree Foods produce a Quality Australian Products in Melbourne facility.

We are also distributing Grand snacks/pickles and Mambalam Iyers pickles (Famous South Indian brand)

**HEAD OFFICE:** Sai Shree Foods Pty. Ltd.
Ph: 03 9706 6211
Unit 17/69-77, Mark Anthony Drive, Dandenong - VIC 3175

**DISTRIBUTORS:** Sai Shree International Pty Ltd
Sydney & Canberra - Mr Bhaskar - 0421 835 554
Products Available - Adelaide, Perth, Brisbane & Darwin

எதிரொலி ஆஸ்திரேலியா ETHIROLI

குரல்:06 அதிர்வு: 72 ஆனி 2023 தொ.பே:1800 960 162

# காலத்தால் கைவிடப்பட்டவர்கள்

ஒரு சமூகம் தன்னைத் தனியானதொரு இனமாக அங்கீகரித்துக்கொள்வதற்கு ஏதுவான சூழ்நிலைகளை உருவாக்கி, தனது இருப்பை நிலையாக நிலை நிறுத்திக்கொள்வதற்கு 50 ஆண்டுகள் போதும் என்கின்றனர் நிபுணர்கள். ஆனால் 200 ஆண்டுகள் கடந்தும் தனது இருப்பைத் தக்கவைத்துக்கொள்ள முடியாமல் – தனியானதொரு இனமாக அங்கீகரிக்கப்படாமல் அற்ப விடயங்களைக்கூட போராடியே பெற வேண்டிய நிலையில் மலையகத் தமிழர்கள் வாழ்ந்துகொண்டிருக்கின்றனர்.

இலங்கை தீவில் சுமார் 15 லட்சத்துக்கு மேற்பட்ட மலையகத் தமிழர்கள் வாழ்ந்தாலும், மலையகப் பெருந்தோட்டத் தொழிலாளர்களை மையப்படுத்தியதாகவே மலையகத் தமிழர்களின் இருப்பு தங்கியுள்ளது. ஆனால் பெருந்தோட்ட மக்களே இன்னமும் நவீன அடிமைகளாகவே நடத்தப்படுகின்றனர் என்பதே கசப்பான உண்மையாகும்.

தமது பாட்டன், பூட்டன் இரத்தம், வியர்வை சிந்தி உழைத்து, காடாகக் காட்சிதந்த மண்ணை வளமாக்கியதுடன், தமது உடலைக்கூட மணக்குக்கு உரமாக்கியிருந்தால்கூட இன்றைய தலைமைறையும் வீடற்றவர்களாக, முகவரியற்றவர்களாக சொந்த மண்ணிலேயே அகதிகள்போல் வாழ்ந்துவருவது அடக்குமுறையின் உச்சகட்டமாகும்.

தமக்கான மலசலகூடத்தை அமைப்பதற்குகூட தோட்ட நிர்வாகத்திடம் அனுமதிகேட்டு கைகட்டி நிற்கவேண்டிய நிலை தொடரும் நிலையில், உரிமைகளுக்காக போராட வேண்டியதை விடுத்து, 'மலையகம் – 200' எனும் தொனிப்பொருளின் கீழ் கொண்டாட்டங்களில் ஈடுபடுவதானது அடிமைத்தனத்துக்கு மக்கள் அங்கீகாரம் வழங்குவதுபோலவே அமைந்துள்ளது.

மலையக மக்களின் நிலையை காட்சிப்பொருளாகப் பயன்படுத்தி வயிற்றுப்பிழைப்பு நடத்தும் ஒரு சில அரச சார்பற்ற நிறுவனங்கள், தமது வயிற்றை நிரப்பிக்கொள்வதற்காக மக்கள் திண்டாடும் நிலையிலும், கொண்டாட்டங்களில் ஈடுபடுவது வேதனைக்குரிய விடயமாகும். ஆக இனியாவது மக்கள் பக்கம் நின்று செயற்பட வேண்டும் என்ற வலியுறுத்தையும் விடுக்கின்றோம்.

மலையக மக்கள் இலங்கையின் பொருளாதாரத்துக்கு வழங்கிய பங்களிப்பைக் கருத்திற்கொண்டு அவர்களைக் கௌரவிப்பதற்கு இலங்கை அமைச்சரவை அனுமதி வழங்கியுள்ளது. எது கௌரவம்?

மலையகத் தமிழர்களின் குடியுரிமை, வாக்குரிமை என்பன 1948 இல் பறிக்கப்பட்டன. பின்னர் குடியுரிமை வழங்கப்பட்டாலும் சட்டரீதியாக கிடைக்க வேண்டிய சலுகைகளுக்கு உரிய நேரத்தில் கிடைக்கவில்லை. இலவசக்கல்வி, இலவச மருத்தும் என்பன தாமதித்தே கிடைத்தன.

பெருந்தோட்டப்பகுதிகளில் இருந்து நகர்ப்பகுதிகளுக்கு வெளியேறியவர்கள் இன்று கௌரவமாக வாழ்ந்தாலும் பெருந்தோட்டப்பகுதிகளில் உள்ள மக்களுக்கு காணி உரிமையோ, முகவரியோ இல்லை. எனவே, அம்மக்களை கௌரவிப்பதாக இருந்தால் முதலில் காணி உரிமையை கொடுங்கள். நிரந்தர முகவரியை வழங்குவதற்கு வழிசெய்யுங்கள். லயன் யுகத்துக்கு முடிவு கட்டுங்கள். அதுவே உண்மையான – ஏற்றுக் கொள்ளக்கூடிய கௌரவமாக அமையும். அதேபோல பெருந்தோட்டங்களை தோட்டத் தொழிலாளர்களுக்கே பகிர்ந்தளித்து அவர்களை சிறுதோட்ட உரிமையாளர்களாக்குங்கள். இவ்வாறு செய்தால் மலையகம் – 200 மகத்தான நிகழ்வாக மாறும்.

இதற்கான வலியுறுத்தல்களை – அழுத்தங்களையே அரசியல் கட்சிகளும், சிவில் அமைப்புகளும், அரச சார்பற்ற நிறுவனங்களும் வழங்க வேண்டும். அதுவே காலத்தின் தேவை. மாறாக கொண்டாட்டங்களின் பங்காளியாகுவதால் மக்களின் திண்டாட்ட நிலை மாறப்போவதில்லை. அவ்வாறான நிகழ்வுகள் மாற்றத்துக்கு வழிவகுக்கபோவதும் இல்லை.

தமிழர்களின் ஆயுதப்போராட்டம் மௌனிக்கப்பட்ட பின்னர் வடக்கு, கிழக்கில்கூட ஜெனிவாத் தொடர் வரும்போது போராட்டங்கள் நடத்தப்படும். அதன்பின்னர் கோரிக்கைகள் கிடப்பில் போடப்படும். நினைவேந்தல்கள் நடத்தப்படும். அவை அனைத்தும் வெறும் நிகழ்வுகளாகவே நடந்து முடிகின்றன. மலையகம் 200 நிகழ்வுகளும் இப்படிதான் அமையப் போகின்றன. ஆகவே மலையகத்தில் மறுமலர்ச்சியைஏற்படுத்துவதற்காக 'மலையகம் – 200' எனும் தொனிப்பொருளை ஜனநாயக ஆயுதமாக மக்கள் பயன்படுத்திக்கொள்ள வேண்டும்.

# மோடியின் வருகையும் பெருப்பிக்கப்பட்ட விம்பமும்!

மாமன்னன்

இதற்கு முன் அத்தனை இந்தியர்கள் ஆஸ்திரேலியாவில் ஒன்று கூடி இருக்கிறார்களா என்றால் நிச்சயமாக இல்லை. 23 மே அன்று சிட்னியே விழாக் கோலம் பூண்டது. ஆஸ்திரேலியாவின் பல்வேறு இடங்களில் இருந்தும் இந்தியர்கள் குவிந்தார்கள். எல்லாமே ஒருவருக்காக. நரேந்திர தாமோதரதாஸ் மோடி. யார் வேண்டுமானாலும் அவரை ஆதரிக்கலாம், வெறுக்கலாம் அல்லது பெரிய கருத்து எதுவும் இல்லாமல் கூட இருக்கலாம். ஆனால் இந்நிகழ்ச்சியை அடுத்து அனைவருக்கும் ஒரே ஒரு உணர்வு மட்டும் ஒன்றாக இருந்து. ஆச்சர்யம். வேறு எதற்குமே இந்த அளவிற்கு கூடாத மக்கள் கூட்டம் மோடி என்ற ஒற்றை மனிதருக்காக கூடியதா ?என்பது தான் நாம் எழுப்பும் கேள்வி.

18500 பேர் அமரக்கூடிய சிட்னி ஒலிம்பிக் பார்க்கில் உள்ள குடோஸ் அரினாவில் நிகழ்ச்சி ஏற்பாடு செய்யப் பட்டிருந்தது. இந்நிகழ்ச்சியை யார் ஏற்பாடு செய்திருக் கிறார்கள் என்று தேடியபோது, Indian Australian Diaspora Foundation (IADF) என்ற அமைப்பு ஏற்பாடு செய்திருப்பது தெரிந்தது. அதுவரை கேள்விப்படாத ஒரு அமைப்பாக இருக்கிறதே என்று அதன் வலைத்தளத்திற்கு சென்று பார்த்தால், அந்த அமைப்பு மிகச் சமீபத்தில் தான் துவங்கப்பட்டது என்று தெரிந்தது. இந்த நிகழ்ச்சியை தவிர அதன் வலைத்தளத்தில் வேறு எதுவும் இல்லை. அதில் ஒன்றைக் குறிப்பிட்டு இருக்கிறார்கள். 'இந்நிகழ்ச்சிக்கான செலவுகள் பொது மக்களின் நன்கொடை மூலம் செலுத்தப்படும்'. உண்மையில் இந்தியர்கள் இந்த நிகழ்ச்சிக்காக நன்கொடை வழங்கினார்களா என்று விசாரித்ததில், நிகழ்ச்சிக்கான டிக்கெட்களை கூட காசு கொடுத்து வாங்கவில்லை.

அந்த அமைப்பின் இயக்குநர்கள் 5 பேர். அதில் ஒருவர் அமித் ஷாவின் மகன் ஜெய் ஷாவும் ஒருவர். இப்போது தெரிந்திருக்கும் இந்நிகழ்ச்சிக்கான பணம் எங்கிருந்து வந்திருக்கும் என்று. இந்நிகழ்ச்சிக்கான வரவேற்பு பங்காளர்கள் என்று 367 அமைப்புகள் குறிப்பிடப்பட்டுள்ளன! அனைத்தும் ஆஸ்திரேலியாவில் இயங்கக் கூடியவை. நிகழ்ச்சிக்கான டிக்கெட்களின் அறிவிப்பு வந்தவுடன், இந்த அமைப்புகள் அனைத்தும் சொல்லி வைத்தாற்போல் அனைத்து டிக்கெட்களையும் முன் பதிவு செய்திருக்கிறன்றன. சாதாரண மக்கள் டிக்கெட் வாங்க வழியில்லாமல் இருந்த பொழுது, கூடுதல் டிக்கெட்கள் விநியோகிக்கப்படும் என்று தெரிவித்தார்கள். அதாவது கூட்டம் நிரம்பி வழியும் பிம்பத்தை ஏற்படுத்த.

இவ்வளவு இருந்தும், மோடி வந்த போது 'மோடி மோடி' என்ற கோஷம் விண்ணைப் பிளக்கத்தான் செய்தது. 9 ஆண்டுகள் கழித்து ஆஸ்திரேலியா வந்திருக்கும் தங்கள் தாய்நாட்டு பிரதமர் என்ன சொல்ல போகிறார் என்று கேட்க காத்திருந்த மக்களில் பாதி பேருக்கும் மேல் ஏமாற்றமே எஞ்சியது. மோடி பேசிய பேச்சு 85% - 90% ஹிந்தியில் இருந்தது. ஹிந்தி பேசாத மற்ற மாநில மக்களுக்கு மட்டுமில்லை, உடனிருந்த ஆஸ்திரேலியப் பிரதமர் அல்பனீஸ் கூட புரியாமலே சிரித்து கொண்டிருந்தார். தென்னிந்தியாவில் முற்றிலுமாக ஆட்சியை இழந்ததாலோ என்னவோ, அவர் பேச்சு ஹிந்தி பேசும் மக்களுக்காகவே இருந்தது. இந்தியர்களுக்கு தான் அப்படி தெரிகிறது என்று எண்ணி இருந்த வேளையில், ஆஸ்திரேலியாவின் பிரபல நாளிதழான Sydney Morning Herlad உம் அதையே தான் எழுதி இருந்தார்கள்.

'இந்திய பிரதமர் மோடியை அல்பானீஸ் 'The Boss" என்கிறார். அதுவே மோடி அல்பானீஸை பாஸ் என்று குறிப்பிட முடியுமா?' என்று கேள்வி எழுப்பி இருக்கிறது. மேலும் 'ஆஸ்திரேலியன் labour கட்சியின் அரசியல் பிரசாரத்தை இந்தியாவில் நடத்தினால் எவ்வளவு விந்தையாக இருக்குமோ அது போல இந்தியாவில் வரவிருக்கும் நாடாளுமன்ற தேர்தலுக்கான பிரசாரம் தான் இந்த நிகழ்வு' என்று குறிப்பிடுகிறது. சமீபத்திய கர்நாடகத் தேர்தலில் தோல்வியை சந்தித்த பிஜேபி, வரவிருக்கும் 5 மாநிலத் தேர்தல்கள் ,அதனையடுத்து நாடாளுமன்றத் தேர்தல் என்பவற்றுக்கான பிரசாரத்தை ஆஸ்திரேலியாவில் இருந்தே துவங்கி இருக்கிறது.

சரவெடியாய் இந்நிகழ்வு நடக்க, மற்றொரு பக்கம் சலசலப்பே இல்லாமல் ஒரு அணுகுண்டை வெடிக்க செய்திருக்கிறார்கள் சிலர்.

மோடியின் ஆஸ்திரேலியா வருகையை ஒட்டி, குஜராத் இனப்படுகொலை குறித்து பிபிசி எடுத்த ஆவண படம் ஆஸ்திரேலிய நாடாளுமன்றத்தில் திரையிடப்பட்டிருக்கிறது. இதை ஏற்பாடு செய்திருப்பவர்கள் We The Diaspora. IDAF போல இதிலும் சில அமைப்புகளாக கூடி பங்கெடுத்திருக்கிறார்கள். Periyar Ambedkar Thoughts Circle-Australia (PATC-A), Amnesty India, Center for Culture-Centered Approach to Research and Evaluation (CARE), Hindus for Human Rights (Australia and New Zealand) மற்றும் The Humanism Project சேர்ந்து இதை நிகழ்த்தி இருக்கிறார்கள். இந்நிகழ்வில் ஆஸ்திரேலியா செனட்டர்கள் David Shoebridge> Jordan Steele John பங்கேற்று உரையாற்றினார்கள். இவர்களுடன் ஆகாஷி பாட், மோகன் தத்தா, ஆகார் படேல், கல்பனா வில்சன் பங்கேற்றார்கள்.

இந்நிகழ்ச்சி 24 மே மாலை 5.30 மணிக்கு துவங்கியது. முகவுரை பேச வேண்டிய செனட்டர் David Shoebridge பணி நிமித்தமாக நிகழ்ச்சிக்கு வர தாமதமாக, முதலில் ஆவணப்படம் திரையிடப்பட்டது. 2 மணி நேரம் ஓடக்கூடிய படம் 40 நிமிடங்களுக்கு தொகுக்கப்பட்டு திரையிடப் பட்டது. பின்பு பேசிய டேவிட் தாமதமாக வந்தமைக்கு மன்னிப்புடன் உரையை துவங்கினார். 'இந்த படத்தை நான் பல தடவை பார்த்திருக்கிறேன். இந்தியாவில் உண்மையைப் பேசுவது கூட பெரும் குற்றமாகும்' என துவங்கினார். ஒரு சில நிமிடங்களில் தன் முகப்புரையை முடித்து கொண்டார்.

பின்பு ஆகாஷி பாட் பேசினார். யார் இந்த ஆகாஷி பாட். சஞ்சீவ் பாட் என்று சொன்னால் சிலருக்கு தெரிந்திருக்கும் வாய்ப்பிருக்கிறது. அவரையும் தெரியாதவர்களுக்கு, ஆகாஷி பாட் அவர் யார் என்பதை ஒற்றை வரியில் விளக்குகிறார். 'குஜராத்தில் நடந்த இனப்படுகொலைக்கு மோடி அரசு எப்படி ஆதரவாக இருந்தது என்பதற்கு ஒரே வாழும் சாட்சி என் அப்பா சஞ்சீவ் பாட் தான்' என்றார். அந்த இனப்படுகொலையின் போது என்ன நடந்தது, அதன் பின் நேர்மையாக நடந்து கொண்ட தன் தந்தைக்கு என்ன ஆனது என்பதை மிக விரிவாக விளக்கினார். பொலிஸில் உயர் அதிகாரியாக இருந்த சஞ்சீவ் பாட், 'ஹிந்துக்கள்


(07ஆம் பக்கம் பார்க்க)

## வாசகர் களம்

எரொலியில் பிரசுரிக்கப்படும் ஆக்கங்கள் குறித்து வாசகர்களின் கருத்துகள் எதிர்பார்க்கப்படுகின்றன. காத்திரமான கருத்துக்கள் பிரசுரிக்கப்படும். அதுமட்டுமின்றி எதிரொலி பேசாத சமூக கருத்துகளையும் எழுதி அனுப்புங்கள்.

நன்றி

**ஆசிரியர்பீடம், எதிரொலி**



editor@ethiroli.com
PO Box 6313, Dandenong
Victoria 3175

# வாய்மையே வெல்லும் (சில நேரங்களில் மட்டும்)




ஆனந்தன் வசந்தா கிருஷ்ணமூர்த்தி

**“ஒரு பொய்யை மறைக்க**
**உண்மை போல் ஆடை அணிந்த**
**இன்னும் கொஞ்சம் பொய்கள் தேவை**
**ஒரு பொய்யை மறைக்க**
**நம்மைச் சுற்றிலும்**
**நம் பொய்யைக் கொண்டாடும்**
**அபிமானிகளும் ஏமாளிகளும் வேண்டும்”.**

“சட்டங்கள் தடுமாறலாம், இறுதியில் நீதியே வெல்லும் “ என்று ப. சிதம்பரம், ராகுல் காந்திக்கு எதிரான அவதூறு வழக்கில் இரண்டு ஆண்டுகள் சிறைத்தண்டனை விதிக்கப்பட்ட பொழுது எழுதிய கட்டுரையில் இந்திய அரசாங்கத்தைக் கடுமையாகச் சாடினார். இந்தியாவில் யாராவது ஒரு பிரபலத்திற்கு எதிராக அவதூறு வழக்கு தொடுப்பதும் மற்றும் அரசியல்வாதிகள் தங்களைப் பற்றித் தரக்குறைவாக எழுதியது மற்றும் தங்கள் (இல்லாத) பெருமைக்குக் களங்கம் விளைவித்தற்கு எதிராக மான(?) நஷ்ட வழக்குத் தொடுப்பதும் அன்றாடச் செய்திகள். இந்தப் பெரும்பாலான வழக்குகள் முதல் இரண்டு வாரங்களில் பரபரப்பாக பேசப்படும்.பின் இந்திய நீதித்துறையின் வழக்கமான பாணியில் மூன்று மாதங்களுக்கு பிறகு ஒத்திவைக்கப்படும். (வழக்குத் தொடுத்தவரே மறந்து போவதற்கு வாய்ப்பளிக்கும் முறை). மக்களும், ஊடகங்களும் அடுத்த அவதூறு வழக்கிற்கு சென்றுவிடுவர். ஆனால் சமீபத்தில் ஆஸ்திரேலியாவில் மிகுந்த பரபரப்பை ஏற்படுத்திய விவகாரம் (ஏறக்குறைய எல்லா ஊடகங்களின் தலைப்பு செய்தி) முன்னாள் விமானப்படை வீரர் பென் ராபர்ட் - ஸ்மித் தனக்கு எதிராக அவதூறு செய்திகளை பரப்பியதற்காக ’9 நியூஸ்’ மற்றும் செய்தி ஊடகங்களின் மேல் தொடுத்த வழக்குத்தான். இறுதியில் நீதி வென்றிருக்கிறது. நம்புங்கள் வாய்மையே வெல்லும். ( சில சமயங்களில் ).

இந்த வழக்குக்குச் செல்வதற்கு முன் , பென் ராபர்ட் - ஸ்மித் ,படைத்தரப்பில் பணியாற்றியபோது இழைத்த குற்றங்களையும் ,பின்னர் ஊடக உலகில் அதிரடியாகக் கிடைத்த பிரபலத்தையும், சர்ச்சைகளையும் பற்றி கொஞ்சம் பார்க்கலாம்.

1978 ஆம் ஆண்டு பெர்த் மாநகரில் பிறந்த பென், பள்ளிப் படிப்பை முடித்தவுடன் தனது 18 ஆவது வயதில் இராணுவத்தில் சேர்கிறார். அதன் பிறகு 2003 ஆம் ஆண்டு வரை ரோயல் ஆஸ்திரேலியன் ரெஜிமெண்டின் 3 ஆவது பட்டாலியனில் பணிபுரிகிறார். பிறகு 2003 ஆம் ஆண்டிலிருந்து 2013 ஆம் ஆண்டு வரை ஆஸ்திரேலியாவின் சிறப்பு விமானப் படையில் ( Special Air Service - SAS) சேவை செய்து, Corporal ஆக பதவி உயர்வு பெற்று ஓய்வு பெறுகிறார். இந்த இராணுவ சேவைக் காலகட்டத்தில் கிழக்கு திமோர் , ஈராக் மற்றும் ஆப்கானிஸ்தான் யுத்தங்களில் ஆற்றிய சேவைகளுக்காக Victoria Cross for Australia, Medal for Gallantry மற்றும் Commendation for Distinguished Service விருதுகளை பெற்று சாதனை மனிதனாகிறார். ஓய்வு பெற்ற பிறகு குயின்ஸ்லாந்து பல்கலைக்கழகத்தில் வணிகவியல் மேற்படிப்பை முடிக்கிறார். பிறகு செவன் குயின்ஸ்லாந்து ஊடக நிறுவனத்தில் வட்டார உதவி மேலாளராக சேர்ந்து பணியாற்றிய குறுகிய காலத்தில் பொது மேலாளராக ப்ரிஸ்பேன் பதவி உயர்வு கிடைக்கிறது.





இந்நிலையில் 2017 ஆம் ஆண்டு இடித்துரைப்பாளரான David McBride ஆப்கானிஸ்தானில் ஆஸ்திரேலிய இராணுவத்தினர் போர்க்குற்றங்கள் புரிந்ததற்கான ஆதாரங்களை வெளியிடுகிறார். இதைத் தொடர்ந்து ஏற்பட்ட சர்ச்சைகளால் போர்க்குற்றங்களை விசாரிக்க சுயாதீன அமைப்பை அரசாங்கம் நியமிக்கிறது. இந்த அமைப்பு பல்வேறு விசாரணைகளின் முடிவில் 39 க்கும் மேற்பட்ட கொலைகள் நடந்திருக்கலாம் என்றும் குறிப்பாக சிறப்பு விமானப் படையினர் பெரும்பாலான குற்றங்களை இழைத்திருக்கின்றனர் என்றும் அறிக்கை சமர்ப்பிக்கிறது. இதை தொடர்ந்து 2018 நவம்பர் மாதம் ஆஸ்திரேலிய பெடரல் காவல்துறை ராபர்ட்ஸ்-ஸ்மித் மீது ஆப்கானிஸ்தானில் போர்க் குற்றங்களைச் செய்ததாகக் கூறப்படும் குற்றச்சாட்டுகள் குறித்து விசாரணையைத் தொடங்கியது.

இதன் பொருட்டு அதிருப்தி அடைந்த ராபர்ட்ஸ்-ஸ்மித், செவன் நெட்வொர்க் உரிமையாளர் கெர்ரி ஸ்டோக்ஸால் நியமிக்கப்பட்ட ஒரு சட்டக் குழுவின் உதவியுடன் ஓகஸ்ட் 2018 இல் நைன் என்டர்டெயின்மென்ட் வெளியீடுகளான தி ஏஜ், தி சிட்னி மார்னிங் ஹெரால்ட் மற்றும் தி கான்பெரா டைம்ஸுக்கு எதிராக அவதூறு வழக்கைத் தொடங்கினார். சிட்னியில் உள்ள பெடரல் நீதிமன்றத்தில் ஜூன் 2021 இல் இந்த வழக்குக்கான சிவில் விசாரணை தொடங்கியது. இதனைத் தொடர்ந்து கடந்த இரண்டு வருடங்களாக வழக்குத் தொடர்ந்து விவாதம் நடைபெற்றது. இறுதியாக இந்த ஜூன் 2023 மாதத்தில் நீதிபதி அந்தோனி பெசன்கோ , மூன்று இதழ்களுக்கு எதிரான ராபர்ட்ஸ்-ஸ்மித்தின் அவதூறு வழக்கை தள்ளுபடி செய்தார். மேலும் சமர்ப்பிக்கப்பட்ட ஆதாரங்களின் சாத்தியக்கூறுகளின் சமநிலையின் அடிப்படையில், ராபர்ட்ஸ்-ஸ்மித் மூன்று ஆப்கானிய ஆண்களை கொலை செய்தது மற்றும் இராணுவ ஈடுபாட்டின் விதிகளை கிரிமினல் முறையில் மீறியது நிரூபிக்கப்பட்டுள்ளது என்றும் தீர்ப்பளித்தார். அவர் மேல் நிரூபிக்கப்பட்ட குற்றங்களாவன:

1. செப்டம்பர் 11, 2012 அன்று தர்வானில் உள்ள ஒரு சிறிய பாறையில் இருந்து அலி ஜான் என்ற நிராயுதபாணியான மற்றும் கைவிலங்கிடப்பட்ட ஆப்கானிய கிராமவாசியை உதைத்ததோடு மட்டுமல்லாமல் அவரைச் சுடுவதற்குத் தன் தலைமையிலுள்ள படைவீரர்களுக்கு ஆணையிட்டது.

2. 2009 ஆம் ஆண்டு ஈஸ்டர் ஞாயிறன்று ரோந்துப் பணியின் போது இரண்டு ஆப்கானிய ஆண்களை விஸ்கி-108 என்று பெயரிடப்பட்ட சுரங்கப்பாதையில் சுட்டு கொன்றது.

3. 2012 ஆம் ஆண்டில் நிராயுதபாணியான ஆப்கானிய நபரை ஆப்கான் கூட்டுப்படையின் உறுப்பினரால் சுடுவதற்கு ஒரு மொழிபெயர்ப்பாளர் மூலம் உத்தரவு வழங்கியது.

இந்த வழக்கின் தீர்ப்பினை தொடர்ந்து பென் தனது பதவியை ராஜினாமா செய்தார்.

ஊடக வெளிச்சம் மூலம் புகழின் உச்சிக்கு சென்ற பென் ராபர்ட்-ஸ்மித்தின் சாம்ராஜ்யம் கடைந்தெடுத்த பொய்களாலும், கொலைக் குற்றங்களாலும் நிரம்பியது.எவ்வளவு தான் பொய்களை உங்கள் புகழ், பணம், அதிகாரத்தால் மறைக்க முயன்றாலும், சத்தியம் வெல்லும்.-சச்சிதானந்தன் சுகிர்தராஜா எழுதிய, புகழ்பெற்ற கோல்ப் விளையாட்டுக்காரர் டைகர் வூட்ஸ் பற்றிய கட்டுரையில் “கத்தியை எடுத்தவன் கத்தியால் மரிப்பான். கத்திக்கு பதிலாக ஊடகம் என்று போட்டுக்கொள்ளுங்கள்” என்று முடித்திருப்பார். இங்கே ஊடகத்தின் மூலம் உச்சாணிக்கு சென்ற பென் அதே ஊடகங்கள் மூலம் தன் குட்டுகள் வெளிப்பட்டு நடுத்தெருவுக்கு தள்ளப்பட்டிருக்கிறார். இந்தப் புகழ்பெற்ற தீர்ப்பை படிக்கும் போது,” பல லட்சக்கணக்கான மக்களைக் கொன்றொழித்து, கொண்டாடி, பதக்கங்களை நெஞ்சில் சுமந்து ஆட்சி அரசாணையில் ஏறிய பொல்லாக் கொடியவர்களின் குற்றங்கள் யாவும் நமது நெஞ்சில் நெருஞ்சி முள்ளாய் வதைக்கின்றன. இறுதியில் சத்தியம் வெல்லும் என்பது சில நேரங்களில் மட்டுமல்ல சில நாடுகளில் மட்டுமே என்பதும் நிதர்சனமான உண்மையே.

# மோடியின் வருகையும் பெருப்பிக்கப்பட்ட விம்பமும்!

(06ஆம் பக்கத் தொடர்ச்சி)

இஸ்லாமியர்கள் மேல் உள்ள ஆத்திரத்தை தீர்த்துக்கொள்ளட்டும் ‘ என்று தெரிவித்ததை சாட்சியமாக அளித்தார். அதனால் அவர் பதவி பிடுங்கப்பட்டு, தூங்கி கொண்டிருக்கும் போது வீடு இடிக்கப்பட்டு, 30 ஆண்டுகளுக்கு முன்னர் நடந்த ஒரு சம்பவத்தில் சிக்கவைக்கப்பட்டு, இப்போது சிறையில் இருக்கிறார்.

மோகன் தத்தா மற்றும் ஆகார் படேலின் உரைகளைத் தொடர்ந்து குழு விவாதம் துவங்கப்பட்டது. இதில் David Shoebridge, Jordan Steele John, ஆகாஷி பாட், கல்பனா வில்சன் மற்றும் பெரியார் அம்பேத்கர் சிந்தனை வட்டத்தில் இருந்து கலந்து கொண்டனர். David Shoebridge பேசிய பொழுது, ‘இந்தியாவுடன் நட்புணர்வுடன் இருக்கும் அதே நேரத்தில் இந்தியாவில் சிறுபான்மையினர் மேல் நடத்தப்படும் வன்முறைகளையும் இடித்துரைக்க வேண்டும்’ என்றார். ‘இதற்கு முன் சீனாவுடன் நட்புறவோடு இருந்த போதும் இது தான் நிகழ்ந்தது. சீனா செய்த மனித உரிமை மீறல்களை தட்டி கேட்கத் தவறினோம். இப்போதும் அதே தவறை செய்கிறோம்.’ என்றார்.

Jordan Steele John பேசிய போது ‘ஆஸ்திரேலியப் பிரதமர் இந்தியப் பிரதமரை சந்தித்த பொழுது இந்தியாவின் மனித உரிமை மீறல்களை பற்றி எந்த வித பேச்சு வார்த்தையையும் நிகழ்த்தாதது பெரும் ஏமாற்றத்தை அளிக்கிறது. வெளியுறவுத்துறை அமைச்சரும் இது குறித்து மௌனம் காப்பது கோபத்தை வரவழைக்கிறது’ என்றார். ஆகாஷி பாட் ‘ இந்தியாவுடன் நட்புறவில் இருக்கும் நாடாகிய ஆஸ்திரேலியா போன்ற நாடுகள் இதை இடித்துரைக்க வேண்டும்’ என்று வேண்டுதல் விடுத்தார். South Asian Solidarity Group சார்பாக பேசிய கல்பனா வில்சன் ‘உலகில் பல்வேறு நாடுகளிலும் இன்று தீவிர வலதுசாரி அரசுகள் ஆட்சியில் இருக்கிறார்கள். மோடி அவர்களில் முன்னோடியாய் இருக்கிறார். அதானிக்கும் அம்பானிக்கும் வேலை செய்கிறார்’ என்பதை குறிப்பிட்டார். பெரியார் அம்பேத்கர் சிந்தனை வட்டம் , இந்தியாவில் மற்ற சிறுபான்மையினர் இருக்கும் போதிலும் இஸ்லாமியர்கள் மட்டுமே அதிகம் வன்முறைக்கு ஆளாக்கப்படுவதில் சாதியம் எப்படி பங்கு வகிக்கிறது என்பதை குறித்து பேசினார்கள்.

ஆரவாரம் மிகுந்த சிட்னி நிகழ்ச்சியை விட, அமைதியாய் நிகழ்ந்த ஆஸ்திரேலிய நாடாளுமன்ற நிகழ்ச்சி உலகெங்கிலும் விவாதத்தை கிளப்பி இருக்கிறது என்பது மட்டும் கண்கூடு.

இவையெல்லாம் ஒருபுறம் இருக்க, மோடி மற்றும் அல்பனீஸ் கொடுத்த ‘கூட்டு’ பத்திரிகையாளர் சந்திப்பில், வழக்கம் போல், மோடியிடம் எந்த ஒரு கேள்வியையும் கேட்க அனுமதி இல்லை. சீனாவுடனான விரிசலின் காரணமாக இந்தியாவின் நட்பு இப்போது மிக அவசிய தேவையாய் இருக்கிறது ஆஸ்திரேலியாவிற்கு. அதற்காக தங்கள் நாட்டு சிறுபான்மையினர் மேல் நிகழ்த்தப்படும் வன்முறையைக் கடந்து செல்வதை ஆஸ்திரேலியா மக்களே விரும்பமாட்டார்கள் என்பதே நிதர்சனம்.

இனி வரும் காலங்களிலாவது ஆஸ்திரேலியா அரசு இந்தியாவின் சிறுபான்மையினர் மற்றும் இந்திய அரசால் ஒடுக்கப்பட்டவர்கள் பக்கம் நின்று கேள்வி எழுப்புமா என்பதற்கு காலம் தான் பதில் சொல்லும்.

எதிரொலி
ஆஸ்திரேலியா ETHIROLI
ஆனி 2023



# சீமானின் கறிவேப்பிலை

● தாயகத்திலிருந்து வேல்நம்பி

இலங்கைத் தீவில் தமிழர் இனவிடுதலையின் முதல் திறவுகோல் புலம்பெயர்தளம் என்றால் இரண்டாவது திறவுகோல் தமிழகம் ஆகும். ஈழத்தின் விடுதலையானது இந்த முக்கோண வலையமைப்பின் உறுதியான செயற்பாடுகளின் விளைவாகவே சாத்தியப்படக்கூடியது. அரசியல், மொழி, பண்பாடு, நம்பிக்கைகள் என அனைத்து விடயங்களிலும் ஒத்துப்போகும் இம்மூன்று பிராந்தியத்துத் தமிழர்களும் சதாகாலமும் தொடர்பில் இருப்பவர்கள். அனைத்துத் தளங்களிலும் கொடுக்கல் வாங்கல்களில் ஈடுபட்டுக்கொண்டிருப்பவர்கள். ஆனால் அண்மைய காலமாக இந்த உறவில் விரிசல் விழுந்திருக்கிறது. ஈழ நிலத்தின் விடுதலைசார்ந்த அரசியலிலிருந்து தமிழகம் தன்னை தூர விலக்கிச் சென்றுவிட்ட நிலைமைகளை அவதானிக்க முடிகிறது.

தமிழீழ விடுதலைப் புலிகள் உயிர்ப்புடன் தாயகத்தில் இருந்த காலத்தில் தமிழகத்துக்கும், ஈழத்துக்குமான உறவு மிக நெருக்கமானது. பொருளாதார ரீதியிலும், அரசியல் ரீதியிலும், ஈழ நிலத்தை தமிழகம் தாங்கி வைத்திருந்தது. ஈழத்தில் இலங்கை அரச படைகளால் கொத்துக்கொத்தாகத் தமிழர்கள் கொன்றொழிக்கப்பட்டபோதெல்லாம், தமிழகம் திரண்டெழுந்து, சர்வதேச சமூகத்திடம் நீதி கேட்டது. தாயகத்தில் இடம்பெறும் இனப்படுகொலையை பரப்புரைப்படுத்தியது. இன உணர்வின் மேலீட்டினால் பல இளைஞர்கள் தம் உடல்கருகித் தியாகித்தனர். எதைச் செய்தாவது ஈழத்தில் நடக்கும் அநீதிகளின் பக்கம் பார்வையைத் திருப்பப் போராடினர். 2009 ஆம் ஆண்டு வரை நிலைமை இப்படித்தான் நீடித்தது.

2009 ஆம் ஆண்டில் ஈழத்தில் போர் முடிவுற்றதும், சர்வதேச ஊடகங்களில் ஈழத்தில் தமிழர்கள் மானுட குலமே வெட்கித் தலைகுனியுமளவுக்குக் கோரமாக இனப்படுகொலை செய்தமைக்கான சாட்சியங்கள் வெளியாகின. இசைப்பிரியாவினதும், பாலச்சந்திரனதும் கோரமான படுகொலை நிழற்படங்கள் தமிழகத்தை உலுக்கிப் போட்டன. ஆற்றொணாத் துயரத்தில் ஆழ்த்தின. இதனால் தமிழகமே வெகுண்டெழுந்தது. பாடசாலை மாணவர்கள் தொடக்கம், பல்கலைக்கழக மாணவர்கள் வரையில் அனைவருமே, ஈழத்தில் இடம்பெற்ற அநீதிகளுக்கு நீதி கோரி வீதியில் இறங்கினர். இந்தப் போராட்டங்களின் விளைவாக அப்போது தமிழகத்தில் ஆட்சியமைந்திருந்த அமரர் ஜெயலலிதா அம்மையார் தலைமையிலான அ.தி.மு.க அரசு சட்டசபையில் 'ஈழத்தில் இடம்பெற்றது இனப்படுகொலையே' என முதற் தீர்மானத்தைக் கொண்டுவந்தது. தாயகம் தவிர்ந்து வெளியிடத்தில் கொண்டு வரப்பட்ட ஈழத்தமிழர் இனப்படுகொலை தொடர்பான முதல் தீர்மானம் இதுவாகும். இந்தத் தீர்மானம் பெருங்கவனத்தை ஈர்த்தது. ஈழத்தில் இடம்பெற்றது இனப்படுகொலையே என்ற நோக்கில் புதிய பார்வைக் களத்தைத் திறந்துவிட்டது.

சமநேரத்தில் போருக்குப் பின்பான ஈழத்தமிழர்களது பிரச்சினையை முன்னிறுத்திப் பல அமைப்புகள் உருவாகின. பல்வேறு மாணவர் கட்டமைப்புக்கள் தோற்றம் பெற்றன. இதுவரைக்கும் திராவிடம், பெரியாரியம், தலித்தியம் எனப் பிரிந்து நின்று அரசியல் சிந்தாந்தம் பேசிக்கொண்டிருந்த தமிழக மாணவர்களும், இளைஞர்களும் ஈழ நிலத்து விடுதலையை முன்வைத்து தமிழ்த் தேசிய அரசியல் பேசத்தொடங்கினர். ஆனால் தமிழகத்தின் அரசியல் நீரோட்டத்தைத் தீர்மானிக்கும் மைய சக்தியாக இருக்கும் திராவிடத்துக்கும், பெரியாரியத்துக்கும் எதிராக நின்று இந்தத் தமிழ்த் தேசிய உதிரி அமைப்புக்களால் எதுவும் செய்ய இயலவில்லை. படிப்படியாகக் காணாமல் போய்விட்டனர். ஆனால் இந்தச் சூறைக்குள் இருந்தும் நாம் தமிழர் இயக்கமும் 'மே 18' இயக்கமும் தப்பித்தன. நாம் தமிழர் இயக்கம் கட்சியாகத் தன்னை மாற்றிக்கொண்டு, புலிக்கொடியைத் தாங்கி புதிய அரசியல் பயணத்தைத் தொடங்கியது. மே 18 இயக்கம் அறிவார்ந்த தளத்தில் ஈழப்பிரச்சினையை கொண்டு சென்றது. நாம் தமிழர் கட்சியின் ஒருங்கிணைப்பாளர் சீமான் தமிழகத்தின் பட்டிதொட்டியெங்கும், புலிக்கொடியையும், ஈழ அரசியலையும் எடுத்துச் செல்ல, மே 18 இயக்கத்தின் ஒருங்கிணைப்பாளர் தோழர் திருமுருகன்காந்தி , சர்வதேச அளவில் இயங்கும் பல்வேறு அமைப்புக்களுக்கும் ஈழ இனப்படுகொலை விடயத்தை எடுத்துச் சென்றார். ஐ.நா. மனிதவுரிமைகள் கூட்டத்தொடரில் கலந்துகொண்டு, அங்கு வந்துபோகும் நாடுகளுக்கு ஈழப் பிரச்சினையை எடுத்துக்கூறினார். ஈழத்தை முன்னிலைப்படுத்திய இந்தப் பரபரப்பான அரசியல் வேலைத்திட்டமும் நின்று நிலைக்கவில்லை. ஈழத்தில் போர் முடிவுற்று 14 ஆண்டுகளுக்குள் மேற்குறித்த இரண்டு அமைப்புக்களுமே ஈழப்பிரச்சினையையும், ஈழ இனப்படுகொலையையும் கைவிடத் தயாராகிவிட்டமையை அண்மைய போக்குகள் எடுத்துக்காட்டி நிற்கின்றன.

உதாரணத்துக்கு அண்மையில் நடந்து முடிந்த ஐ.பி.எல் கிரிக்கெட் போட்டியைப் பார்க்கலாம். அதில் வெற்றியீட்டிய சென்னை சூப்பர் கிங்ஸ் அணி, ஒரு தமிழ் வீரரைக்கூட இணைத்துக்கொள்ளாது தமிழகத்தைப் பிரதிநிதித்துவம் செய்தது. தமிழர்களுக்கு வாய்ப்பு வழங்காத அதே அணி, ஈழத்தில் தமிழர்களை இனப்படுகொலை செய்த இலங்கை இராணுவத்தின் கப்டன் தர அதிகாரியை விரும்பிச் சேர்த்துக்கொண்டது.

இதற்கு முன்னர் இலங்கையிலிருந்து யார் தமிழகம் சென்றாலும், அதற்கு எதிராகப் போராடி, தமது எதிர்ப்பைக் காட்டிய தமிழகம் இந்த விடயத்தை மௌனமாகக் கடந்துபோனமை வேடிக்கையான நிகழ்வு. அதைவிட வேடிக்கை என்னவெனில், தமிழகத்தில் ஈழப்பிரச்சினையை வைத்து அரசியல் செய்யும் நாம் தமிழர் கட்சியோ, சீமானோ, மே 18 இயக்கமோ, அதன் ஒருங்கிணைப்பாளர் தோழர் திருமுருகன்காந்தியோ இது குறித்து வாயே திறக்காமைதான். இதற்கு முன்பான காலத்தில் இடம்பெற்ற ஐ.பி.எல். போட்டியொன்று சென்னை சேப்பாக்கம் மைதானத்தில் இடம்பெறவிருந்த வேளை மேற்கண்ட இரண்டு தரப்பினரும் இணைந்து நடத்திய போராட்டங்களினால், அந்தப் போட்டியே தடைப்பட்டது. ஆனால் இந்த வருடம் அந்த இரண்டு அமைப்புக்களுமே இலங்கை இனப்படுகொலை இராணுவத்துக்கே வாய்ப்பளித்து, அதே சேப்பாக்கம் விளையாட்டரங்கில் விளையாட விட்டு அழகு பார்த்திருக்கின்றன.

தமிழகத்தில் ஈழப்பிரச்சினையைக் கையாளும் மேற்கண்ட இரண்டு தரப்பினரினதும் இந்த நிலைப்பாட்டை ஈழத்தமிழர்கள் பின்வருமாறுதான் புரிந்துகொள்கின்றனர்.

நாம் தமிழர் கட்சியும், சீமானும் ஈழத்தமிழர்களை முன்வைத்து முன்னெடுத்த அரசியல் அவர்களுக்கான வாக்கு அரசியல் பலத்தை அளித்துவிட்டது. புலிக்கொடியும், ஈழ ஆயுதப் போராட்டத்தின் வீரமிகு - தீரமிகு போராட்ட அனுபவங்களுக்கும் சீமானுக்கு பிரகாசமிகு அரசியல் எதிர்காலத்தை உருவாக்கிக்கொடுத்துவிட்டது. இந்த விடயங்களைப் பட்டிதொட்டியெங்கும் எடுத்துச் சென்ற சீமானுக்கு புலம்பெயர் தமிழர்கள் அளித்த பொருளாதாரப் பலம் போதுமென்றாகிவிட்டது. தமிழக அரசியல் வெளியில் தமிழ்த்தேசியத்தை முன்னிறுத்தி சீமான் பேசிய அரசியல் படிப்படியான வாக்கு அதிகரிப்பை சாத்தியப்படுத்தியிருக்கிறது. எனவே இனி தமிழகத்தின் அரசியலை நாடி பிடித்துப் பேசினால் மட்டுமே போதுமானது என்ற கட்டத்துக்கு சீமானும், நாம் தமிழர் கட்சியினரும் வந்துவிட்டனர். ஈழப் பிரச்சினைக்கு ஆதரவான மக்கள் கூட்டத்தின் வாக்குகள் மட்டுமே சீமானுக்கு முதலமைச்சர் ஆசனத்தைப் பிடிப்பதற்கான தகுதியைத் தராது. எனவே அதனோடு இணைத்துத் தமிழகத்தின் திராவிட அரசியலுக்குள் சிக்கிக் கிடக்கும் வாக்குகளையும் சீமான் தன் பக்கம் இழுக்கவேண்டிய தேவையுள்ளது. எனவே திராவிடத்தையும், தமிழக சாதிய அரசியலையும், இந்தியாவின் இந்துத்துவாவையும் பகைத்துக்கொள்ளாமல் அரசியல் செய்ய சீமான் முனைகிறார். அதற்காக ஈழப் பிரச்சினையைப் பேசுவதும், அதற்காகப் போராடுவதும் அவருக்கு அவசியமற்ற விடயங்களாக மாறிவிட்டன. 'மே18' இன் முள்ளிவாய்க்கால் நாளுக்கும், மாவீரர் நாளுக்கும் தன் கட்சித் தொண்டர்களைத் திரட்டி ஒரு உரையை ஆற்றினால், தமிழகத்தின் ஈழ ஆதரவுக்கான வாக்கு வங்கியைத் தக்கவைத்துக்கொள்ள முடியும் என சீமான் நம்புகிறார்.

அதேபோல அதிதீவிர திராவிட முன்னேற்றக் கழக விசுவாசியாக இருக்கின்ற 'மே 18' இயக்கத்தினரும், அதன் ஒருங்கிணைப்பாளர் தோழர் திருமுருகன்காந்தியும் ஈழ விடயத்தைப் பேசுவதன் சுருதியைக் குறைத்துவிட்டனர். திராவிட முன்னேற்றக் கழகத்தின் ஆட்சிக்கு எவ்வித குந்தகங்களும் ஏற்படாதவகையிலான அரசியலை கொண்டு செல்லவே திருமுருகன்காந்தியும் விரும்புகின்றார்.

தமிழகத்தில் இயங்கும் நம்பிக்கைமிகு அரசியல் தலைவர்களாக இவ்விருவரையுமே ஈழத்தமிழர் நோக்கினர். புலம்பெயர் தளத்துக்கு அடுத்து தாயகப் பிரச்சினையை சரியாகப் பேசுபவர்களாக இந்த இருதரப்பினரையுமே நம்பினர். ஆனால் அந்தத் தரப்பினர்கூட ஈழத்தமிழர்களைக் கறிவேப்பிலையாகப் பாவிக்கும் நிலைமைதான் இன்று உருவாகியிருக்கின்றது.

# MCN Cakes

## Sri Lankan Cakes, Sweets & Short Eats in Dandenong Plaza

Cakes | Cupcakes | Macarons | Finger Foods

**Ethiroli Special Offer**
**$10 OFF**
Spend over $100
*valid till 30/06/23. Must bring coupon.

**Custom Cakes**
- Birthday Cakes
- Wedding Cake Structures
- Wedding Cake Pieces

**Authentic Sri Lankan**
- Ribbon Cake
- Chocolate Cake
- Eclairs
- Butter Cake

**Sweets**
- Cupcakes
- Cookies
- Macarons and more....







**MCN Cakes,**
Level 1 - Food court (near Westpac)
**Dandenong Plaza**
(03) 90188188
0433662477
www.mcncakes.com.au

## Saturday Lunch Special
# Lamprais

**Dine-in or Takeaway**

***Lunch Everyday**
**Rice & Curry**




Pan Rolls, Buns,
Kottu, Rice ...
Faluda, Tea, Coffee ...
Necto, Ginger Beer ...





**எங்கட கடை டன்டிநொங் பிளாஸாவில்**

# தாயகத்தைத் தவறாக வழிநடத்துகிறதா புலம்பெயர்தளம்?

● ஜெரா

ஒவ்வொரு வருடமும் மே பதினெட்டுக்குப் பின்பான ஈழத்தமிழர் அரசியலானது ஒவ்வொரு வடிவமெடுக்கும். சில வருடங்களில் அது அபரீதமான பாய்ச்சலைக் காட்டியிருக்கிறது. சிலவருடங்களில் பெரும் சோர்வைத் தரக்கூடிய நிலைமைகளை உருவாக்கித் தந்திருக்கிறது. அந்தவகையில் இவ்வருட மே பதினெட்டின் நிறைவானது ஈழத்தமிழர் அரசியல் வரலாற்றில் பெருநம்பிக்கையைத் தந்திருக்கிறது. முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் நாளினை முன்னிட்டு கனேடியப் பிரதமர் வெளியிட்ட, ஈழத்தமிழர் மீது சிறீலங்காவில் இடம்பெறுவது இனப்படுகொலையே, என்பதைக் கோடிட்டுக்காட்டும் தீர்மானமே அத்தகைதொரு நம்பிக்கைக் கீற்றாகத் தென்படுகின்றது.

கனடா போன்று வளர்ந்த ஒரு நாடு ஈழத்தமிழர் அரசியல் விடயத்தில் இவ்வளவு தூரம் இறங்கிவந்து காரியமாற்றுகின்றதெனில், அதில் அந்நாட்டுக்கு அல்லது அந்நாட்டில் அரசமைத்திருக்கும் அரசியல் கட்சிக்கு இலாபம் இல்லாமல் இருக்கப்போவதில்லை. அந்த இலாபம் எதுவெனில் கனடாவில் புலம்பெயர்ந்து வாழும் ஈழத்தமிழர்களின் வாக்குகள்தான். அந்த வாக்குகளை சரியாகப் பயன்படுத்தத் தெரிந்த கனேடியப் புலம்பெயர்தமிழர்கள் அதில் குறிப்பிடக்களவு வெற்றியைப் பெற்றிருக்கின்றனர். சிறீலங்காவில் இனப்பிரச்சினை தீர்ந்துவிட்டது, நல்லிணக்கம் மலர்ந்து விட்டது என உலகம் முழுவதும் வெற்றிகரமாகப் பரப்புரை மேற்கொள்ளப்பட்டுவரும் இவ்வேளையில் இவ்வாறானதொரு அறிக்கை வெளி-வருவது அந்தப் பரப்புரையை கேள்விக்குட்படுத்தும். உண்மையில் அங்கே என்ன நடக்கிறது என ஆழமாக ஆராயச் செய்யும். ஈழத்தமிழர்களை அழித்தொழிப்பதற்கான இனப்படுகொலையை மேலும் ஆதாரப்படுத்தும். பேசுபொருளாக்கும். தக்கவைக்கும். வரலாற்றுக்குக் கடத்தும். ஈழத்தமிழரை முன்னிறுத்திய இனப்படுகொலை அரசியலை புதிய நிகழ்ச்சிநிரலாக மாற்றும். இவ்வளவு வேைலத்திட்டங்களையும் முன்னின்று நடத்திய புலம் பெயர் தமிழர்களாகிய கனடாவாழ் தமிழ் மக்கள் பாராட்டுதல்களுக்குரியவர்கள்.

கனடாவின் நிலைமை இவ்வாறிருக்க, புலம்பெயர் தமிழர்கள் வாழும் ஏனைய நாடுகளில் என்ன நடக்கிறது? ஏன் இதனைப் போன்றதொரு அரசியல் மாற்றத்தை அந்நாடுகளில் ஈழத்தமிழர்களால் ஏற்படுத்த இயலவில்லை?

அதற்கு முதற் காரணி, கனடா போன்று ஏனைய நாடுகளில் ஈழத்தமிழர்கள் நெருக்கமாக, நகரங்களை மையப்படுத்திக் குடியேறவில்லை. லண்டன் மாதிரியான நகரங்களில் குடியேறியிருப்பினும், அந்நாட்டு அரசியலில் செல்வாக்குச் செலுத்துமளவிற்கு இன்னமும் வளரவில்லை. அடுத்தடுத்த தலைமுறையினர் அதற்காகத் தொடர்ச்சியாகப் போராடிக் கொண்டிருப்பினும் விரைவான வளரச்சியைக் காட்ட இயலவில்லை. அவுஸ்திரேலியாவில் இருக்கின்ற சில இளை-யோர் அந்நாட்டு அரசியலோடு கலந்து, நம் பிரச்சினைகளை முன்னெடுக்க முயற்சிப்பினும், அது கனிந்துவரும் காலம் முன்னகர்ந்துகொண்டே இருக்கின்றது. அதேபோல புலிகள் விட்டுச் சென்ற அமைப்புகள் போக, அதற்குப் பின்னர் உருவாகிய புதிய அமைப்புக்களும், கிளை அமைப்புக்களும், கிளை பரப்பிய அமைப்புக்களும் தமக்கிடையில் ஒரு கொள்கை வகுப்பை உருவாக்கி ஒற்றை வழித்தடத்திற்கு வரத் தயக்கம் காட்டுகின்றன. தங்களுக்குள் பிளவுண்டு கிடக்கின்றன. தாயக விடுதலை, தாயக அபிவிருத்தி, ஈழத்தமிழர் இனப்படுகொலைக்கான சர்வதேச நீதி போன்ற விடயங்களுக்காகக் குரல் கொடுப்பினும், அவை தனித்தனியாக ஆங்காங்கே கேட்டு மறைகின்றன. ஐ.நா. மனிதவுரிமைகள் அமர்வு நாளிலும், மே பதினெட்டு நாளிலும் மட்டும் கேட்கும் அறிக்கை வாசிப்புக்களாக மாறிவிட்டன.

உண்மையில் தாயகத்தின் அரசியலை புலம்பெயர் தளத்தில் முன்னெடுக்கும் தரப்புகள் தமக்கிடையில் கொள்கை அடிப்படையிலான ஒற்றைப் பாதைக்குள் வரவேண்டும். அடைய வேண்டிய இலக்கினை வகுத்துக்கொண்டு உலகின் எல்லாப் பாகங்களிலிருந்தும் ஒருமித்த குரலில் போராட வேண்டும். ஆனால் அது நிகழவில்லை.

சிறீலங்காவுக்குப் பொருளாதாரப் பின்னடைவுகள் முன்னெப்போதும் நடக்காதவை அல்ல. வரலாற்றின் எல்லாப் பக்கங்களிலும் கடனால் அரிக்கப்பட்ட இத்தீவு கடனால் தான் அழிந்திருக்கிறது. கடனால் தான் நிமிர்ந்திருக்கின்றது. எனவே சிங்கள மக்களுக்கு கடன், வறுமை என்பதெல்லாம் ஒரு பிரச்சினை கிடையாது. அவர்களுக்கு மட்டுமேயான பௌத்த மேலாண்மைவாத அரசு எப்படியாவது தம்மைக் காப்பாற்றும் என்பதில் அசையாத நம்பிக்கை வைத்திருக்கிறார்கள். ஆனால் தமிழர்களின் நிலைமை அப்படியானதல்ல. போரினால் தம் மொத்த பொருளாதார பலத்தையும் தமிழர்கள் இழந்தனர். போரில் எஞ்சிய மிகுதிப் பொருளாதாரத்தையும், பொருள் பண்டங்களையும் இந்திய - தெற்கு வணிக நிறுவனங்களிடம் இழந்தனர். இப்போதும் இலங்கையைத் தாக்கியிருக்கும் பொருளாதாரப் பேரழிவும் தமிழர்களையே அதிகம் பாதித்திருக்கின்றது. தொழில் முயற்சிகளையும், விவசாயத்தையும், சிறு வணிகத்தையும் இது பெருமளவில் வீழ்த்தியிருக்கின்றது. சிறுகச் சிறுக சேமித்தவற்றை மொத்தமாகத் தின்றுபோட்டிருக்கிறது. எனவே இவ்வேளையில்தான் பலமான பொருளாதாரக் கட்டமைபொன்று தாயகத்தில் வாழும் தமிழர்களுக்கு அவசியப்படுகின்றது. போர் முடிவுற்று 14 ஆண்டுகள் கடந்த நிலையில் அவ்வாறானதொரு பொருளாதாரக் கட்டமைப்பொன்றின் தேவை குறித்து சிந்திக்க வேண்டிய தரப்பினராக புலம்பெயர் தமிழர்கள் இருந்தனர். ஆனால் அது குறித்து எந்தக் காரியத்திலும் இறங்கவில்லை. வட மாகாண முன்னாள் முதலமைச்சர் விக்கினேஸ்வரனுடன் இணைந்து முதலமைச்சர் நிதியத்தை அமைக்க சிலர் முயன்றிருப்பினும் அதனை உருவாக்க சிறீலங்கா அரசு வழிவிடவில்லை. சிறிலங்காவின் அரச கட்டமைப்புக்குள் இருந்தபடி இவ்வாறானதொரு பொருளாதாரக் கட்டமைப்பை உருவாக்க முடியாது என்பதை உணர்ந்த பின்பாவது, புதியதொரு கட்டமைப்புக் குறித்து சிந்தித்திருக்க வேண்டும், செயலாற்றியிருக்க வேண்டும். ஆனால் அதுவும் இடம்பெறவில்லை.

தாயகத்தில் முன்னாள் போராளிகளது குடும்பங்களும், பெண் தலைமைத்துவக் குடும்பங்களும், மாவீரர்களது குடும்பங்களும் என்றுமில்லாத வறுமைக்கோட்டுக்குக் கீழ் வாழ்கின்றனர். அவர்களுக்கான வாழ்வாதார உதவி களை புலம்பெயர் தமிழ் அமைப்புகள் வழங்கிவரினும், அது முறைப்படுத்தப்பட்ட ஒரு வழிமுறையில் இடம்பெறவில்லை. சமூக வலைத்தளங்களிலும், தனிநபர் தொடர்புகளுக்குள்ளாகவும் கிடைக்கும் தகவல்களைக் கொண்டு வாழ்வாதார உதவித் திட்டங்களை மேற்கொண்டு வருகின்றனர். 14 ஆண்டுகளாக இத்தகையை வாழ்வாதார வேலைத்திட்டங்கள் நீடித்துக்கொண்டிருக்கின்றன. ஆனால் இதனால் தாயகத்தில் வாழும் தமிழர்களது வாழ்வில் ஏதாவது மாற்றம், முன்னேற்றம் இடம்பெற்றதா எனப் பார்த்தால், ஏதுமில்லை. மாதாந்தம் கிடைக்கும் உதவித் தொகையைக் கொண்டு அந்த மாதத்தைக் கடந்துவிட்டால் போதும் என்ற நிலையில் இருக்கும் உதவி பெறுநர்கள் தம் பொருளாதார முன்னேற்றம் குறித்து சிந்திக்கிறார்கள் இல்லை. தொலை பேசிச் செலவுக்கும், குடிபானச் செலவுக்கும் ஒதுக்கீடு செய்யும் பணத்தில் சிறு பகுதியையாவது ஒரு சுய தொழிலை ஆரம்பிப்பதற்கு செலவிடுவதில்லை. 30 பேர் வசிக்கும் கிராமமொன்றிற்கு 30 பேருக்குமே தையல் மெசின் கொடுப்பதும், கிணறே இல்லாத வீட்டுக்கு நீர் இறைக்கும் இயந்திரம் கொடுப்பதும் வழமையாகிப்போன நிலமையில் புலம்பெயர்தமிழர்கள் தாம் வழங்கும் வாழ்வாதார உதவித் திட்டங்கள் குறித்தும் சிந்திக்க வேண்டும். தாயகத்தின் பொருளாதார நிலமைகளை, பொருளாதார வளங்களைச் சரியாகக் கணிப்பிட்டு, எந்த இடத்திற்கு இஎந்த உதவியைச் செய்வது? அதன் இலாபத்தை எப்படி பெறுவது? போன்ற கேள்விகளுக்கான பதில்களுடனேயே வாழ்வாதார உதவி-களைச் செய்யவேண்டும். அதனைவிடுத்து அனைவருக்குமே அன்றாடம் உண்ணுவதற்கு வாழ்வாதார உதவி வழங்கப் போகிறோம் என ஆளாளுக்குப் புறப்பட்டால், தாயக நிலம் தொடர்ந்தும் நிமிரமுடியாமலே நிற்கும். தொடர்ந்தும் கையேந்தியபடிதான் நிற்கும். எனவே இவற்றைக் கருத்தில் கொண்டு, தெளிவான மதிப்பீட்டின் அடிப்படையில் தாயகம் நோக்கிய பொருளாதாரக் கட்டமைப்பைப் புலம்பெயர்தமிழர்கள் உருவாக்க வேண்டும்.

தாயக நிலத்தின் விடுதலைக்காக முன்னெடுக்க வேண்டிய அரசியலிலும் கோட்டைவிட்டு, தாயக நிலத்தை வளப்படுத்துவதற்கான பொருளாதாரப் போராட்டத்திலும் கோட்டைவிட்டு இப்படியே தான் பயணிக்கப்போகிறோம் என்றால், தாயகத்தின் எச்சசொச்சங்களும் அழிந்துபோகும். தம் தாயகத்தைத் தவறாக வழிநடத்திய புலம்பெயர் தமிழர்கள் என்கிற செய்தியையே வரலாறு காவிநிற்கும். ■



LEGAL STUDIES TUITION
YEAR 11 AND YEAR 12
BY VICTORIAN SOLICITOR
FOR FURTHER DETAILS
PLEASE CONTACT:
0405982583
or
Email: nag418662@gmail.com


# அல்போனியம் ஓராண்டு மதிப்பீடு

நச்சினார்க்கினியன்



**"வாக்குறுதிகளை மறந்து கொண்டே இருப்பது அரசியல்வாதிகளின் குணம் அவர்களுக்கு நினைவுபடுத்தி இடித்துரைப்பது எமது கடமை!"**

கடந்த 2022 ஆண்டு நடந்த ஆஸ்திரேலிய நாடாளுமன்ற தேர்தல் பிரசாரத்தில் முன்னாள் பிரதமர் ஸ்காட் மொரிஸனுக்கும் , ஆன்டனி அல்பனிஸ் அவர்களுக்கும் தொடர்ந்து நடந்த உக்கிரமான வாக்கு சேகரிப்பு விவாதங்களை யெல்லாம் இப்பொழுது திரும்பி யோசித்து பார்க்கும்பொழுது எம்.ஜி.ஆர் நடித்த நாடோடி மன்னன் படத்தில் வரும் ஒரு காட்சி தான் ஞாபகத்திற்கு வருகிறது.

எம்.ஜி.ஆர் தனது எதிர்த்தரப்பைப் பார்த்து காட்டமாக பதில் சொல்வார் , " மக்களின் நிலையறியாதவன் நானா?, நீங்களா?. நீங்கள் மாளிகையில் இருந்து மக்களைப் பார்க்கிறவர்கள். நான் மக்களோடு இருந்து மாளிகையைக் கவனிக்கின்றவன்." இதைப்போன்று தான் அல்பானிஸ் அவர்களும் ஸ்காட் மொரிஸனை நோக்கி சவால் தொடுத்தார் . கடந்த மே 2023 மாதத்தோடு அவர் பிரதம ராகப் பதவியேற்று ஒரு வருடம் முடிந்துவிட்டது. இந்த ஒரு வருட காலத்தில் , மாளிகையில் இருந்து மக்களைப் பார்க்கிறவரா இல்லை மக்களோடு இருந்து மக்களுக்காகப் பாடுபடுகிறாரா என்று அலசிப்பார்க்கும் தருணமிது. அதற்கு ஒரு எளிய வழியாக, தேர்தல் நேரத்தில் மக்களுக்கு அளித்த வாக்குறுதிகளை நிறைவேற்றினாரா இல்லை அது வெறும் வெற்று தேர்தல் பிரசார முழக்கமா என்று கொஞ்சம் திறனாய்வு செய்ய வேண்டிய கடமை நமக்கு இருக்கிறது.

சமீபத்தில் ABC நியூஸ் தளமும், RMIT பல்கலைக்கழகத்தின் சமூக அறிவியல் பிரிவும் சேர்ந்து அல்பனிஸ் அவர்களின் தேர்தல் கால வாக்குறுதிகளையெல்லாம் அலசி ஆராய்ந்து, அதில் என்னவெல்லாம் நிறைவேறியிருக்கின்றன, எவற்றை யெல்லாம் நிறைவேற்றாமல் புறந்தள்ளியிருக்கின்றார் என்பதைப் பற்றி வெகு விரிவான கட்டுரை ஒன்றை எழுதியிருக்கின்றனர்.அதனையொட்டி அவரது அரசாங்கத் தின் செயற்பாடுகளை மதிப்பீடு செய்வது நமது அணுகு முறையை எளிதாக்குகிறது. அல்பனிஸ் அரசாங்கம் மொத்தமுள்ள 64 வாக்குறுதிகளில் 18 ஐ மட்டும் நிறைவேறியிருக்கின்றது. 40 திட்டங்கள் செயலாக்கப் பாதையிலும் மற்றும் மீதமுள்ள 6 திட்டங்கள் கிடப்பிலும் போடப்பட்டுள்ளன. இந்தத் திட்டங்களை வகைப்படுத்தி அரசாங்கத்தின் கவனம் எந்தெந்தத் துறைகளில் இருக்கிறது என்பதையும் , இன்னும் வரும் ஆண்டுகளில் அவர்களின் கவனம் எத்திசை நோக்கி நகரப்போகிறது என்பதையும் நாம் அறிந்து கொள்ள முடியும்.

அரசாங்கத்தின் செயற்பாட்டை மதிப்பிடுவதற்கு மக்களை நேரடியாகப் பாதிக்கும் துறைகளை மட்டும் கருத்தில் கொண்டு , கடந்த ஒரு ஆண்டில் என்னென்ன திட்டங்கள் நிறைவேற்றப்பட்டன ,முன்னெடுப்பிலுள்ளன மற்றும் கிடப்பில் போடப்பட்டுள்ளன என்று பார்க்கலாம். மக்களை நேரடியாகப் பாதிக்கும் துறைகள் என்பது பொருளா தாரம், கல்வி,வேலைவாய்ப்பு, சூழலியல், மருத்துவம் மற்றும் சமூக நலம் என்பன ஆகும்.

**பொருளாதாரம் :**

அல்பனிஸ் அரசாங்கம் பதவியேற்ற பிறகு பொருளா தாரம் சார்ந்த திட்டங்களில் ஒரு முன்னெச்சரிக்கை மனப்பாங்குடனேயே அனைத்து திட்டங்களையும் நிறைவேற்றியது போல் தெரிகிறது. இந்த அரசு ஒரே ஒரு வாக்குறுதியை மட்டுமே நிறைவேறியிருக்கிறது. அதாவது குறைந்த மற்றும் மத்திய வருமானம் ஈட்டும் குடும்பங்களுக்கு $420 வரி விலக்கு .

கிடப்பில் போடப்பட்டவை , மக்களின் ஊதிய உயர்வை அதிகரிக்கும் திட்டங்கள் , தேர்தலுக்கு முன்பு இருந்ததை விட 2025-ம் ஆண்டுக்குள் வீடுகளுக்கான மின் கட்டணம் ஆண்டுக்கு 275 டொலர் குறைப்பு முதலியன.

**கல்வி :**

அல்பனிஸ் அரசாங்கம் ஆரம்பம் முதலே கல்வி தொடர்பான எல்லா வாக்குறுதிகளையும் செவ்வனே நிறைவேற்றி வருகிறது . குழந்தைப் பராமரிப்பு மானிய விகிதங்களை அதிகரித்தல் ,பாடசாலைகளின் கட்டட மேம்பாட்டிற்காக 240 மில்லியன் டொலர் வழங்குதல், மிக முக்கியமான துறைகளில் வல்லுநர்களுக்கு தேவையான பாடத்திட்டங்களை கட்டணமற்ற பாடங்களை வழங்குதல், ATAR மதிப்பெண் 80க்கு மேல் பெற்ற மாணவர்களுக்கு மேற்படிப்பு படிக்க ஆண்டுக்கு $ 12,000 வரை உதவித்தொகை வழங்குதல் மற்றும் பிற. உயர்கல்வி மற்றும் ஆராய்ச்சித் துறைகளில் இன்னும் கூடுதலான நிதி ஒதுக்கவேண்டும்.வளர்ச்சியடைந்த நாடுகளுடன் ஒப்பிடும்போது ஆஸ்திரேலியா இன்னும் மிக அதிக மான ஆராய்ச்சி நிதி வழங்கி ,புது வேலைவாய்ப்புகளை உருவாக்க வேண்டும்.

**வேலை :**

பொதுமக்களின் பணி மற்றும் அலுவல் தொடர்பான நீண்டகால சமூகப் பாதுகாப்பிற்கு வழி செய்யும் பல நல்ல திட்டங்கள் நிறைவேற்றப் பாதையில் உள்ளன என்பது மகிழ்ச்சி அளிக்கும் செய்தியாகும் . பாலின ஊதிய சமத்துவத்தை நியாய வேலைச் சட்டத்தின் நோக்கமாக ஆக்குதல் ,ஊதியத் திருட்டை கிரிமினல் குற்றமாக்க சட்டம் இயற்றுதல் , கிக் ஒர்க் (குறைந்த காலமே பணி தேவைப்படும் ஊழியர்கள்) போன்ற புதிய வகையான வேலைகளுக்கு குறைந்தபட்ச தரங்களுக்கான உத்தரவுகளைப் பிறப்பிக்க நியாயவேலை ஆணையத்தின் அதிகாரங்களை விரிவுபடுத்துதல் மற்றும் ஆஸ்திரேலிய அரச சேவையில் சராசரி ஊழியர் மட்ட உச்சவரம்பை இரத்துச் செய்து நிரந்தர ஊழியர்களின் எண்ணிக்கையை அதிகரித்தல் போன்ற பல திட்டங்களுக்கு முன்னுரிமை அளித்திருப்பது சமூகப் பாதுகாப்பை அதிகரிக்கும் .

**சூழலியல்:**

கடந்த மொரிஸன் அரசைப் போன்று சுற்றுச்சூழல் பாதுகாப்பிற்குத் தேவையான நடவடிக்கைகளை தடாலடி யாக எந்தவித தொலைநோக்கின்றி எடுக்காமல் ,அல்பானிஸ் மிகுந்த எச்சரிக்கையுடன் நிதானமாகவும் அணுகுவது ஆரோக்கியமான விடயமாகும்.

1. படிப்படியாகவும், எதிர்பார்க்கக்கூடிய வகையிலும் தொழிற்சாலை மாசு வெளியேற்றப்படுவதை குறைத்தல்
2. மாசு உமிழ்வுகளை ஆஸ்திரேலியாவின் தேசிய அளவில் தீர்மானிக்கப்பட்ட 2005 அளவிலிருந்து 43 சதவீதமாகக் குறைப்பதற்கான இலக்கைச் சட்டமாக்குதல்
3. ஜூலை 1, 2022 முதல் ஆடம்பரமற்ற குறைந்த உமிழ்வு வாகனங்கள் மீதான இறக்குமதி மற்றும் fringe-benefit வரியை நீக்குதல் என்று பல.

**மருத்துவம் மற்றும் சமூக நலம்:**

பொதுவாக எல்லா லேபர் அரசாங்கத்தின் சட்டதிட்டங்களும் பொதுமக்களின் மருத்துவ ,சமூக நல பாதுகாப்பை பேணுவதாகவே இருக்கும். அல்பனிஸ் அரசாங்கமும் அதற்கு விதிவிலக்கன்று . ஜனவரி 2023 முதல் PBS ஸ்கிரிப்ட்களுக்கான அதிகபட்ச கட்டணத்தை கூ 12.50 குறைத்தல் , 2023 ஆம் ஆண்டிற்குள் முதியோர் பராமரிப்பு விடுதிகளில் 24/7 பதிவு செய்யப்பட்ட செவிலியர் இருப்புத் தேவையை அமலாக்கம் செய்தல், குடும்ப மற்றும் குடும்ப வன்முறையினால் பாதிக்கப்பட்டவர்களுக்கு சம்பளத்துடன் கூடிய விடுமுறையை 10 நாட்கள் சட்டமாக்குதல் , குடும்ப, பாலியல் வன்முறைகளால் பாதிக்கப்பட்டவர்களுக்கு தனி ஆணையம் அமைத்தல் என்று பல வாக்குறுதிகளை நிறைவேற்றியுள்ளார் .

கடந்த ஒரு வருடத்தில் எந்தப் பெரிய சிக்கல்களையும் அவரது அரசாங்கம் எதிர்கொள்ளவில்லை .மிகப்பெரிய இயற்கைப் பேரிடர் அல்லது பெருந்தொற்று நெருக்கடிகளை சமாளிக்க வேண்டிய தேவையிருக்கவில்லை. அதனால் மிக நிதானத்துடன் மக்களைப் பாதிக்கும் பெரும்பாலான விடயங்களில் கவனம் செலுத்தி, தனது வாக்குறுதிகள் சிலவற்றை அவரால் நிறைவேற்ற முடிந்திருக்கிறது. அவரிடம் ஒரு நீண்ட பட்டியல் உள்ளது . குறிப்பாக ஆஸ்திரேலியாவின் இடத்தை உலகளவில் மாற்றும் விதத்தில் காலநிலை மாற்றம் மற்றும் சுத்தமான எரிசக்தி குறித்த அரசாங்கத்தின் நடவடிக்கைகளைக் குறித்ததாக அந்தப்பட்டியல் இருக்கும் என்று விமர்சகர்கள் சுட்டிக்காட்டுகின்றனர். அவரது அணுகுமுறை எப்படிப்பட்டது என்பதை அவரின் வார்த்தைகளில் அறிந்துகொள்ளலாம் . அவர் ஒரு பேட்டியில், " நான் அரசியல் விளையாடுவது போல கால்பந்து விளையாடினேன். எனக்கு எப்போதும் ஒரு தைரி யம் இருந்தது. நான் ஒருபோதும் பின்னோக்கி அடியெடுத்து வைக்கவில்லை, களத்தில் ஒரு முரட்டுத்தனமாகவே என்னால் இருக்க முடியும்".

அவர் ஒரு பிடிவாதமான, தனக்கு வேண்டியது கிடைக்காதவரை சளைக்காமல் போராடும் குணமுடையவர். இனி வரும் ஆண்டுகளில் அவர் முன்னோக்கி வைக்கும் அடிகளனைத்தும் மக்களின் நல்வாழ்விற்காகவே இருக்க வேண்டும் என்பதே எமது விருப்பம்.

# சகவாழ்வு ஒரு வாழ்தல் முறையாக மலர்தல் வேண்டும்



**சமூக நீதிக் கட்சியின் தவிசாளர். அக்கரைப் பற்று மாநகரசபையின் முன்னாள் (2018) உறுப்பினர். தென்கிழக்குப் பல்கலைக் கழகத்தின் மாணவர் ஒன்றியத் தலைவர் (2001). பின்பு தென்கிழக்குப் பல்கலைக்கழக விரிவுரையாளர். போருக்குப் பிந்திய இலங்கைச் சூழலில் மாற்று அரசியலின் தேவையினால் 2010 இல் அரசியலில் பிரவேசித்த சிராஜ் மஷ்ஹூர், கட்சி அரசியலில் பெரிதும் விருப்பற்ற களச் செயற்பாட்டாளராகவே இயங்கி வருகிறார். ஆனாலும் சில சந்தர்ப்பங்களில் கட்சி அரசியலையும் எதிர்கொள்ள - அதில் ஈடுபட வேண்டிய தவிர்க்க முடியாத சூழலினால் மாற்று அரசியலைப் பிரதிபலிக்கும் கட்சியில் செயற்படுகிறார்.**

**நம்முடைய அரசியல் தலைவர்களின், அரசியல்வாதிகளின் மரபார்ந்த அணுகுமுறையிலிருந்து விலகித் தனித்துச் செயற்படும் சிராஜ், யதார்த்தவாதி. கவிஞர். எழுத்தாளர், சிந்தனையாளர், பதிப்பாளர். அக்கரைப்பற்றில் புத்தகக் காட்சியை ஆரம்பித்து நடத்தி வருகிறார். 'வழித்தடம்', 'மீள்பார்வை' இதழ்களின் ஆசிரியர். நல்லதொரு விவசாயி. இன, மத, பிரதேச, மொழி வேறுபாடுகளைக் கடந்து எல்லாச் சமூகங்களுடனும் ஊடாடும் மிகச் சில இலங்கையர்களில் ஒருவர்.**

**போருக்குப் பிந்திய இலங்கைச் சூழலில் பகை மறப்பு, நல்லிணக்கம், அமைதித்தீர்வு பற்றி நேர்மையாகச் சிந்தித்துச் செயற்படும் ஆளுமை. எதிரொலிக்காகச் சந்தித்தபோது,**

**நேர்கண்டவர் : அரவிந்தன்**

**இலங்கையின் இனப்பிரச்சினைக்கு என்ன வகையான தீர்வு சாத்தியம்? அதை நடைமுறைப்படுத்துவது எப்படி?**

இலங்கையில் இனப்பிரச்சினை இருப்பதை முழு அளவில் ஏற்றுக் கொள்வதுதான் முதல் அம்சம். சிலர் இதை இன்னமும் முழுமையாக ஏற்றுக் கொள்ளவில்லை. பகுதியளவில் - அரைகுறைப் புரிதலோடு உள்ளோரே இங்கு அதிகம்.

பேசித் தீர்ப்பதற்கான வாய்ப்புகள் தொடர்ந்தும் மறுதலிக்கப்பட்டு வந்தது. கடைசியில் உள்நாட்டுப் போராய் வெடித்தது. பாரிய அழிவுகளையும் இழப்புகளையும் எதிர்கொண்டோம். இப்போது போர் முடிந்து ஒன்றரைத் தசாப்தம் அளவில் கடந்திருக்கிறது.

வெளியிலிருந்து திணிக்கும் தீர்வுகள் அவசியம் இல்லை. உள்ளூர் மட்டத்தில் வளர்த்தெடுக்கும் தீர்வே (Home-grown solution) சிறந்தது என்று கூடப் பேசப்பட்டது. பல தெரிவுக் குழுக்கள் அமைக்கப்பட்டன. பல முன்மொழிவுகள் கைவசம் உள்ளன.

ஆனால், தீர்வை வழங்குவதற்கான அரசியல் விருப்பு (Political will) இன்மையே முதன்மையான பிரச்சினை. அதுவே இத்தனை இழுத்தடிப்புக்கும் முழுமுதற் காரணம்.

கடந்த காலங்களில் சில அருமையான வாய்ப்புகள் இருந்தன. அவை வேண்டுமென்றே தவற விடப்பட்டன.

திம்புப் பேச்சுவார்த்தை, இந்திய - இலங்கை ஒப்பந்தம், அதன் அடிப்படையில் உருவான மாகாணசபை முறையை உரிய முறையில் நடைமுறைப்படுத்தல், சந்திரிக்கா காலத்து அரசியலமைப்பு வரைவு, அரசாங்கத்திற்கும் புலிகளுக்கும் இடையில் இடம்பெற்ற சமாதானப் பேச்சுவார்த்தைகள், கற்றுக் கொண்ட பாடங்கள் நல்லிணக்க ஆணைக்குழு (LLRC) அறிக்கை, நாடாளுமன்ற தெரிவுக் குழு அறிக்கைகள் என்று ஏராளமான வரைவுகள் கைவசம் இருக்கின்றன.

இதற்கு மேலதிகமாக சிவில் சமூகத் தளத்திலிருந்து எண்ணற்ற தீர்வுப் பொதிகள் முன்வைக்கப்பட்டுள்ளன.

ஏறத்தாழ முப்பதாண்டுகள் மிகத் தீவிரமான கலந்துரையாடலுக்கு உள்ளான விடயம் இது.

இந்தக் கடந்த கால வரைவுகளையும் தீர்வுப் பொதிகளையும் விரிவாக ஆய்வுக்குட்படுத்துவது மிகவும் அவசியமான முதற்படியாக அமையும். அவற்றிலுள்ள பொருத்தமான அம்சங்களை உள்வாங்குவது இன்றியமையாத பணியாகும்.

இலங்கையின் இனப்பிரச்சினை என்பது தொடக்க காலத்தின் பண்புகளோடு இருக்கவில்லை. அது சிங்கள- தமிழ் பிரச்சினையாக குறுக்கப்பட முடியாத ஒன்று. முஸ்லிம்களதும் மலையகத் தமிழர்களதும் இங்குள்ள ஏனைய சிறு சமூகங்களதும் அரசியல் அபிலாசைகள் உள்வாங்கப்படாத எந்தத் தீர்வும் முழுமையான தீர்வாக அமையாது.

பரந்துபட்ட பார்வையோடு விசாலமாக இதை அணுகும் வகையிலான தேசிய மட்டக் கலந்துரையாடல்கள், கதையாடல்கள் தவிர்க்க இயலாத தேவையாக மாறியுள்ளன.

அதிகாரங்களை மாகாணங்களுக்குப் பகிர்வது போலவே, மூன்றாம் அடுக்கிலுள்ள உள்ளூராட்சி மன்றங்களுக்கும் வழங்க வேண்டும். இந்திய அரசியலமைப்பின் 74 ஆம்,75 ஆம் திருத்தங்கள் பஞ்சாயத்து சபைகளுக்கு அதிகாரங்களைப் பகிர்ந்துள்ளமை இதற்கு நல்ல உதாரணம்.

இலங்கையின் பன்மைத்துவ சமூகக் கட்டமைப்பை ஆழமாகப் புரிந்து கொண்ட தீர்வுகளே இன்றையத் தேவை.

நில அடிப்படையிலான தீர்வுகள் (Territorial Solutions) மட்டுமல்லாது, நிலத் தொடர்பற்ற தீர்வுகள் (Non-territorial Solutions) குறித்தும் பரிசீலிக்கப்பட வேண்டும். பெல்ஜியத்தில் நடைமுறையிலுள்ள சமூக நாடாளுமன்றம் (Community Parliament), சுவிற்சர்லாந்திலுள்ள கலாசார சபைகள் (Cultural Councils) போன்றவை நம் முன்னுள்ள மாதிரிகளாகும்.

வேடுவர்கள், பறங்கியர்கள், மலாயர்கள் உள்ளிட்ட சிறு சமூகங்களின் அபிலாசைகள் இதுவரை போதியளவு கவனத்திற்கு எடுக்கப்படவில்லை. இலங்கையில் 19 இனக்குழுக்கள் உள்ளதாக மனோ கணேசன் பொறுப்பாக இருந்த தேசிய ஒருமைப்பாட்டு அமைச்சின் ஆய்வறிக்கை கூறுகிறது. இப்படியான ஒரு முழுமையான பார்வை (Holistic Vview) இலங்கையின் நிலைபேறான அரசியல் தீர்வுக்கு மிகமிக அவசியம்.

அரசாங்கமட்டத்திலும்நாடாளுமன்றத்திலும்சமூகங்களிடையேயும் இடம்பெறும் கலந்தாய்வுகள் ஊடாகவே இதைச் சாத்தியப்படுத்த முடியும். அறிவுஜீவிகளின் பங்களிப்பும் இதற்கு மிக அவசியம். தொலைநோக்குள்ள நிரந்தரமான ஆணைக்குழுக்கள், செயலகங்கள் ஊடாகவே இதனை முன்னெடுக்க முடியும். இதற்கு அரசாங்கமே நடவடிக்கை எடுக்க வேண்டும். பல்கலைக்கழகங்களும் புத்திஜீவிகளும் ஆதரவும் அனுசரணையும் வழங்க வேண்டும்.

இதற்கு தென்னாபிரிக்க அரசியமைப்பு வரைவுச் செயன்முறை நல்ல முன்னுதாரணமாக உள்ளது. அது போன்ற உள்ளீர்க்கும் பண்புள்ள (Inclusive Approach) ஒரு தொடர் செயன்முறையே, இலங்கையில் நமக்கு இப்போது தேவைப்படுகிறது.

விரிவான கேள்வி இது. மிகவும் சுருக்கமாகவே பதில் சொல்லியிருக்கிறேன்.

**வடக்குக் கிழக்கு இணைப்பை தமிழ்த்தரப்பு வலியுறுத்துகிறது. முஸ்லிம்களோ தாங்கள் தனித் தேசம் என்று கூறுகிறார்கள். இந்த நிலையில் தீர்வை எட்டுவது எப்படி?**

பேச்சுவார்த்தைகளூடாகவே இதனைச் சாத்தியப்படுத்த முடியும். பல்லின, பன்மொழிச் சூழலில் எதை வலியுறுத்துவது, எதை விட்டுக் கொடுப்பது என்பது தொடர்பான மிகவும் சிக்கலான ஓர் அம்சம்தான் இது.

வட அயர்லாந்துப் பிரச்சினையின் தீர்வில் நமக்குப் பாடங்களும் படிப்பினைகளும் உள்ளன.

கிழக்கு மாகாணம் மிக வித்தியாசமான சனத்தொகைக் கட்டமைப்பு உடையது. ஏறத்தாழ 3 பிரதான சமூகங்களும் சம எண்ணிக்கையில் இங்கு வாழ்கின்றன.

ஒரு தரப்பின் அபிலாசையும் இன்னொரு தரப்பின் அபிலாசையும் குறுக்கிடும்போது, யார் யார், எதை எதை விட்டுக் கொடுக்க முடியும் என்பதற்கான இணக்கப்பாட்டு அடிப்படைகள், ஒவ்வொரு தரப்பினதும் அச்சங்கள் குறித்த காப்பீட்டுப் பொறிமுறைகளை வகுத்தே இதைக் கடக்க முடியும். மாற்றுத் தீர்வுகளோ உத்தரவாதங்களோ இல்லாத வெறும் அரசியல் கோசங்களால் இது போன்ற உணர்ச்சிகரமான விவகாரங்களைக் (sensitive issues) கையாள முடியாது.

**தமிழ்த்தேசியம் 'உள்வாங்கும் தேசியவாதமாக' (Inclusive Nationalism) கட்டமைக்கப்படவில்லை. அதனால்தான் அதற்குள் மத, சாதி, பால், பிரதேச வேறுபாடுகள் இன்னும் முற்றிய நிலையில் உள்ளன என்று முன்பொரு நேர்காணலில் குறிப்பிட்டுள்ளீர்கள். இதற்கான காரணம் என்ன?**

தேசியவாதங்கள் குறித்து மறுவாசிப்புச் செய்ய வேண்டிய காலத்திலேயே நாம் இருக்கிறோம்.

தமிழ்த் தேசியவாதம் என்பது ஒற்றைத் தன்மையானது அல்ல. பல தமிழ்த் தேசியங்கள் இருந்தன. வைதீக தமிழ்த் தேசியம் தொடக்கம் முற்போக்குப் பண்புடைய தமிழ்த் தேசியம் வரை, பல வகையான தமிழ்த் தேசியங்கள் கட்டமைக்கப்பட்டன. இவற்றுள் பெருவாரியாக செல்வாக்குச் செலுத்திய தமிழ்த் தேசியம் உள்வாங்கும் தேசியமாக கட்டமைக்கப்படவில்லை என்பது ஒரு முக்கியமான வரலாற்றுத் தவறு.

நீங்கள் சொல்லியிருப்பது போல மத, சாதி, பால் மற்றும் பிரதேச வேறுபாடுகள் குறித்த ஆழ்ந்த கரிசனையோ கோட்பாட்டு விவாதங்களோ முன்னிலையில் இருந்த போராட்டக் குழுக்கள் மத்தியில் போதியளவு இடம்பெற்றிருக்கவில்லை. சில தரப்பினர் அதை ஆழமாக விவாதித்தாலும், ஆரம்ப கட்டத்தில் அவற்றுக்கு உரிய இடமோ முக்கியத்துவமோ கொடுக்கப்படவில்லை. ஒடுக்கப்பட்டோரை நபர்களாக உள்வாங்குதல் என்பது வேறு, ஒடுக்கும் கருத்தியலான சாதியத்தை எவ்வாறு அணுகுவது என்பது வேறு. முஸ்லிம்களை, பெண்களை, கிழக்குத் தமிழரை நபர்களாக உள்வாங்குவதும் அவர்கள் சார்ந்த கருத்துநிலைகளைப் புரிந்து உள்வாங்குவதும் வெவ்வேறு அம்சங்கள்.

1980 களில் தமிழ்த் தேசியம் இதைப் புரிந்து கொண்ட முறையும் 2000 களில் புரிந்து கொண்ட முறையும் ஒன்றல்ல. இதற்கிடையே எவ்வளவோ நடந்து விட்டன.

ஆழமான புரிதலின்மை, ஆயுதப் போராட்டத்தை முதன்மைப்படுத்தியது, மற்றைய விடயங்களைப் பின்னர் பார்ப்போம் என்று ஒத்திப் போடும் வகையில் அணுகியது, அரசியல் முதிர்ச்சி போதாமை, கோட்பாட்டுத் தெளிவின்மை, ஒருவிதமான இராணுவ சாகசவாதம், அரசியல் பரிமாணத்தைக் குறைத்து மதிப்பிட்டமை, சக சமூகங்கள் பற்றிய போதிய புரிதலின்மை, அகப் பன்மைத்துவத்தை ஆழ்ந்து நோக்காமை போன்றனவே இதற்கான காரணங்கள்.

அரசியல் கட்சிகள் இளைஞர்களை உசுப்பேத்தி விட்டது கூட இதற்குக் காரணம்தான். தமிழ்த் தேசிய அரசியலை முன்னெடுத்த தளத்தில் இயங்கிய அறிவுஜீவிகளின் பங்களிப்பின் போதாமை அல்லது அவர்களது கருத்துகள் மேலெழ முடியாமல் இருந்த சூழல் கூட இதற்குப் பங்களித்திருக்கிறது.

**இனப்பிரச்சினைத் தீர்வுக்கு பெரும்பாலான தமிழ்த்தரப்பினர் இந்தியாவைச் சார்ந்திருக்கின்றனர். அல்லது இந்தியாவின் அனுசரணை வேண்டும் என்று சொல்கின்றனர். முஸ்லிம்களின் நிலைப்பாடு என்ன? இந்தியாவுடன் அவர்களுடைய அணுகுமுறை எப்படி உள்ளது?**

பெரிய நாடுகளின் பூகோள அரசியல் தலையீடும் செல்வாக்கும் தவிர்க்க இயலாதவை. தமிழர்கள் இந்தியாவை முழுமையாகச் சார்ந்திருந்ததால் முஸ்லிம் அரசியல் தரப்பும் சிவில் சமூகமும், இந்தியா குறித்து பெரியளவு நம்பிக்கை கொள்ளவில்லை. இந்திய- இலங்கை ஒப்பந்தம் முஸ்லிம்கள் குறித்து எந்த அக்கறையையும் காண்பிக்கவில்லை.

இந்திய - இலங்கை ஒப்பந்தத்தின் பிரகாரம் இணைந்த வடக்கு-கிழக்கு மாகாண சபை உருவானபோது முஸ்லிம்கள் மத்தியில் தங்களது எதிர்காலம் குறித்த அச்சம் ஏற்பட்டது.

கிழக்கு மாகாணத்தில் 33% மாக இருந்த முஸ்லிம் சனத்தொகை, இணைந்த வடக்கு-கிழக்கு மாகாணத்தில் 17% ஆகக் குறுகியது.

இது அதிகாரச் சமநிலையில் (Balance of Power) மிகவும் பாரதூரமான தாக்கத்தை ஏற்படுத்தியது.

மறைந்த முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் மர்ஹூம் எம்.எச்.எம்.அஷ்ரஃப், அப்போது இதனைப் பட்டிதொட்டியெல்லாம் பிரசாரம் செய்தார். முஸ்லிம் மக்கள் மத்தியில் இதுவே முதன்மையான பேசுபொருளாக இருந்தது.

தங்களோடு பேசாமல் இரவோடிரவாக தங்களது அரசியல் தலைவிதியை மாற்றி எழுத முனைந்த இந்த அரசியல் திணிப்பை முஸ்லிம்கள் - குறிப்பாக கிழக்கு முஸ்லிம்கள் ஏற்கவில்லை.

இந்தியாவின் வகிபாகம் பற்றிய சந்தேகம் இங்கிருந்துதான் தொடங்கியது.

ஆனால், கால ஓட்டத்தில் இதில் மாறுதல்கள் உருவாகின. முஸ்லிம் காங்கிரஸ் இந்திய அனுசரணையோடு மாகாணசபைத் தேர்தலில் போட்டியிட்டது அனைவரும் நன்கறிந்ததே.

பின்னாட்களில் பூகோள அரசியல் யதார்த்தங்களைப் புரிந்து கொண்ட மர்ஹூம் எம்.எச்.எம்.அஷ்ரஃப், இந்தியாவுடன் நட்பு அரசியலைத் தொடரும் விதமாகவே, தனது கட்சியின் வெளியுறவுக் கொள்கையை வடிவமைத்தார்.

எனினும், இந்தியா தொடர்பாக முஸ்லிம் சமூக அரசியல் தளத்தில் ஒரு மயக்கமான பார்வையே நிலவுகிறது. தங்களது அரசியல் அபிலாசைகளை அடைவதில் இந்தியா எவ்வாறான பங்கை வகிக்கும் என்ற சந்தேகப் பார்வை நிலவவே செய்கிறது.

**தமிழர்கள் ஒரு தேசமாக எழ வேண்டும் என்று ஒரு பக்கத்தில் தமிழ்த்தேசியவாதிகள் சொல்கின்றனர். இன்னொரு பக்கத்தில் முஸ்லிம்கள் தேசமாக நிற்க வேண்டும் என்று முஸ்லிம் தரப்பில் வலியுறுத்தப்படுகிறது. எதிரெதிர் நிலையில் இவற்றின் சாத்தியங்கள், இவை உண்டாக்கப் போகும் விளைவுகள்?**

தேசியவாதம் பெரிதும் புறந்தள்ளும் கோட்பாடாகவே இங்கு வளர்ந்திருக்கிறது. ஒரு தேசியம் இன்னொரு தேசியத்தை எதிரியாகவே பார்க்கப் பழகியிருக்கிறது. இது எதிர்கால இலங்கைக்கு மிகவும் ஆபத்தானது.

ஒவ்வொரு தரப்பும் தத்தமது தனித்துவங்களைப் பேண நினைப்பதில் தவறில்லை. ஆனால், இணங்கி வாழ்கிற சமூக - அரசியல் புரிதலும் தெளிவும் மிகமிக அவசியம். நேச சக்திகளாக இருக்க வேண்டியவர்கள், ஏன் பகைமுரணை வளர்க்க வேண்டும்?

இந்த ஆபத்தான கூறுகளை நாம் களைய வேண்டும். பரஸ்பரம் நல்லிணக்கமும் ஆக்கபூர்வமான ஊடாட்டமும் அதிகரிக்க வேண்டும்.

குறிப்பாக, பின் போர்க்கால இலங்கையில் பகைமறப்பு என்பது மிகமிக இன்றியமையாதது என்பதை தொடர்ந்தும் நான் வலியுறுத்தி வருவது இதனால்தான்.

இதன் பாரதூரத்தை மக்கள் இப்போது புரிந்து கொள்ள மாட்டார்கள். ஆனால், காலம் தாழ்த்தி இதற்காக மிகவும் வருந்துவார்கள்.

பின்காலனிய இலங்கையின் 75 வருட வரலாறு நம் கண் முன்னே சாட்சியமாக நிற்கிறது. சுதேசிகளின் கையில் இலங்கை கிடைத்த பின்னர், இங்கு பலரும் ஆடிய ஆட்டம், இலங்கையராகிய நம்மை எங்கு கொண்டு வந்து நிறுத்தியிருக்கிறது என்பதை நாம் இப்போது நன்கு உணர்கிறோம்.

இதேபோன்ற இன்னொரு பெருந்துயர் நமக்குத் தேவையா?

வரலாற்றின் பிரிசந்தியில் நிற்கிறோம் என்பதை பிரக்ஞைபூர்வமாக உணர வேண்டும். நமது அணுகுமுறைகள் மாற வேண்டும்.

**தமிழ் - முஸ்லிம் உறவை வெறும் அரசியல் கட்சிகளின் லாபநட்டக் கணக்குகளுக்கு அப்பால் சமூக உறவாக வளர்த்தெடுப்பது அல்லது மீள்நிலைப்படுத்துவது எப்படி?**

இதுதான் இப்போது நம் முன்னே உள்ள பாரிய சவால். வரலாற்று ஓட்டத்தில் சமூகங்களிடையே முரண்பாடுகள் தோன்றுவது தவிர்க்க இயலாதது. ஆனால், அவற்றை எவ்வாறு எதிர்கொள்கிறோம் - கையாள்கிறோம் என்பதுதான் முதன்மையான பிரச்சினை.

ஒரு பிரதேசத்தில் உருவாகும் பிரச்சினையைப் பொதுமைப்படுத்த முயற்சிக்கக் கூடாது.

அரசியல் கட்சிகள் முரண்களை ஊதிப்பெருக்கிக் காட்டுகின்றன. அதன் அளவையும் பரிமாணத்தையும் உருப்பெருக்கிக் காட்டுவதன் மூலமே தமது அரசியல் இருப்பைத் தக்க வைத்துக் கொள்ள முயல்கின்றன.

இதை முறியடிக்க வேண்டும்.இதற்கு சமூக மட்டத்திலான உறவாடல்கள் பாரியளவில் அதிகரிக்கப்பட வேண்டும்.

போர்க் காலத்தில் இயங்கிய சமாதான சபைகள் மூலம் பல நல்ல விளைவுகள் கிடைத்த அனுபவங்கள் நமக்கு உள்ளன.

அதுபோல இலக்கியம் ஒரு முக்கியமான நல்லிணக்க - ஊடாட்டக் களமாக உள்ளது.

பரஸ்பரம் நலிந்த தரப்பினரைக் கைதூக்கி விடும் - அவர்களுக்கு சமூகப் பாதுகாப்பு (Social Security) வழங்கும் செயற்பாடுகளும் இதற்குப் பெரிதும் உதவும்.

சமூக - பொருளாதார நோக்கில், பரஸ்பரம் ஒருவர் இன்னொருவரில் தங்கி வாழும் போக்கே இங்குள்ளது. சமூகங்களிடையிலான தங்கி வாழும் இடையீடுகள் (Inter-dependency) வளர்த்தெடுக்கப்பட வேண்டும்.

சகவாழ்வு ஒரு வாழ்தல் முறையாக மலர்தல் வேண்டும். வெறுமனே அரச சார்பற்ற நிறுவனங்களின் கருத்திட்டங்களாக அவை குறுகி விடுமாயின், எதிர்பார்க்கப்படும் நல்லிணக்கத்தை அடைய மிகவும் சிரமப்பட வேண்டி வரும்.

பாடசாலை மட்டத்திலிருந்தே இந்தக் கருத்து ஊக்குவிக்கப்பட வேண்டும். இலங்கையில் இன, மத ரீதியான பாடசாலை முறையில் மாற்றம் கொண்டுவரப்பட வேண்டும்.

பல்கலாசாரம் ஒரு பாடமாக, கலைத்திட்டத்தில் உள்வாங்கப்பட வேண்டும். கலாசாரப் புரிதல் (Cultiral Understanding) அதிகரிக்கப்பட வேண்டும்.

**தமிழ், முஸ்லிம், மலையக மக்களைப் பிரதிநிதித்துவப்படுத்தும் அரசியற் சக்திகள் (கட்சிகள்) குறைந்த பட்சம் அவசியமான வேலைத்திட்டத்தின் கீழ் ஒருங்கிணைந்து செயற்படத் தயங்குவதேன்?**

இதுதான் இங்குள்ள மிக முக்கியமான பிரச்சினை. தமிழ், முஸ்லிம், மக்களைப் பிரதிநிதித்துவம் செய்யும் கட்சிகளின் அரசியல் வறுமை நிலையையே (Political Poverty) இது காட்டுகிறது.

எங்களுக்குப் பிரச்சினைகள் இருக்கின்றன எனச் சொல்வது உண்மைதான். ஆனால், அவை என்னென்ன, எவ்வாறானவை என்று அடையாளம் காண்பது ஆரம்ப அடிப்படை. அதிலிருந்து பிரச்சினைகளை வகைப்படுத்தி தீர்வை நோக்கிப் பயணிக்கலாம்.

எல்லோரும் குறைந்தபட்ச பொதுப் புரிதலைக் (Minimum Common Understanding) கண்டடைவது அப்போதுதான் சாத்தியம்.

இதில் ஆய்வு, தொடர் பேச்சுவார்த்தை, விட்டுக் கொடுப்பு என்பன மிகமிக அவசியம்.

ஆனால், இந்தக்கட்சிகள் பெரும்பாலும் தொலைநோக்கோடு இயங்குவதில்லை. தாம் சார்ந்த சமூகத் தளத்தோடு மட்டும் சுருங்கி விடுகின்றன.

அதிலும் கூட, பிச்சைக்காரன் புண்ணாகவே பிரச்சினைகளைக் கையாளுகின்றன.

பெரும்பாலும் பிரச்சினைகளைத் தீர்ப்பதில் அவை அக்கறை கொள்வதில்லை. இன்னொரு பாஷையில் சொன்னால் அவை இந்தப் பிரச்சினைகளில்தான் வாழ்கின்றன. பிரச்சினைகளைத் தீர்ப்பது என்பது, இவ்வாறான அரசியல் கட்சிகளின் இருப்பிற்கு சவாலானது.

சொந்த சமூகத்தின் பிரச்சினைகளையே இவை பார்க்கும் போது, சக சமூகங்களின் பிரச்சினையை எப்படிப் பார்க்கும் என்பதைச் சொல்லித் தெரிய வேண்டியதில்லை.

இன்னும் ஒரு படி மேலே போய், சக சமூகங்களுடனான பிரச்சினைகளை ஊதிப் பெருக்கும் கட்சிகளையும் காண்கிறோம்.

தொலைநோக்கற்ற இவ்வாறான அரசியல் கட்சிகள் நமக்கு வரமாக அமையாவிட்டாலும் பரவாயில்லை, சாபமாக அமையக் கூடாது என்ற பதைபதைப்பில்தான் இலங்கையின் நடைமுறை அரசியல் களம் இயங்குகிறது.

**பிளவுண்டிருக்கும் இலங்கைச் சமூகங்களை ஒருங்கிணைப்பது எப்படி? அதற்கான சாத்தியங்கள் உண்டா?**

நிச்சயமாக உண்டு. அந்த நம்பிக்கையின் மெல்லிய ஒளிக்கீற்றும் இல்லாவிட்டால், இலங்கை இருண்ட எதிர்காலத்தில் தான் பயணிக்கும்.

காலனித்துவ காலத்தில் ஊன்றப்பட்ட விதைதான் நம்மைப் பிரித்தது, பின்காலனிய இலங்கையை சுதந்திர இலங்கையாக நம்மால் மனதார ஏற்க முடிகிறதா?

ஆழமான இனப்பிளவும் துருவமயமாதலும் (Ethnic Polorization), சுதந்திர இலங்கையைத் தின்று அழித்து விட்டன.

பின் போர்க் காலத்தையாவது சரியாகக் கையாளத் தெரிந்ததா? இப்பொழுது வங்குரோத்து நிலையை அடைந்து நடுத்தெருவில் பிச்சைப் பாத்திரம் ஏந்தி நிற்கிறோம்.

இந்த நாட்டை மாறி மாறி ஆண்டோர், நம்மை இங்கேதான் கொண்டு வந்து நிறுத்தியிருக்கின்றனர்.

பிளவுண்டு, தூரமாகித் துருவமயமாகி நிற்கும் இலங்கையிலிருந்து தப்பி ஓடுவதா தீர்வு?

இல்லை. மீண்டு எழுவதுதான் தீர்வு. எல்லோரும் நம்பிக்கை இழந்திருக்கும் நிலையில், நம்பிக்கையை உருவாக்குவதுதான் வரலாற்றுக் கடமை. அதுதான் மிகச் சிறந்த தலைமைத்துவப் பண்பு.

புதிய தலைமுறை இலங்கையர்களிடம்தான் அதை அதிகம் எதிர்பார்க்கிறேன். கடந்த காலத்தின் இருட்குகைக்குள் பயணித்தோரால் அது சாத்தியமில்லை.

ஹிரோஷிமாவிலூம் நாகசாகியிலும் அழிந்து போன ஜப்பான் மீண்டெழுந்தது போன்ற ஒரு மீள் எழுச்சி நமக்குத் தேவை.

எதுவும் சாத்தியமில்லை என்போர் வரலாற்று இயங்கியல் பற்றிய குறை அறிவுடையோர்.

அடுத்த பத்தாண்டுகள் நமக்குக் கடினமாக இருக்கலாம். ஆனால், அதற்கடுத்த பத்தாண்டுகள் புதிய வாயில்களைத் திறக்கும் என்று நம்புவோம்.

போரின் பேரழிவும் இனவெறுப்பின் வஞ்சகமும் களைந்த, ஒரு புதிய தலைமுறையை உருவாக்கினால்தான் இது சாத்தியம். இது சவால்தான். கடினமான பணிதான். ஆனால், இதைவிட நமக்கு வேறு தெரிவு இல்லை.

**சிங்களத் தேசியவாதம், தமிழ்த் தேசியம், முஸ்லிம் தேசியம், மலையகத் தேசியம் என்று இன்று தேசியவாத உணர்வு கூர்மையடைந்துள்ளது. இந்தச் சூழலில் தேசிய நல்லிணக்கத்தையும் பகை மறப்பையும் எட்டுவது எப்படி?**

இவ்வாறான தேசியவாதங்கள் நமக்கு எவ்வளவு தூரம் உதவும் என்று தெரியவில்லை. கூர்மையடைந்து விலகிச் செல்கிற அளவுக்கு, அவை நெருங்கி வரவில்லை என்ற யதார்த்த நிலைதான் மிகுந்த கவலையைத் தருகிறது.

இந்தப் பின்புலத்தில் இலங்கையிலுள்ள தேசியங்களை, அரசியல் சமூகங்கள் (Polity) என்று வகைப்படுத்தி நோக்குவது சிறந்ததோ என்று எண்ணத் தோன்றுகிறது.

தேசிய நல்லிணக்கம் என்பது, பெரிதும் சிவில் சமூக முன்னெடுப்புகளிலேயே தங்கியிருக்கிறது. கட்சி அரசியல் இதில் பெரிதாக உதவும் என்ற நம்பிக்கை நமக்கு இல்லை.

இங்கு தேவைப்படுவது இணைப்புப் பாலமாக செயற்படுவதுதான் (Bridge-buildiing Role). இதற்கான சூழமைவை நாம் உருவாக்க வேண்டும்.

சந்திரிக்காவின் முதலாவது பதவிக் காலத்தில் வெண்தாமரை இயக்கம், சமாதானம் என்பன பேசுபொருளாக இருந்தன. ராஜபக்ச ஆட்சியில் போரே பிரதான பேசுபொருளாக இருந்தது.

போருக்குப் பிந்திய இலங்கையில், பகைமறப்பும் சமூகங்களிடையிலான மீள் இணக்கமுமே பிரதான பேசுபொருளாக ஆகியிருக்க வேண்டும்.

ஆனால், இங்கு பெரும்பான்மைவாதமே (Majoritarianism) தூக்கலாக முன்னிறுத்தப்பட்டது. எண்ணிக்கைச் சிறுபான்மைச் சமூகங்கள் மத்தியில் அச்சம் விதைக்கப்பட்டது. புதிய எதிரிகள் கட்டமைக்கப்பட்டார்கள்.

(20ஆம் பக்கம் பார்க்க)

# மணிப்பூர் கலவரம்: வகுப்புவாத அரசியலின் விரிவாக்கம்



அ.பாக்கியம்

இந்தியாவின் வடகிழக்கில் உள்ள மணிப்பூர் மாநிலம் மே 3 திகதியிலிருந்து கலவரத்தீயில் கருகிக் கொண்டிருக்கிறது. வளம் நிறைந்த பள்ளத்தாக்கும், பசுமை நிறைந்த காடுகளும் கலவரத் தீ ஜுவாலைகளால் தங்களது நிறத்தை இழந்துவிட்டன. மாநிலத்தை ஆட்சி செய்யும் பிரேன்சிங் தலைமையிலான பா.ஜ.க.தான் இதற்குக் காரணம் என்று பலரும் குற்றம் சாட்டுகின்றனர்.

மணிப்பூர் மாநிலத்தில் இதற்கு முன்பும் இனக்குழுக்களுக்கு இடையே மோதல்கள் நடைபெற்றுள்ளன. கடந்த 1950 ஆம் ஆண்டு முதல் ஆயிரத்துக்கும் மேற்பட்ட மோதல்கள் நடைபெற்றுள்ளன. ஆனால், தற்போதைய மோதல், ஆட்சியில் இருப்பவர்களின் வாக்குவங்கி அரசியலுக்காக உருவாக்கப்பட்டது என்றே சொல்ல வேண்டும்.

மணிப்பூர் இந்தியாவின் வடகிழக்கில் உள்ள ஒரு மாநிலம். இம்பால் அதன் தலைநகரம். வடக்கே நாகாலாந்து, தெற்கில் மிசோரம், மேற்கில் அசாம், கிழக்கே மியான்மர் நாட்டின் சாகாயிங் பிராந்தியத்தை எல்லையாக கொண்டு அமைந்திருக்கிறது. சுமார் 8,621 சதுரமைல் பரப்பளவு உள்ளது. 1926 முதல் பிரிட்டிஷ் பர்மாவின் பக்கோக்கு மலைப்பகுதி மாவட்டத்துடன் இணைக்கப்பட்டிருந்தது

1949 ஒக்டோபர் 15 ஆம் திகதி மணிப்பூர் இந்தியாவின் ஒரு பகுதியாக இணைக்கப்பட்டது. மணிப்பூரின் மகாராஜா போதச்சந்திரா , ஷில்லாங்கிற்கு வரவழைக்கப்பட்டு இந்தியாவுடன் இணைக்கும் ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டார். 1956 ல் யூனியன் பிரதேசமாக அறிவிக்கப்பட்டது. 1971 இல் வடகிழக்கு பகுதிகள் மறுசீரமைப்புச் சட்டம் மூலமாக முழு அளவிலான மாநிலமாக உருவாக்கப்பட்டது. 2011 இல் மக்கள் தொகை சுமார் 28 லட்சம். இதில் 57 சதவீத மக்கள் பள்ளத்தாக்கு (சமவெளி) மாவட்டங்களிலும் 43 சதவீதம் மலை மாவட்டங்களிலும் வாழ்கிறார்கள்.

சமவெளிப் பகுதியில் மெய்தி மொழி பேசும் மக்களும் மலைப்பகுதியில் நாகா, குக்கி, ஜோமி என 35 அங்கீகரிக்கப்பட்ட இனக் குழுவினரும் வாழ்கின்றார்கள். சமவெளியில் வாழக்கூடிய மெய்தி மொழி பேசும் மக்கள் இந்துக்களாகவும், சிறுபகுதியினர் பங்கல்கள் என்று அழைக்கக்கூடிய இஸ்லாமியர்களாகவும் உள்ளனர். பழங்குடி மக்களில் பெரும்பகுதியினர் கிறிஸ்தவ மதத்தைச் சேர்ந்தவர்கள்.

மணிப்பூரில் மொத்தம் 60 சட்டமன்றத் தொகுதிகள் உள்ளன. இதில் 19 தொகுதிகள் பழங்குடியினப் பிரிவுக்கும் ஒரு தொகுதி தாழ்த்தப்பட்ட பிரிவுக்கும் ஒதுக்கப்பட்டது. 2022 ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் நடைபெற்ற சட்டமன்றத் தேர்தலில் பா.ஜ.க. 37 இடங்களையும், அதன் கூட்டணிக் கட்சி 17 இடங்களையும் கைப்பற்றி ஆட்சியமைத்தன. காங்கிரஸ் 5, ஜனதா தளம் 1 இடத்திலும் வெற்றி பெற்றுள்ளன.

மெய்தி இன மக்கள் கடந்த 2012 ஆம் ஆண்டு முதல் தங்களைப் பழங்குடி இனப்பட்டியலில் சேர்க்க மணிப்பூர் உயர்நீதிமன்றத்தில் வழக்குத் தொடுத்திருந்தனர். இந்த வழக்கில் ஏப்ரல் 20 ஆம் திகதி, தீர்ப்பளித்த நீதிபதி முரளிதரன் (இவர் தமிழகத்தில் இருந்து சென்றவர்), மெய்தி சமூகத்தை அட்டவணைப்படுத்தப்பட்ட பழங்குடியினர் பட்டியலில் சேர்க்க நான்கு வாரங்களுக்குள் மத்திய அரசுக்கு பரிந்துரை அனுப்ப வேண்டும் என்று மாநில அரசுக்கு உத்தரவிட்டார். இது பழங்குடி மக்களுக்கு அச்சத்தை உருவாக்கியது. ஏப்ரல் 28 அன்று முதலமைச்சர் பிரேன்சிங், சுராசந்த்பூர் மாவட்டத்தில் உடற்பயிற்சிக் கூடமொன்றைத் திறந்து வைக்க இருந்தார்.

நிகழ்ச்சிக்கு முதல் நாள் 27ஆம் திகதி, அந்த உடற்பயிற்சிக் கூடம் போராட்டக்காரர்களால் கொளுத்தப்பட்டது. இதையடுத்து முதல்வரின் நிகழ்ச்சி ரத்துச் செய்யப்பட்டது. உடனடியாக எட்டு மாவட்டங்களில் '144 தடை உத்தரவு' பிறப்பிக்கப்பட்டது. மணிப்பூர் உயர் நீதிமன்றத்தின் இந்தத்



தீர்ப்பை எதிர்த்து அனைத்து பழங்குடி மாணவர் சங்கம் (ATSUM) சார்பாக பழங்குடியினர் ஒற்றுமை அணிவகுப்பு நடத்த அழைப்பு விடுத்தது. மே 3 ஆம் திகதி அன்று சுராச்சந்துபூர் மாவட்டத்தில் பழங்குடி மாணவர்களின் பேரணியில் 60,000 க்கும் அதிகமானோர் கலந்து கொண்டனர். பேரணியைத் தொடர்ந்து கலவரமும் வெடிக்க ஆரம்பித்தது.

இம்பாலில் இருந்த 500க்கும் மேற்பட்ட பழங்குடியினரின் வீடுகள் எரித்து நாசமாக்கப்பட்டன. 27க்கும் மேற்பட்ட தேவாலயங்கள் எரிக்கப்பட்டன. 45 ஆயிரம் பேர் இடம்பெயர்ந்து சென்றுள்ளனர். வன்முறை தொடர்கிறது. 10,000 இராணுவ வீரர்கள் அங்கு நிலை நிறுத்தப்பட்டுள்ளனர். அரசியல் சட்டப் பிரிவு 355-ஐ அமுல்படுத்தி மாநிலத்தின் பாதுகாப்பு ஏற்பாடுகளை ஒன்றிய அரசு கையில் எடுத்துக் கொண்டது. மே 26 ஆம் திகதி வரை இணையத்தள முடக்கம் நீட்டிக்கப்பட்டது. இதற்கிடையில் பா.ஜ.க.வை சேர்ந்த எட்டு எம்.எல்.ஏ.க்களும், கூட்டணிக் கட்சியை சேர்ந்த இரண்டு எம்.எல்.ஏ.க்களும், பழங்குடி மக்களுக்கான தனி நிர்வாக அமைப்பை உருவாக்க வேண்டும் என்று அறிக்கை வெளியிட்டுள்ளனர். வன்முறையை அரசு மௌனமாக ஆதரிப்பதாகக் குற்றம் சாட்டினார்கள்.

மணிப்பூரில் ஏற்கனவே நடந்து வந்த பழங்குடி இன மக்களுக்கும் அரசுக்கும் இடையிலான மோதல் 2008 ஆம் ஆண்டு சமாதான உடன்படிக்கையின்படி முடிவுக்கு வந்தது. அரசு பழங்குடி இன மக்கள் மீது ஆயுதத் தாக்குதல் நடவடிக்கையை நிறுத்தியது. கடந்த மார்ச் மாதத்தில் அரசு இந்த ஒப்பந்தத்தை ரத்துச் செய்தது. இந்தப் பகுதியில் கஞ்சா பயிரிடுவதை ஒழிக்கிறோம் என்ற பெயராலும், மியான்மரில் இருந்து வந்து குடியேறியவர்களை விரட்டுகிறோம் என்ற பெயராலும், குக்கி, ஜோமி பழங்குடிமக்களை வாழ்விடங்களிலிருந்து விரட்டியது. இது பெரும் கொந்தளிப்பை ஏற்படுத்தியது. இந்தப் பின்னணியில் உயர் நீதிமன்றத் தீர்ப்பு எரிகிற நெருப்பில் எண்ணெய் ஊற்றுவதாக அமைந்தது.

பழங்குடி மக்கள் ஏன் இந்த இட ஒதுக்கீட்டை எதிர்க்கிறார்கள்? மாநிலத்தில் 83 சதவீதம் கரடு முரடான மலைப் பகுதியில் 42 சதவீதம் பழங்குடி மக்கள் வாழ்கிறார்கள். 17 சதவீதம் உள்ள சமவெளி நிலப்பரப்பில் 50 சதவீதம் மெய்தி இன மக்கள் வாழ்கிறார்கள். பொருளாதார ரீதியிலான செழிப்பும் அரசியல் ரீதியிலான செல்வாக்கும் உடையவர்களாக மெய்தி மக்கள் உள்ளார்கள். மணிப்பூர் சட்டமன்றத்தில் 40 பொதுத் தொகுதிகளிலும் மெய்தி இனத்தவர் வெற்றி பெற்றிருக்கிறார்கள். பழங்குடி மக்கள் 42 சதவீதம் இருந்தாலும் சட்டமன்றத்தில் அனைத்து பழங்குடியினருக்கும் சேர்ந்து 20 இடங்கள் (33%) மட்டுமே கிடைக்கின்றன.

நீதிமன்றத் தீர்ப்பின்படி மெய்திகளுக்கு இடஒதுக்கீடு கொடுத்தால் பழங்குடி மக்கள் தங்கள் வேலைவாய்ப்பு பறிக்கப்படும் என அஞ்சுகின்றனர். அவர்களுக்கு(மெய்தி இன மக்கள்) எஸ்சி, ஓபிசி, ஈடபிள்யுஎஸ் பிரிவுகளில் வேலை கிடைக்க வாய்ப்பு உள்ளது. பழங்குடி மக்களாகிய தங்களுக்கு இல்லை என்று அவர்கள் கருதுகின்றனர். மலைப்பகுதி நிலங்களை வாங்கும் உரிமை மெய்தி இனத்தினருக்கு கிடைத்தால், பழங்குடி மக்கள் தங்கள் வாழ்வுரிமை பறிக்கப்படும் என்றும் அஞ்சுகின்றனர். மாநிலத்தின் புவியியல் பகுதியில் 83 சதவீதம் பழங்குடியினப் பகுதிகள். ஆனால் மாநில அரசின் பட்ஜெட், மேம்பாட்டுப் பணிகளில் பெரும்பாலானவை மெய்தி ஆதிக்கம் செலுத்தும் இம்பால் பள்ளத்தாக்கிற்கு ஒதுக்கப்படுகின்றன.

மெய்தி மக்கள் ஏன் இந்த இட ஒதுக்கீட்டை கேட்கிறார்கள்? மூதாதை யர்களின் நிலம், பாரம்பரியம், கலாசாரம் என்பவற்றைப் பாதுகாக்க எஸ்டி பிரிவில் சேர்க்க வேண்டும். சுருங்கி வரும் இம்பால் பள்ளத்தாக்கில் பழங்குடிகள் நிலம் வாங்க முடியும் . மலைப்பகுதியில் மெய்தி மக்கள் வாங்க முடியாது. வெளிநாட்டினர் மலைகளில் குடியேறி வருகின்றனர். எங்களின் மக்கள் தொகை சுருங்கி வருகிறது என்று அவர்கள் தரப்பில் கூறுகின்றனர்.

மாநிலத்தில் உள்ள பா.ஜ.க. அரசு பழங்குடி மக்கள் கிறிஸ்தவர்கள் என்பதால் அவர்களுக்கு எதிராகவும், மெய்தி இன மக்கள் இந்துக்கள் என்பதால் அவர்களுக்கு ஆதரவாகவும் பகிரங்கமாகச் செயற்படுகிறது. மெய்திகள் தங்கள் அரசியல் செல்வாக்கின் மூலம் பழங்குடி மக்கள் மீது கடுமையான தாக்குதலை நடத்தி வருகின்றனர்.

மணிப்பூர் உயர் நீதிமன்றத் தீர்ப்புக்கு எதிராக மாநில அரசு மேல் முறையீடு செய்யவில்லை. இந்தத் தீர்ப்பை பழங்குடியினத் தலைவர் தின்காங்லுங் காங்க்மாய் கடுமையாக விமர்சனம் செய்தார். பழங்குடி மாணவர் அமைப்புத் தலைவரும் விமர்சித்தார். இதையடுத்து உயர் நீதிமன்றம், இருவர் மீதும் நீதிமன்ற அவமதிப்பு வழக்குத் தொடுத்து அவர்களை கோர்ட்டில் ஆஜராக்க வேண்டும் என்று டிஜிபிக்கு உத்தரவிட்டது. இந்தப் பின்னணியில் பழங்குடியினத் தலைவர் தின்காங்லுங் காங்க்மாய், மாண-வர் அமைப்பு தலைவர் ஆகியோர் உச்ச நீதிமன்றத்தில் மேல்முறையீடு செய்தனர். இவர்களின் மனுவில், உயர் நீதிமன்ற உத்தரவை எதிர்த்தும், தங்கள் மீதான நீதிமன்ற அவமதிப்பு வழக்கைத் தள்ளுபடி செய்யவும் கோரியிருந்தனர். மேலும், ஆளும் கட்சி ஆதரவுடன் பழங்குடி மக்கள் மீது தாக்குதல் நடத்தப்படுகின்றது, எனவே தேவாலயங்கள் உட்பட பழங்குடி மக்களின் அனைத்து வழிபாட்டுத் தலங்களுக்கும் பாதுகாப்பு உறுதி செய்யப்பட வேண்டும் என்றும் மனுவில் கூறியிருந்தனர்.

இந்த மனு மீது தீர்ப்பளித்த உச்ச நீதிமன்றத்தின் தலைமை நீதிபதி டி. ஒய். சந்திரசூட், "எந்த மாநில அரசுக்கும் அல்லது எந்த நீதிமன்றத்திற்கும் யார் யார் பழங்குடி மக்கள் என்று சேர்ப்பது சம்பந்தமான உத்தரவை அளிப்பதற்கு அதி-காரம் இல்லை என்று உச்ச நீதிமன்றத்தின் அரசமைப்பு அமர்வு ஏற்கனவே தீர்ப்பு சொல்லியுள்ளது என்பதை சுட்டிக் காண்பித்து உயர் நீதிமன்றம் அளித்த உத்தரவு தவறானது' என்று கூறியது மிகவும் முக்கியத்துவம் வாய்ந்தது.

(20ஆம் பக்கம் பார்க்க)


தாயக கலாசார
ஆபரணங்கள்
மெல்போர்ணில்...
லக்கி
நகைத் தொழிலகம்
LUCKY JEWELLERY
பொன்னுருக்குதல்
தாலி செய்தல்
கல்யாண மோதிரம்
காது குத்துதல்
தமிழ் எழுத்துகளில் ஆபரணங்கள்
திருத்த வேலைகள் உடனடியாக
14/38 Mccrae Street, Dandenong VIC3175
luckysankaran@gmail.com
LuckyJewelleryMelborne
0387121974, 0415233284

# தகவல் அதிகாரம் 2.0
## (தன்னுரிமை சட்ட சீர்திருத்தம்)



**ஆனந்தன் வசந்தா கிருஷ்ணமூர்த்தி**




உன் நண்பன் யாரென்று சொல், நீ யார் என்று சொல்கிறேன் "என்றொரு சொல் வழக்கு நம் முன்னோர் காலத்தில் இருந்தது. இப்போதைய காலங்களில் நமது நண்பர்கள் யார் ,நாம் எப்படிப்பட்டவர் என்றெல்லாம் எளிதாக அறிந்து கொள்ள முடியும். இந்த சமூக ஊடக காலங்களில் விருப்பக் குறிகளுக்காக (likes), நாம் கூடுமானவரை எல்லாவற்றையும் பகிர்ந்து கொள்கிறோம். நம்மைப்பற்றிய தகவல்கள் எவ்வாறு சேமிக்கப்படுகின்றன, எப்படியெல்லாம் உபயோகப்படுத்தப்படுகின்றன என்பதைப் பற்றிய பகிரங்கமாக உலகுக்கு வெளிச்சம் போட்டுக் காட்டிய social Dilemma என்கிற ஆவணப்படத்தை நாம் அனைவரும் பார்த்திருப்போம். அப்படி இதுவரை நீங்கள் பார்க்கவில்லையென்றால், Netflix தளத்தில் நுழைந்து பார்த்துவிடுங்கள் . அப்பொழுது தான் அதீத பகிரல் எவ்வளவு ஆபத்து என்று புரியும்."

" வரலாற்றில் இதற்கு முன்பு ஒருபோதும் இல்லாதபடி கூகிள், அப்பிள் மற்றும் பேஸ்புக் ஆகிய 3 நிறுவனங்களில் பணிபுரியும் ஒரு சில வடிவமைப்பாளர்களின் முடிவுகள், உலகெங்கிலும் உள்ள மில்லியன் கணக்கான மக்கள் தங்கள் கவனத்தை எவ்வாறு செலவிடுகிறார்கள் என்பதில் தாக்கத்தை ஏற்படுத்துகிறது" என்று கூகிள் நிறுவனத்தின் திட்டமுறை அறிவியலாளர் Tristan Harris சில ஆண்டுகளுக்கு முன் ஒரு கருத்தரங்கத்தில் தெரிவித்திருந்தார். "என்னைப் பற்றி எனக்கே தெரியாத பலவும் நீ அறிந்து நடப்பதை வியப்பேன் " என்று வேட்டையாடு விளையாடு படத்தில் வரும் பாடல் போன்று ,நமக்கே தெரியாத பல விடயங்களை மேற்கூறிய இந்த நிறுவனங்கள் தெரிந்து வைத்திருக்கின்றன.

இவ்வாறாக பொதுமக்களின் தகவல்களைத் திரட்டுதல், சேகரித்தல் மற்றும் அந்த விவரங்களை எவ்வாறு இந்த சமூக வலைத்தள நிறுவனங்கள் பயன்படுத்துகின்றன என்பது தொடர்பாக உலகெங்கும் பல்வேறு தன்னார்வலர்களும் ,இடித்துரைப்போர்களும் தொடர்ந்து குரலெழுப்பி வந்ததன் பலனாக பல்வேறு முன்னேற்பாடுகள் எடுக்கப்பட்டன. இதன் தொடர்ச்சியாக உலகெங்கும் பல்வேறு சட்டங்கள் கொண்டுவரப்பட்டன. குறிப்பாக ஐரோப்பிய யூனியனின் GDPR, கனடாவின் PIPEDA ,இந்தியாவின் PDP மற்றும் பல. கடந்த இரண்டு வருடங்களாக தொடர்ச்சியாக ஆஸ்திரேலியாவின் பல நிறுவனங்கள் கொந்தகர்களால் தகவல் திருட்டுக்கு (Optus, Medibank, Mydeal மற்றும் பல ) உள்ளாகி நாம் அனைவரும் ஏதோ வகையில் பாதிக்கப்பட்டிருப்போம். ஒரு கட்டத்தில் நாமே வடிவேலு பாணியில் 'நீங்க இன்னைக்கு திருட (Hack ) வரீங்க என்று சொன்னிங்க ..வரவேயில்லை 'என்று கேட்கும் நிலைக்கு வந்துவிட்டிருக்கும் வேதனை நிலைமைக்கு தள்ளப்பட்டிருக்கிறோம் என்று தான் சொல்லவேண்டும். இந்த நிலையில் கடந்த ஆண்டு பொறுப்பேற்ற அல்பனிஸ் அரசாங்கத்தில் தகவல் பாதுகாப்பிற்கு (Cyber Security) மிக முக்கியத்துவம் கொடுக்கப்பட்டு, அதற்கென தனி அமைச்சரும் நியமிக்கப்பட்டார். அதைத் தொடர்ந்து தன்னுரிமை பேணுவதற்குண்டான பல்வேறு சட்டதிட்டங்களுக்கான முன்னேற்பாடுகள் முடுக்கப்பட்டன. இதன் பலனாக தன்னுரிமைச் சட்டத் சீர்திருத்தம் முன்வரைவு 2.0 (இதற்கு முந்தைய சட்டமானது 1988 இல் நிறைவேற்றப்பட்டதாகும்) கடந்த பெப்ரவரி மாதம் வெளியிடப்பட்டது.

இந்த முன்வரைவானது 30 வகையான பிரிவுகளின் கீழே 116 பரிந்துரைகளை முன்வைத்திருக்கிறது. அட்டர்னி ஜெனரல் இந்த சீர்திருத்தங்கள் குறித்து கருத்து தெரிவிக்க கடந்த மார்ச் 31ஆம் திகதி வரை கெடு கொடுத்திருந்தார். இந்த சட்ட முன்வரைவு இந்த நாடாளுமன்ற ஆண்டிலேயே அதாவது 2023-2024 க்குள் சட்டமாக நிறைவேறவிருக்கிறது. தொடர்ந்து மின்னணு தகவல் பாதுகாப்பு ஆர்வலர்கள் அனைவரும் மிகவும் வரவேற்று சிறப்புடன் பேசி வருவது குறிப்பிட வேண்டிய விஷயமாகும். இந்தச் சட்டத்தின் மிக முக்கியமான பரிந்துரைகளை உற்று நோக்கினால் இதன் முக்கியத்துவம் நமக்கு விளங்கும்.

முன்மொழியப்பட்ட முக்கியமான சீர்திருத்தங்கள் பின்வருமாறு :

1. புதிய தனியுரிமைக் கொள்கை, தகவல் சேகரிப்பு அறிவிப்பு முறை மற்றும் பயநர் ஒப்புதல் முறைமைகள்: அதாவது பயநர்களிடமிருந்து தகவல் திரட்டும் போது அவர்களின் ஒப்புதல் கட்டாயம். இந்த ஒப்புதல் முறையானது மிக வெளிப்படையாகவும், எளிதாகப் புரிந்து கொள்ளும்படியும் இருக்க வேண்டும்.

2. விலக்குகளை நீக்குதல்: - முந்தைய 1988 ஆம் ஆண்டு சட்டமானது சிறு நிறுவனங்களுக்கு விலக்கு அளித்திருந்திருந்தது. இந்த முன்வரைவின் படி, ஆஸ்திரேலியாவிலுள்ள அனைத்து நிறுவனங்களும் தங்கள் தகவல் திரட்டுதல், சேமிப்பு மற்றும் பயன்பாடு தொடர்பாக ஒரே அளவிலான நடைமுறைகளைப் பின்பற்ற வேண்டும் . எந்த நிறுவனத்திற்கும் விதிவிலக்கு கிடையாது.

3. சந்தைப்படுத்தல், நேரடியான மற்றும் தரவு வர்த்தக வழிமுறைகள்: தகவல்களைச் சேகரிக்கும்போது பயநர்களை நேரடியாக அல்லது மறைமுகமாகவோ அடையாளப்படுத்தும் விபரங்களின் பயன்பாட்டு வழிமுறைகளில் கட்டுப்பாடு. தனிநபர்களை நேரடிச் சந்தைப் படுத்தல் மற்றும் நேரடி இலக்கான விளம்பரத்திலிருந்து விலகிக் கொள்ள முழு உரிமை உண்டு, மேலும் தனிப்பட்ட தகவல்ளைப் பயநர்களின் ஒப்புதலுடன் மட்டுமே பயன் படுத்தபடபட வேண்டும் .

4. பயநர்களுக்கு கூடுதலான உரிமைகள்: பயநர்களின் தனிப்பட்ட தகவல்களைக் கையாளுவதற்கு ஆட்சேபம் தெரிவிக்கும் உரிமையும் அடங்கும் தேடல் முடிவுகளை அழித்தல் மற்றும் வகைப்படுத்தல் மற்றும் அவர்களின் தனிப்பட்ட தகவல்கள் எவ்வாறு கையாளப்படுகின்றன என்பது பற்றிய விளக்கம் கேட்கும் உரிமையும் அடங்கும்.

5. எல்லை தாண்டிய தகவல்களை வெளியிடும் முறைகளை எளிமைப்படுத்தல்: பயநர்களின் தனிப்பட்ட தகவல்களை இணக்கமான முறையில் வெளிநாடுகளில் வெளிப்படுத்துவதை எளிதாக்குவதற்கான வழிமுறைகள் அறிமுகப்படுத்தப்பட உள்ளன.

6. குழந்தைகள் மற்றும் எளிதில் பாதிக்கப்படக்கூடிய நபர்கள் சார்ந்த புதிய வழிகாட்டு நெறிமுறைகள்: குழந்தைகள் தொடர்பாக தகவல் முறைமைகளில் கூடுதல் வெளிப்படைத்தன்மை தேவைகள், குழந்தைகள் தொடர்பாக எந்தவித சந்தைப்படுத்தலுக்கு நேரடித் தடைகள் மற்றும் எளிதில் பாதிப்படையக்கூடிய மக்களின் தனியுரிமையில் எந்தவித ஒப்புதல் இல்லாமல் குறுக்கீடுவதற்கு தடை.

7. தீர்வுகள்: தனியுரிமையில் தலையிடுவது தொடர்பாக பயநர் தனியுரிமைச் சட்டத்தின் கீழ் நடவடிக்கை எடுக்க நேரடி உரிமை உண்டு.

8. தகவல் பாதுகாப்பு, தக்கவைத்தல் மற்றும் தரவு கசிவு தொடர்பான விபரங்களைத் தெளிவுபடுத்தல்: பயநர்களின் தனிப்பட்ட மற்றும் அடையாளம் காணப்படாத தகவல்களைப் பாதுகாப்பது தொடர்பான 'நியாயமான வழிகளுக்கு ' தேவையான வழிகாட்டுதல்கள். எந்தவிதமான தரவு கசிவு தொடர்பான சம்பவங்களையும் 72 மணி நேரத்திற்குள் தகவல் ஆணையருக்கு தெரியப்படுத்துதல் , தரவுகளை தக்கவைத்தல் தொடர்பான அனைத்து சட்டங்களிலும் காணப்படும் தக்கவைப்பு தேவைகள் குறித்து அரசாங்கம் மறுஆய்வு செய்ய வேண்டும்.

9. அமுலாக்கம், அபராதம் மற்றும் OAIC அமைப்பின் அதிகாரங்கள்: ஆஸ்திரேலியா தகவல் செயல்துறைக் குழுமம் (OAIC – Office of Australia Information Commission) தொடர்பான புதிய நெறிமுறைகள் ,அதிகாரங்கள் தொடர்பான பரிந்துரைகள் . பல்வேறு அளவிலான அபராதம் விதிப்பதற்கான அதிகாரம் , தனியாக தகவல் ஏய்ப்பு தொடர்பான குற்றங்களுக்கு குற்றவியல் அமைப்பு நிறுவுதல், பயநர்களின் தனிப்பட்ட தகவல்களை பாதுக்காக்கும் பொருட்டு OAIC அமைப்புக்கு கூடுதல் அதிகாரங்கள் வழங்கிடும் நெறிமுறைகள்.

இப்படியான பல்வேறு பரிந்துரைகளின் மூலம் நமக்குத் தெரிய வருவது என்னவென்றால், "பயநருக்கு அவரது தரவுகளைப் பயன்படுத்துவதற்கும் மற்றும் கட்டுப்படுவதற்கும் தங்குதடையற்ற அதிகாரங்கள் வழங்குவதுடன், அவரது ஒப்புதலே இறுதியானதுமாகும்". ஆஸ்திரேலியர்கள் இலக்கு வைக்கப்பட்ட விளம்பரங்களில் இருந்து விலகுவது, அவர்களின் தரவை அழிப்பது மற்றும் தனியுரிமையின் கடுமையான மீறல் தொடர்பாக வழக்குத் தொடுக்கும் உரிமை உள்ளிட்ட தங்கள் தனிப்பட்ட தகவல்களின் மீது அதிக கட்டுப்பாட்டைப் பெறுகிறார்கள் .

ஆஸ்திரேலிய ஊடக நிறுவனங்கள் இந்த தனியுரிமைச் சட்டத்தை சீர்திருத்துவதற்கான முன்மொழிவை நிராகரித்துள்ளன, இந்த மாற்றங்கள் - தனியுரிமை மீதான கடுமையான நடவடிக்கைகள் மற்றும் நிறுவனங்கள் மீது வழக்குத் தொடுக்கும் உரிமை உட்பட அனைத்தும் பொது நலனுக்கு உகந்தவை அல்ல என்றும் இந்தச்சட்டங்கள் பத்திரிகைச் சுதந்திரத்திற்கு தீங்கு விளைவிக்கும் என்றும் எச்சரித்துள்ளன. அனைத்து ஊடக நிறுவனங்களும் ( the Guardian, News Corp, Nine, AAP, Free TV Australia, SBS மற்றும் ABC ) சேர்ந்து அறியும் உரிமை கூட்டணி ( Right to Know Coalition ) அமைப்பை ஏற்படுத்தியுள்ளன. இந்தக் கூட்டமைப்பு அரசாங்கம் கொண்டுவரத் தீர்மானிக்கும் சட்டத் திருத்தத்தைக் கடுமையாக எதிர்க்கின்றன. தெளிவாக வரையறுக்கப்பட்ட எந்தவித தேவை / நன்மைகள் இல்லாமல் இந்தச்சட்டங்கள் பத்திரிகைச் சுதந்திரம் மற்றும் இதழியல் மீதான பேரழிவுகரமான நடவடிக்கையாகும் " என்று குற்றம் சாட்டுகின்றன. இந்த முன்மொழிவுகளின் கீழ் ஊடகத்துறை பணம் மற்றும் நேர விரயத்தை உண்டாக்கும் சட்டச் சவால்களுக்கு ஆளாக நேரிடும் கடுமையான ஆபத்தும் உள்ளது என்றும் வலியுறுத்தியுள்ளன.

இந்த முன்னேற்பாடுகள் தன்னார்வலர்களால் எதிர்பார்த்தபடி, ஊடக உலகில் பெரும் சர்ச்சையை ஏற்படுத்தியுள்ளன. பேஸ்புக்கின் தாய் நிறுவனமான மெட்டா (Meta ) தனியுரிமைச் சட்டச் சீர்திருத்தங்களுக்கு ஆஸ்திரேலியா "அதிகப்படியான பரந்த" அணுகுமுறையை எடுக்கிறது என்று எச்சரித்துள்ளது, பயநர்களைப் பாதிக்கும் நேரடி விளம்பரங்கள் (Targeted Ads ) தொடர்பாக முன்மொழியப்பட்ட வரம்புகள், இலவச டிஜிட்டல் தளங்களுக்கு தீங்கு விளைவிக்கும் என்றும் இவ்வகையான கட்டுப்பாடுகள் எல்லோரையும் கட்டணம் செலுத்தி பயன்படுத்தும் சந்தா மாதிரிகளை (paid subscription) நோக்கி அவர்களைத் தள்ளக்கூடும் என்றும் கூறியுள்ளது. ரியல் எஸ்டேட் முகவர்கள் முன்மொழியப்பட்ட தனியுரிமைச் சட்ட மாற்றங்களுக்கு எதிராக குரல்கொடுத்திருக்கின்றனர் , வாடிக்கையாளர் மற்றும் வாடகைதாரர் தரவைப் பாதுகாப்பாக வைத்திருக்க சிறு வணிக நிறுவனங்கள் அதிக அளவு சிவப்பு நாடாவை எதிர்கொள்ளக்கூடாது என்றும் கூறுகின்றனர். இப்படி பல்வேறு தரப்புகளிலிருந்தும் எதிர்ப்புகள் வந்தபோதிலும் , அரசாங்கம் இந்தச் சீர்திருத்தங்களை சட்டமாக்க தொடர்ந்து முயற்சிகள் செய்து வருவது பாராட்டக்கூடிய விஷயமாகும்.

எத்தனை சட்டங்கள் வந்தாலும் நமது பாதுகாப்பு நமது கைகளில் தான் இருக்கின்றன. கணினி உலகில் ஒரு புகழ்பெற்ற சொல்லாடல் உண்டு. " இந்த உலகத்தில் எந்த விஷயமும் இலவசம் கிடையாது. அப்படி இலவசமாக எந்த சேவை யாவது கிடைக்குமென்றால் ,நீங்கள் தான் மூலப்பொருள். உங்களது தரவுகள் தான் மூலதனம் ".. நாம் எந்த அளவிற்கு நமது சொந்த விஷயங்களை சமூக ஊடகங்களில் பகிராமல் தவிர்க்கின்றோமோ, அந்த அளவிற்கு நமக்கு மன நிம்மதியும், பாதுகாப்பும் நிச்சயம். அதாவது உண்மையாக இருப்பதற்கும், அதீத அளவில் நம்மை பற்றி பகிர்ந்து கொள்வதற்கும் இடையே ஒரு மெல்லிய கோடு மட்டுமே உள்ளது. அந்த எல்லையைப் புரிந்து சமூக ஊடகங்களை மிகக்கவனமாக பயன்படுத்த முடிந்தால் ,பாட்ஷா படத்தில் சொல்வது போல "உங்கள் வாழ்க்கை என்றும் உங்கள் கைகளில் தான் ".

எதிரொலி
ஆஸ்திரேலியா
ETHIROLI



# “மலையகம் 200”

● கருணாகரன்

இந்தியாவிலிருந்து இலங்கைக்கு பெருந்தோட்டத் தொழிலாளர்களைப் பிரித்தானியர் அழைத்து வந்து 200 ஆண்டுகளாகிறது. (1823 - 2023) இந்த 200 ஆவது ஆண்டையொட்டி மலையகத்தைச் சேர்ந்த பல்வேறு தரப்புகள் “மலையகம் 200” என்ற நிகழ்வை இந்த ஆண்டு முழுவதும் நடத்துகின்றன.

இந்தியாவிலிருந்து இலங்கைக்குத் தொழிலாளர்களாகவும் வேறு காரணங்களுக்காகவும் ஆட்கள் வந்தாலும் 1823 இல்தான் பெருமளவு ஆட்களை இந்தியாவின் தமிழகப் பிராந்தியத்திலிருந்து இலங்கைக்குப் பிரித்தானியர் அழைத்து வந்துள்ளனர். இவர்களே இலங்கையின் பிரதான தொழிலாளர்களாக பயன்படுத்தப்பட்டுள்ளனர்.

தொடக்கத்தில் இவர்கள் வீதிகளை அமைப்பதற்குப் பயன்படுத்தப்பட்டார்கள், பின்னர் மலைநாட்டில் கோப்பிச் செய்கையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர். அன்று கோப்பி, கொக்கோ பயிர்ச்செய்கை பணப்பயிர்ச் செய்கையாக மேற்கொள்ளப்பட்டது.

1823 தொடக்கம் தொடர்ச்சியாக தமிழகத்திலிருந்து படகுகளிலும் கப்பல்களிலும் தலைமன்னார் வழியாகக் கொண்டு வரப்பட்டவர்கள் அன்றைய பிரித்தானிய ஆட்சியாளர்களால் மலையகத்துக்கு கால்நடையாகவே கொண்டு செல்லப்பட்டுள்ளனர். இந்தப் பயணம் மிகக் கொடியது. கறுப்பின மக்களை வெள்ளையர்கள் அடிமைகளாக வழிநடத்தியதற்கு ஒப்பானது. இதன்போது இந்த மக்கள் பட்ட அவலமும் துயரமும் கொஞ்சமல்ல.

இதைப்பற்றிய நாட்டார் பாடல்களும் இலக்கியப் பிரதிகளும் ஆய்வுகளும் ஏற்கனவே ஏராளமாக வந்துள்ளன. இந்தத் துயரக் கதையை பி.எச். டானியல் Red Tea என ஆங்கிலத்தில் நாவலாக எழுதியிருந்தார். பின்னர் இது இரா. முருகவேளின் மொழிபெயர்ப்பில் “எரியும் பனிக்காடு” எனத் தமிழில் வந்திருந்தது. இதைத் தழுவி “பரதேசி” என்ற



பெயரில் பாலா திரைப்படமாக எடுத்திருந்தார்.

இந்தத் துயரக்கதை இந்தியா, இலங்கை, மலேசியா, பர்மா, தென்னாபிரிக்கா எங்கும் தொடர்ந்தது. நாம் எட்டித் தொட்டுவிடக் கூடிய 200 ஆண்டுகளுக்குள் தென்னிந்தியாவிலிருந்து பிரித்தானியரால் அழைத்துச் செல்லப்பட்ட தொழிலாளர்களுக்கே இந்த அவலம் நேர்ந்துள்ளது. இது எவ்வளவு கொடுமை?

“மலையகம் 200“ என்ற நிகழ்வு இதை இப்பொழுது முறையாக ஆவணப்படுத்திக் காண்பித்துள்ளது.

மலையகம் 200 என்ற நிகழ்வைக் கடந்தவாரம் 19, 20, 20 ஆகிய மூன்று நாட்கள் நுவரெலியாவில் கண்டி சமூக அபிவிருத்தி நிலையம் பெரிய அளவில் நடத்தியது. இதில் 1823 லிருந்து மலையகத்துக்குக் கொண்டு வரப்பட்ட மக்களைப் பற்றிய விவரங்களை உள்ளடக்கிய கண்காட்சி முக்கியமாகக் காண்பிக்கப்பட்டிருந்தது.

இந்தத் துயர வரலாற்றைப் பிரதிபலிக்கும் வகையிலான ஓவியங்கள், புகைப்படங்கள் முதலாவதாகக் காட்சிப்படுத்தப்பட்டிருந்தன. பாதுகாப்பற்ற படகில் மேற்கொள்ளப்பட்ட பயணங்கள், அதில் ஒரு படகான அன்னலட்சுமி கடலில் மூழ்கியது, அதில் பயணித்தவர்களில் 140 க்கு மேற்பட்டவர்கள் பலியாகினார்கள். 14 சிப்பந்திகளில் ஒருவர் இறந்தார். அதைப்போல இன்னொரு கப்பல் சிலாபம் கடலில் கவிழ்ந்துள்ளது. அதிலும் பலர் பலியாகியிருக்கிறார்கள்.

இதைப்போல தலைமன்னாரில் தரையிறங்கியவர்கள், அங்கிருந்து மாத்தளைக்குப் பயணித்த சித்திரங்கள் (இது பெரும்பாலும் ஓவியங்களாகவே உள்ளன), இலங்கையின் புகையிரதப் பாதைகளை அமைத்த காட்சிகள் (இவை அப்போதைய கறுப்பு வெள்ளைப் புகைப்படங்களாக உள்ளன) இந்த வரலாற்றையும் வாழ்க்கையையும் சித்திரிக்கும் வகையிலான சஞ்சிகைகள், நூல்கள், இந்த மக்களின் கலை சார்ந்த அடையாளங்கள், புழங்கிய பாத்திரங்கள், பயன்படுத்திய பொருட்கள், உடைகள் எனப் பலவும் இந்தக் காட்சியில் அடங்கியுள்ளன. இதை விட வரலாற்று ரீதியான புள்ளி விவரங்களும் சேர்க்கப்பட்டுள்ளன.

இன்னொன்று தனியே அமைக்கப்பட்ட ஓவியக் காட்சி.

இதில் மாணவர்கள் தொடக்கம் வளர்ந்தவர்கள் வரையானோரின் நூற்றுக்கு மேற்பட்ட ஓவியங்கள் காட்சிப்படுத்தப்பட்டிருந்தன. மலையக மக்களின் வாழ்க்கையையும் வரலாற்றையும் சித்திரிக்கும் பல நுட்பமான காட்சிகள் மனதைப் பதைப்படையச் செய்வனவாக இருந்தன. இதில் தமிழ் ஓவியர்கள் மட்டுமல்ல, சிங்கள ஓவியர்களும் சேர்ந்திருந்தனர்.

அடுத்தது, மலையக மக்களுக்கான நிர்வாக அலகுகளாக உள்ள பிரதேச செயலகம், பிரதேச சபை, இளைஞர் அமைப்புகள் எனப் பலவும் தனித்தனியாக அரங்குகளை அமைத்திருந்தன.

இன்னொரு அம்சமாக மலையகத் தமிழர்களின் வரலாற்றையும் வாழ்க்கையையும் பிரதிபலிக்கும் வகையில் எடுக்கப்பட்ட ஆவணக் காட்சிகளாகும். இதைத் தொடர்ந்து மூன்று நாட்களும் பார்வையிடக் கூடிய வகையில் காட்சிப்படுத்தல் மேற்கொள்ளப்பட்டிருந்தது.


இதற்கு அப்பால் முக்கியமானதாக இருந்தது, மூன்று நாட்களும் மேற்கொள்ளப்பட்டிருந்த கருத்தரங்காகும்.

மலையகத்தின் துறைசார் ஆளுமைகள், கல்வியாளர்கள், சமூகச் செயற்பாட்டியக்கத்தினர், புத்திஜீவிகள், அரசியல்வாதிகள், கலைஞர்கள் எனப் பல தரப்பினரும் பங்கேற்றிருந்தனர். இவர்களுடன் தமிழ் நாட்டிலிருந்தும் மலேசியாவிலிருந்தும் வந்திருந்த ஆய்வாளர்களும் தங்களுடைய முன்வைப்புகளைச் செய்தனர்.

மலையக மக்களாக இருந்து கொண்டு 200 ஆண்டுகளாக பிரிட்டிஸாருக்கும் பின்னர் இலங்கையர்களுக்குமாக உழைத்துக் கொண்டிருக்கும் உழைப்பாளிகளின் வாழ்க்கையைக் குறித்தே அதிகமும் பேசப்பட்டது. அவர்களுடைய வாழ்க்கை அடிப்படை உரிமைகளே இல்லாமல் 200 ஆண்டுகளாகத் தொடர்கிறது. அதன் இன்றைய நிலை என்ன? என்பதைக் குறித்தே ஒவ்வொரு அமர்வும் இருந்தது.

மலையகத்தின் கல்வி நிலை, அது எதிர்கொள்ளும் சவால்கள், எதிர்காலத்துக்கான கல்வியை எப்படி உருவாக்குவது என கல்வித்துறை சார்ந்த அமர்வில் விவாதிக்கப்பட்டது. இதனை மலையக சமூகத்திலிருந்து எழுச்சியடைந்து வந்திருக்கும் இளைய தலைமுறை அறிஞர்கள் மிகச் சிறப்பாக நடத்தினர். பலரும் பல்கலைக்கழகங்களில் விரிவுரையாளர்கள். குறிப்பாக யோகேஸ்வரி, சரவணகுமார், நவரட்ணராஜா, சந்திரபோஸ், ரமேஸ் போன்றோர் மிகச் சிறப்பான முறையில் தமது ஆய்வுகளையும் அவதானங்களையும் முன்வைத்தனர். காணியற்றோர் பிரச்சினை, வீட்டு வசதி, வீதி மற்றும் தொடர்பாடல், சம்பளம், அரசியல் உரிமைகள், பெண்களின் பிரத்தியேகப் பிரச்சினைகளும் அவர்களுக்கான





ஊதியமும், தனித்துவத்தைப் பேணும் வகையிலான கலை, பண்பாட்டு நடவடிக்கைகள், தொழில்வாய்ப்புகள் எனப் பல விடயங்களைப் பற்றியும் விரிவாக ஆராயப்பட்டது.

இது தொடர்பாக இந்தக் கருத்தரங்கில் கலந்து கொண்ட கலாநிதி ரமேஸ் தெரிவித்துள்ள கருத்துகள் நமது கவனத்துக்குரியவை. “மலையக மக்களின் பிரத்தியேக கலை, கலாசாரம், பண்பாடு, சமூக - பொருளாதார நிலை, அரசியல் போன்ற விடயங்களில் ஏற்பட்டிருக்கும் மாற்றங்கள், பின்னடைவுகள், செல்ல வேண்டிய தூரம் போன்ற விடயங்களை வெளிப்படுத்துவதாக அமையும். மலையக மக்களின் சமூக - பொருளாதார அரசியல் பிரச்சினைகள் தீவிர ஆய்வுக்கு உட்படுத்துவதானது அப்பிரச்சினைகளுக்கான தீர்வுகளை அடையாளம் காண்பதற்கும் அவற்றை சம்பந்தப்பட்ட தரப்பினருக்கு வழங்கி பரப்புரை செய்வதற்கும் பெரிதும் உதவும். கடந்த காலங்களில் ஆய்வுகள் ஊடாக பல முக்கிய பிரச்சினைகள் வெளிச்சத்துக்குக் கொண்டு வரப்பட்டதுடன், அவை கொள்கை பரப்புரைகளுக்கு பெரிதும் உதவின.

மலையக மக்களின் காணி மற்றும் வீட்டுரிமை தொடர்பான பிரச்சினைகள், பிரதேச சபை திருத்தச் சட்டம், சுகாதாரம், கல்வி, பிரதேச செயலகம் மற்றும் கிராம சேவகர் பிரிவுகளின் விஸ்தரிப்பு என்பவற்றினை உதாரணங்களாகக் குறிப்பிட முடியும். அந்த வகையில் இக்கட்டுரையானது 200 வருட நிகழ்வுகள் வெறுமனே நிகழ்வுகளாக முடிந்துவிடாமல் மலையக மக்களுக்கான ஒரு பொது வேலைத்திட்டத்தை உருவாக்க வேண்டியதன் அவசியத்தினை வலியுறுத்துவதாக அமைகின்றது. மலையக மக்களின் சமூக, பொருளாதார, அரசியல் நிலை எதிர்காலத்தில் எவ்வாறு இருக்க வேண்டும், எத்தகைய அபிவிருத்திப் பணிகள் மேற்கொள்ளப்பட வேண்டும், 200 வருடத்தில் இச்சமூகம் எட்டிய அடைவுகள் என்ன? தேசிய அபிவிருத்தி இலக்குகளை எட்டிப்பிடிக்க இன்னும் எவ்வளவு தூரம் பயணிக்க வேண்டும் போன்ற விடயங்கள் இந்த 200 வருட நிகழ்வுகளில் முன்னிலைப்படுத்திப் பார்க்கப்பட வேண்டும்.

200 வருட வரலாற்றை நினைவு கூரும் தருணத்தில் மலையக மக்களின் பிரச்சினைகளை இலங்கை சமூகத்தில் பெரிதும் அறியப்பட்ட ஒன்றாக காணப்படுகிறது. அரசியல் மற்றும் சிவில் சமூக மட்டத்தில் இது பேசப்படுகிறது. இவை முற்போக்கான அபிவிருத்தியாகும். மலையக மக்கள் தமது பிரச்சினைகளை, உரிமை மறுப்புகளை, கோரிக்கைகளை எல்லா இடங்களிலும் அச்சமின்றி முன்வைக்கின்றனர். இது குறித்து வாதப்பிரதிவாதங்கள் இடம்பெறுகின்றன. ஏனைய சமூகங்களில் காணப்படும் முற்போக்கான சக்திகள் மலையக சமூகம் தொடர்பான கரிசனைகளைத் தொடர்ந்தும் வெளிக்காட்டி வருகின்றன. அத்துடன், இம்மக்களின் கோரிக்கைகளுக்கு ஆதரவளிப்பதற்குத் தயாராக உள்ளனர். இவை சாதகமான அபிவிருத்தியாக இருந்தாலும் பெரும்பான்மை மக்கள் மத்தியில் ஒரு குறிப்பிட்ட பிரிவினர் மத்தியில் (சிங்கள -பௌத்த அடிப்படைவாதிகள்) மலையக மக்கள் தொடர்பாக ஒரு வகையான எதிர்ப்புணர்வு காணப்படுகின்றது என்பதையும் குறிப்பிட வேண்டும். இது இந்திய எதிர்ப்புவாதத்துடன் தொடர்புபட்டிருக்கிறது. இதனை மலையக மக்களுக்கான காணியுரிமையினை கோரும் போது அவதானிக்க முடியும்” என்பது இந்த வரலாற்றுக்கு முக்கியமான அடித்தளமாகும்.


2AUTOMATEANYTHING
ITS YOUR TIME TO TRANSFORM IN TO A TALENTED SOFTWARE ENGINEER IN JUST 6 MONTHS !!
JOB READY & INTERNSHIP TRAINING
GUARANTEE 100% GUARANTEE
2AutomateAnything, carefully designed this training for your career transformation !! We have done IT before for candidates from non-IT background and career breaks to transform their career in to IT with great salary ! Its your turn now !!
We offer :
Indepth Training & Experience
Hands on project experience
A great opportunity to get back to IT work
100% Placement Assistance
Training Streams :
Robotic Process Automation
Software Testing - Manual
Software Testing - Automation
Data Analyst & Business Intelligence
UiPath Partner
REGISTERED
FREE TRIAL
SCAN ME
www.2automateanything.com/services/education/professional-transform-program
1300 032 566
+61 478 248 476
www.2automateanything.com


CEYLON EXPRESS
MONEY TRANSFER
Best Rates Guarantee
Same Day Bank Transfer
Responsible Customer Support
Easy, Quick Internet Money Transfer
127, Walker st, Dandenong
CONTACT : OSMAN 0402 396 052

# ரணிலின் மாஸ்டர் பிளான்



தனக்குச் சாதகமான சூழ்நிலை இல்லை என்பதால் பொருளா-தார நெருக்கடி உள்ளிட்ட விவ காரங்களைக் காரணம்காட்டி, கீழே விழுந்தாலும் மீசையில் மண் ஒட்டவில்லையாம் என்ற பாணியில் கௌரவமாக குட்டித் தேர்தலைப் பிற்போட்டது ரணில் அரசு, எதிரணி கள் போராட்டங்களை நடத்தினாலும் இதுவிடயத்தில் முன்வைத்த காலை ரணில் பின்வைக்கவில்லை.

இதற்கிடையில் வரிசை யுகத்துக்கு முடிவு கட்டுதல், சர்வதேச நாணய நிதியத்திடம் இருந்து கடன் பெறு தல், கடன் மறுசீரமைப்பு உள்ளிட்ட முயற்சிகளில் ரணில் இறங்கினார். இந்த மூன்று விடயங்களிலும் அவர் தற்போது வெற்றிபெற்றுள்ளார். இதனால் மக்கள் மத்தியில் ரணில் தொடர்பில் நம்பிக்கை ஏற்பட்டுள்ளது.

● டிலக்ஷன்

இலங்கையில் 2023 மார்ச்சில் நடைபெறும் என அறிவிக்கப்பட்டிருந்த உள்ளாட்சிசபைத் தேர்தல் காலவரையறையின்றி பிற்போடப்பட்டுள்ளது. குறித்த தேர்தலை நடத்துமாறு அரசுக்கு எல்லா வழிகளிலும் ஆரம்பத்தில் அழுத்தங்களை பிரயோகித்துவந்த எதிரணிகளும் தற்போது இது விடயத்தில் 'ஆமைவேக' அணுகுமுறையையே பின்பற்றுகின்றன. இதனால் இவ்வருடத்துக்குள் குட்டித் தேர்தல் நடத்தப்படுவதற்கான சாத்தியமில்லை என்கின்றன கொழும்பு அரசியல் வட்டாரத் தகவல்கள்.

மறுபுறத்தில் மாகாணசபைத் தேர்தலை நடத்துமாறு தமிழர் தரப்பில் இருந்து அழுத்தங்கள் பிரயோகிக்கப்பட்டுவருகின்றன. டில்லியிடம் இருந்தும் இந்தக் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. ஆனால் மாகாணசபைத் தேர்தலைக்கூட உடனடியாக நடத்தும் நிலைப்பாட்டில் ரணில் அரசு இல்லை.

### அப்படியானால் ரணிலின் திட்டம் என்ன?

நாட்டில் ஏற்பட்டிருந்த அரசியல் குழப்பச் சூழ்நிலைக்கு மத்தியில் கடந்த மார்ச்சில் உள்ளாட்சிசபைத் தேர்தல் நடத்தப்பட்டிருந்தால் அரசுக்கு பின்னடைவு ஏற்பட்டிருக்கும். புலனாய்வு பிரிவுகள் ஏற்கனவே இது தொடர்பில் அறிக்கைகளைச் சமர்ப்பித்துவிட்டன. கருத்துக் கணிப்புகளிலும் இந்த விடயம் தெளிவானது.

தனக்குச் சாதகமான சூழ்நிலை இல்லை என்பதால் பொருளாதார நெருக்கடி உள்ளிட்ட விவகாரங்களைக் காரணம்காட்டி, கீழே விழுந்தாலும் மீசையில் மண் ஒட்டவில்லையாம் என்ற பாணியில் கௌரவமாக குட்டித் தேர்தலைப் பிற்போட்டது ரணில் அரசு, எதிரணிகள் போராட்டங்களை நடத்தினாலும் இதுவிடயத்தில் முன்வைத்த காலை ரணில் பின்வைக்கவில்லை.

இதற்கிடையில் வரிசை யுகத்துக்கு முடிவு கட்டுதல், சர்வதேச நாணய நிதியத்திடம் இருந்து கடன் பெறுதல், கடன் மறுசீரமைப்பு உள்ளிட்ட முயற்சிகளில் ரணில் இறங்கினார். இந்த மூன்று விடயங்களிலும் அவர் தற்போது வெற்றிபெற்றுள்ளார். இதனால் மக்கள் மத்தியில் ரணில் தொடர்பில் நம்பிக்கை ஏற்பட்டுள்ளது.

அண்மையில் நடத்தப்பட்ட கருத்துக் கணிப்பொன்றில் தனிநபர்களுக்குரிய அரசியல் செல்வாக்கில் ரணிலே முதலிடம் பிடித்துள்ளார். அவருக்கு அடுத்தபடியாக அநுர குமார திஸாநாயக்க இரண்டாவது இடத்தில் உள்ளார் எனத் தெரியவந்தது.

மறுபுறத்தில் தனக்கே உரிய பாணியில் எதிரணிகளைக் கூறுபோடும் 'குள்ளநரி' அரசியலையும் ரணில் திரைமறைவில் அரங்கேற்றிவருகின்றார். ஐக்கிய மக்கள் சக்தியின் உறுப்பினர்கள் சிலர் அவரிடம் சரணடைந்துவிட்டனர். மேலும் சிலர் தாவுவதற்கு தயார் நிலையில் இருக்கின்றனர். தமிழ் மற்றும் முஸ்லிம் உறுப்பினர்களும் ரணிலுடனான சங்கமத்துக்கு தருணம்பார்த்துக் காத்திருக்கின்றனர்.

இவ்வாறு காற்று தன் பக்கம் வீசும் சூழ்நிலையில் ஜனாதிபதித் தேர்தலை இவ்வருடத்துக்குள் அல்லது அடுத்த வருட ஆரம்பத்தில் நடத்துவதே ரணிலின் திட்டமாக உள்ளது. முன்கூட்டியே ஜனாதிபதித் தேர்தலை நடத்துவதற்காக ஏதேனும் சட்ட ஏற்பாடுகள் கொண்டுவரப்படும் பட்சத்தில் அதற்கு ஆதரவு வழங்க எதிரணிகள் தயார் என அறிவித்துவிட்டன. ஆக இலங்கையில் அடுத்து நடைபெறவுள்ளது ஜனாதிபதித் தேர்தலே என்பது ஏறத்தாழ உறுதியாகிவிட்டது. செப்ரெம்பர் மாதமளவில் ஐ.எம்.எப். பின் 2 ஆம் கட்ட நிதி உதவி கிடைத்த பிறகு ஜனாதிபதித் தேர்தலுக்கான முன்னோடியாக மக்களுக்கு பல உதவித் திட்டங்களை ஜனாதிபதி அறிவிக்கவுள்ளார்.

### மஹிந்தவின் தந்திரோபாயப் பின்வாங்கல்

அடுத்த ஜனாதிபதித் தேர்தலில் ரணில் விக்கிரமசிங்கவை பொது வேட்பாளராகக் களமிறக்கி அவருக்கு முழு ஆதரவை வழங்குவதற்கு மொட்டுக் கட்சி உறுப்பினர்கள் சிலர் முன்வந்துவிட்டனர். இது விடயம் தொடர்பில் அந்தக்கட்சி இன்னும் இறுதி முடிவை எடுக்காதபோதிலும் ரணிலை ஆதரிக்காவிட்டால் மொட்டுக் கட்சி மேலும் சிதறும் அபாயம் உள்ளது.

அடுத்த ஜனாதிபதித் தேர்தலில் மொட்டுக் கட்சி சார்பில் பஸில் ராஜபக்சவை வேட்பாளராகக் களமிறக்க ஒரு தரப்பு திட்டமிட்டுள்ளது. இதற்கு மஹிந்த ராஜபக்சவும் அவரின் குடும்பத்தாரும் இணங்கும் நிலையில் இல்லை. 2024 இல் நாமல் ராஜபக்சவை ஜனாதிபதித் தேர்தலில் களமிறக்குவதே மஹிந்தவின் திட்டமாகவே இருந்தது. நாமலை ஜனாதிபதியாக்கும் நோக்கிலேயே செயற்பாட்டு அரசியலுக்கு விடைகொடுக்காமல் மஹிந்த இருந்தார்.

தற்போதுகூட மஹிந்தவைப் பிரதமராக்குவதற்கு மொட்டுக் கட்சிக்குள் முயற்சிகள் எடுக்கப்படுகின்றன. இதன் பின்னணியில் பஸில் இருக்கிறார், பிரதமர் பதவியை ஏற்றால் அது நாமலின் அரசியலில் தாக்கத்தை ஏற்படுத்தும் என்பதால் தற்போது சில முடிவுகளை எடுப்பதில் மஹிந்த ராஜபக்ச தந்திரோபாயப் பின்வாங்கலை மேற்கொண்டுவருகின்றார். ரணிலை ஜனாதிபதியாக்கிவிட்டு, அடுத்த பொதுத்தேர்தல் ஊடாக நாமலைப் பிரதமராக்குவதற்கான எண்ணமும் மஹிந்த தரப்பிடம் உள்ளது.

### அநுரவின் சக்கர வியூகம்

மக்கள் போராட்ட காலத்தில் ஜே.வி.பி.யின் செல்வாக்கு மேலோங்கி இருந்தது. அதனைத் தக்கவைத்துக்கொள்வதில் அந்தக்கட்சி தீவிரம்காட்டிவருகின்றது. கடந்த காலங்களைவிட ஜே.வி.பி.யின் வாக்கு வங்கியிலும் அதிகரிப்பு ஏற்பட்டுள்ளது. மே தினக் கூட்டத்துக்குகூட ஜே.வி.பி.யின் நிகழ்விலேயே அதிகளவான மக்கள் பங்கேற்றனர் என புலனாய்வுப் பிரிவுத் தரவுகள் தெரிவிக்கின்றன. எனினும், ஆட்சியைப் பிடிப்பதற்கான கட்டம் நோக்கி ஜே.வி.பி. இன்னும் வரவில்லை. அந்தக் கட்டத்தை நோக்கி நகரவே ஜே.வி.பி. தலைமையிலான தேசிய மக்கள் சக்தி தற்போது சக்கர வியூகம் வகுத்துச் செயற்படுகின்றது. இலங்கையில் மிதக்கும் வாக்கு வங்கியிலேயே பெருமளவு வாக்குகள் ஜே.வி.பி. பக்கம் சாய்ந்துள்ளன. பாரம்பரிய வாக்கு வங்கியை உடைத்து தன்பக்கமாக மடைமாற்றுவதற்கு அந்தக்கட்சி இன்னமும் தீவிரமாகச் செயற்பட வேண்டியுள்ளது.

### பீட்டர் டட்டன் வழியில் சஜித்

நாடாளுமன்ற ஆட்சி முறைமையில் எதிர்க்கட்சித் தலைவர் பதவியென்பது முக்கியத்துவம்மிக்கது. எதிர்க்கட்சித் தலைவரே நிழல் பிரதமராக கருதப்படுவார். சர்வதேச தளத்திலும் எதிர்க்கட்சித் தலைவர் பதவியை வகிப்பவருக்கு உரிய அங்கீகாரம் இருக்கும்.

இவ்வாறானதொரு முக்கியமான பதவியை வகிப்பவர், சிறந்த தலைமைத்துவப் பண்புடைய நபராக இருக்க வேண்டும். அரசியலில் நெளிவு, சுழிவு, வளைவு, இராஜதந்திரம் என அத்தனை அம்சங்களையும் அவர் கற்று வைத்திருக்க வேண்டும்.

ஆஸ்திரேலியாவின் லிபரல் கட்சி தலைவரான பீட்டன் டட்டனே, எதிர்க்கட்சித் தலைவராக செயற்படுகின்றார். 2022 இல் ஏற்பட்ட தேர்தல் தோல்விக்கு பொறுப்பேற்று ஸ்கொட் மொரிசன் பதவி விலகிய பின்னர், அந்தப்பதவிக்கு பீட்டர் டட்டன் தெரிவானார். அவரின் சில முடிவுகள் கட்சிக்குள்ளேயே எதிர்ப்பலைகளை உருவாக்கியுள்ளன. குறிப்பாக 'வொய்ஸ் டூ பார்லிமெண்ட் 'திட்டம் தேவையேயில்லை என வாக்களிக்க வேண்டும் என்ற லிபரல் கட்சியின் முடிவு கடும் விமர்சனத்துக்கு உள்ளாகியுள்ளது.

அதுமட்டுமல்ல கிரிக்கெட்டில் 'நோ போல்' வீசி, எதிரணிக்கு 'ப்ரீ ஹிட்' வாய்ப்பு கொடுப்பதுபோலவே அரசியலில் பீட்டர் டட்டனின் செயற்பாடுகள் அமைந்துள்ளன.

இவர் போலவே இலங்கையின் எதிர்க்கட்சி தலைவர் சஜித் பிரேமதாசவும் செயற்பட்டுவருகின்றார். 'பிரதான எதிர்க்கட்சி' என்ற அரசியல் அஸ்திரத்தை உரிய வகையில் பயன்படுத்தத் தெரியாமல், அரசியல் களத்தில் கோமாளிக் கூத்துகளை அரங்கேற்றுவது போல் செயற்பட்டுவருகின்றார். ஊடகங்களுக்காகவும், செய்திகளுக்காகவும் அவரின் அரசியல் நகர்வுகள் அமைந்துள்ளனவே தவிர, ஆக்கபூர்வமானவையாக அல்ல என்பது கசப்பான உண்மையாகும்.

தமது பக்கம் இருந்துகொண்டே அரசு பக்கம் கால் வைத்துள்ளவர்களுக்கு எதிராக நடவடிக்கை எடுப்பதில் அவர் தோல்வி கண்டுள்ளார். பருவகாலப் பறவைகள்போல, அந்தந்தக் காலப்பகுதியில் எழும் பிரச்சினைகள் பற்றி பேசுகின்றாரே தவிர, 'பின்தொடரல்' என்பது சஜித்திடம் இல்லை. கட்சி மற்றும் கூட்டணிக்குள் உரிய கட்டுக்கோப்பும் இல்லை. கட்சி, கூட்டணிக்குள் உள்ள பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கே திண்டாடும் சஜித், எப்படி அரச தலைவராவது? அவரின் மொழியிலேயே கூறுவதாக இருந்தால், சஜித் தன்னை இன்னும் பலப்படுத்திக்கொள்ள வேண்டும்.

# மணிப்பூர் கலவரம்: வகுப்புவாத அரசியலின் விரிவாக்கம்

(14ஆம் பக்கத் தொடர்ச்சி)

மாநில அரசும், ஒன்றிய அரசும் பழங்குடி மக்களுக்கு எதிராக இருக்கிறது என்பதற்கு மற்றொரு உதாரணம் என்னவென்றால், வழக்குத் தொடுத்த பழங்குடியினத் தலைவர் தின்காங்லுங் காங்க்மாயை வழக்கை திரும்பபெற வைத்தனர். இந்த வழக்கை பழங்குடி மாணவர் அமைப்பு தலைவர் பட்டின்தாங் லூபெங் (Poatinthang Lupheng) நடத்துகிறார். ஒன்றிய அரசின் உள்துறை அமைச்சர் அமித் ஷா, உச்ச நீதிமன்ற தீர்ப்பை மீறி உயர் நீதிமன்றத் தீர்ப்பு குறித்து அனைவருடன் பேசலாம் என்று தெரிவித்துள்ளது அப்பட்டமான இந்துத்துவா அரசியலாகும்.

1965 ஆம் ஆண்டு பழங்குடி மக்களை அடையாளம் காண்பதற்கு லோகூர் கமிட்டி அமைக்கப்பட்டது. இந்தக் கமிட்டி ஐந்து அளவுகோல்களை பரிந்து ரைத்தது. பழைமயான பண்புகள், தனித்துவமான கலாசாரம், புவியியல் தனிமைப்படுத்துதல், சமூகத்துடன் பெரிய அளவில் தொடர்பு கொள்வதில் கூச்சம், பின்தங்கிய நிலைமை ஆகிய ஐந்தையும் அளவுகோலாக முன்வைத்தது. இந்த ஐந்தும் உயர் நீதிமன்றம் அளித்துள்ள தீர்ப்புக்கு உட்பட்ட மெய்தி மக்களுக்கு பொருந்தாது.

2002-2004 வரை பூரியா கமிஷன் அமைக்கப்பட்டு அரசியல் சட்டம் 5 வது அட்டவணையில் பழங்குடியினரின் நிலம்,காடுகள், சுகாதாரம், கல்வி, பஞ்சாயத்துகளின் வேலை மற்றும் பழங்குடியினப் பெண்களின் நிலை போன்ற பல்வேறு பிரச்சினைகளில் கவனம் செலுத்தி பழங்குடி மக்களின் வாழ்வாதாரத்தை உயர்த்த பரிந்துரை செய்தது. மேலும் பழங்குடியின சமூகங்கள் தொடர்பான 5 முக்கியமான பிரச்சினைகளை ஆய்வு செய்ய பேராசிரியர் விர்ஜினியஸ் க்ஸாக்ஸாவின் தலைமையில் 2013 இல் உயர்நிலைக் குழு (HLC) அமைக்கப்பட்டது (1) வாழ்வாதாரம், வேலைவாய்ப்பு, (2) கல்வி, (3) சுகாதாரம், (4) விருப்பமில்லாத இடப்பெயர்வு மற்றும் இடம்பெயர்வு, (5) சட்ட மற்றும் அரசியலமைப்பு விஷயங்கள் போன்றவை ஆய்வு செய்யப்பட்டு ஆலோசனைகள் வழங்கப்பட்டன.

மணிப்பூர் மக்களின் வாழ்வை, பாதுகாப்பை உறுதிப்படுத்தக் கூடிய முறையில் ஊடுருவலைத் தடுக்க, எல்லைப் பகுதிகளில் கூடுதல் கண்காணிப்பு, அண்டை நாடுகளுடன் பொருளாதார, ராஜதந்திர உறவை வலுப்படுத்துவது, அமைதியை நிலைநாட்ட உள்ளூர்க் கிளர்ச்சிக் குழுவுடன் பேச்சுவார்த்தை நடத்தி ஒப்பந்தத்தை ஏற்படுத்துவது, ஆயுதப்படைச் சட்டத்தை ரத்துச் செய்வது, பாதுகாப்புப் படையினரின் அதிகார அத்துமீறல்களைத் தடுப்பது, உரிமை மற்றும் சொந்தம் என்ற உணர்வைத் தூண்டுவதற்கு முடிவெடுக்கும் இடத்தில் பிராந்திய மக்களின் பங்களிப்பை அரசாங்கம் அதிகப்படுத்த வேண்டும் போன்ற எண்ணற்ற ஆலோசனைகளை பா.ஜ.க. தலைமையிலான மாநில அரசு கவனத்தில் எடுத்துக் கொள்ளாமல் தனது குறுகிய அரசியல் அதிகாரத்துக்காக வாக்குவங்கியைத் தக்க வைப்பதற்காக வகுப்புவாதத் திட்டமிடலைச் செயற்படுத்தி உள்ளது.

வடகிழக்கு மாநிலத்தில் நூற்றுக் கணக்கான இனக்குழுக்கள் மலைப் பிரதேசங்களில் தனிமைப்பட்டு வாழ்கிற சூழலில் பா.ஜ.க. மேற்கொள்ளும் இந்துத்துவ அரசியல் இந்திய ஒற்றுமையைச் சீர்குலைப்பதோடு மிகப் பெரும் பாதிப்பையும் உருவாக்கும்.

# சகவாழ்வு ஒரு வாழ்தல் முறையாக மலர்தல் வேண்டும்...

(13ஆம் பக்கத் தொடர்ச்சி)

இதனை அரசியல் நிகழ்ச்சி நிரல்களுடன் நகர்த்தினார்கள். இங்குதான் பரந்துபட்ட சமூகங்களின் தலையீடு அவசியமாகிறது.

இலங்கையில் பல மொழிகள் பேசப்பட்டாலும், அடிப்படையில் சிங்களமும் தமிழும் தான் பிரதான மொழிகள். இவற்றோடு ஆங்கிலம் இணைப்பு மொழியாக உள்ளது.

சிங்களவர்கள் தமிழையும், தமிழ் பேசுவோர் சிங்களத்தையும் படிக்க முன்வர வேண்டும். ஆங்கிலம் படிப்பதில் காட்டும் அக்கறையைக் கூட இதில் காட்டுகிறார்களில்லை. இந்த மொழியறிவு பரந்துபட்ட தளத்தில் பிரயோகத்திற்கு வருமாயின், புதிய இலங்கையொன்றைக் காண முடியும்.

மொழி வேலி கடந்து, எண்ணங்களையும் கருத்துக்களையும் பரிமாற முடியாமல் இருப்பது, பகை மறப்புக்கும் நல்லிணக்கத்திற்கும் பாரிய தடையாக உள்ளது.

இன்னொரு பக்கம் சிங்கப்பூர் போன்ற நாடுகள் பின்பற்றும் பல்கலாச்சார - பன்மைத்துவக் கொள்கைகள் நமக்கு அவசியம். குறித்த ஒரு இடத்தின் பல் கலாசார ஒழுங்கு பாதிக்கப்படாத குடியேற்ற முறையை அந்நாடு அமுல்படுத்துகிறது. இதில் கற்றுக் கொள்ள நமக்கு நிறையப் பாடங்கள் உள்ளன.

### போருக்குப் பிந்திய சூழலில் முன்னெடுக்கப்பட்டிருக்க வேண்டிய, முன்னெடுக்கப்பட்ட பகை மறப்பும் நல்லிணக்கமும் தோல்வியடைந்தது ஏன்?

தொலைதரிசனமுள்ள தலைவர்கள் நமக்கு வாய்க்கவில்லை. இந்தத் தலைமைத்துவ வெற்றிடத்தை, அரசியல் அரங்கில் மட்டுமல்ல, சிவில் சமூகத் தளத்திலும் பரவலாகக் காணலாம்.

நம் மத்தியில் இருக்கும் அரசியல் பிரித்தாளும் அரசியல்தான் இணக்க அரசியல் அல்ல. அதுதான் முதன்மைக் காரணம்.

### எதற்காக போருக்குப் பிந்திய அரசியலை Post - war Politics) முன்னெடுப்பதற்கு அரசியற் கட்சிகள் தயங்குகின்றன?

கட்சி அரசியலின் முகாந்திரம் மிகவும் குறுகிய பார்வை கொண்டதாகவே இருக்கிறது.

பரந்துபட்ட பார்வையுடைய, எல்லோரையும் உள்ளீர்க்கும் பண்பு கொண்ட, பன்மைத்துவ இயல்புடைய புதிய இலங்கை பற்றி, இங்குள்ள அரசியல் கட்சிகளின் பார்வைதான் என்ன?

முன்னரங்கிலுள்ள பிரதான கட்சிகள் பெரிதும் இனச் சாய்வு கொண்டதாகவே உள்ளன. பன்மைத்துவத்தை உண்மையான கொள்கையாகவும் வரித்துக் கொண்டு இயங்குவதாகத் தெரியவில்லையே.

இவர்களது பார்வைக் கோளாறுதான் எல்லாவற்றுக்கும் முழு முதல் காரணி. மாற்றான ஒரு அரசியல் கலாசாரமோ வரலாறோ இங்கு இல்லாமல் போய் விட்டது.

அடுத்த தேர்தலைப் பற்றிக் கவலைப்படுவோர்தான் இங்கு ஆட்சிக் கட்டிலில் அமர்ந்தார்கள். அடுத்த தலைமுறை பற்றி அவர்களுக்குக் கவலையே இல்லை.

# அவுஸ்திரேலிய குடிவரவுச் சட்டமும் சில வினாக்களும் விடைகளும்

**சட்டத்தரணி - த.நா.ஜெயராசசிங்கம்**

இவர் முன்னாள் கொழும்பு பல்கலைக்கழக சட்டபீட உதவி விரிவுரையாளர். பின்னர் பிரிட்டனில் சட்டம் பயிற்று சட்டத்தரணியாகத் தேர்ச்சி பெற்றவர். பின் ஆஸ்திரேலியா மொனாஷ் பல்கலைக்கழகத்தில் சட்டம் பயின்றார். அதன் பின்னர் ஆஸ்திரேலியா விக்ரோறியா மாநிலத்தில் வழக்கறிஞராகத் தகுதிபெற்றவர். தற்போது சட்டம் பற்றிய ஆராய்ச்சியில் ஈடுபட்டுக் கொண்டிருப்பவர்.

இம்முறை சட்டம் பற்றிய பொது அறிவில் அவுஸ்திரேலிய குடிவரவுச் சட்டத்தில் உள்ள சில அம்சங்களை வினா விடையாகப் பார்ப்போம்.

முன்னைய சட்டக் கட்டுரைகளில் ஆஸ்திரேலியாவில் மூன்று வகையான அரச அமைப்புக்கள் உண்டென்று பார்த்தோம். அவையாவன: அவுஸ்திரேலியா மத்திய அரசு (Common wealth of Australia), மானிய அரசுகள் (State Govts) உள்ளூராட்சி சபைகள் (Local Govts) ஆகும்.

**வினா 1 : ஆஸ்திரேலிய குடிவரவுச் சட்டமும் அதன் பின்னணிக் கொள்கைகளும் எந்த ஆஸ்ரேலிய அரசால் ஆளப்படுகின்றது?**

விடை: அவுஸ்திரேலிய குடிவரவுச் சட்டம் மத்திய அரசினால் (Federal Govt) ஆளப்படுகின்றது. common wealth of Australia குடிவரவுச் சட்டத்திற்குப் பொறுப்பானதாகும்

**வினா 2 : குறிப்பாக எந்தச்சட்டம் ஆஸ்திரேலியா குடிவரவுடன் தொடர்புடையது?**

விடை : Migration Act 1958 Migration Regulation 1994 என்பன முக்கியமான அவுஸ்திரேலிய குடிவரவுச் சட்டங்களாகும்.

இங்கு முக்கியமாக குறிப்பிட வேண்டிய விடயம் என்னவெனின் 2009ஆம் ஆண்டில் மட்டும் (22) தடவைகள் Regulation மாற்றப்பட்டன.

**வினா 3 : அஸ்திரேலியா விசா ஒன்றுக்கு விண்ணப்பிப்பவர் முக்கியமாக கவனிக்க வேண்டிய அம்சம் என்ன?**

விடை : நடைமுறையில் உள்ள விதிகள் பற்றிய அறிவு அவசியமானதாகும்.

**வினா 4 :ஆஸ்திரேலியாவில் யார் ஒருவர் குடிவரவு ஆலோசகரை வழங்கலாம் என்பதனைத் தீர்மானிக்கும் பொறுப்புடைய அதிகாரசபை எது?**

விடை: 'OMARA' எனும் அதிகார சபை. 'OMARA' என்பது''Office Of The Migration Agents Registration Authority'' என்பது இதன் சுருக்கம் ஆகும்.

**வினா 5 : குடிவரவு ஆலோசனை வழங்க கூடியவர்?**

விடை: சில விதிவிலக்குகள் தவிர பொதுவாக "OMARA" இல் பதிவு செய்யப்படாத எவரும் குடிவரவு ஆலோசனைகளை வழங்குவது அவுஸ்ரேலியாவில் சட்டரீதியாக முறையற்ற செயல் ஆகும்.

**வினா 6: ஒரு தனிப்பட்ட நபர் தனது குடிவரவு விண்ணப்பத்தினை தானே செய்ய சட்டம் இடமளிக்கின்றதா?**

விடை: ஆம் .ஆலோசனை பெறுவதே சிறந்த முறை எனினும் ஒரு தனிப்பட்ட நபர் தனது விருப்பத்திற்கேற்ப குடிவரவு தொடர்பான விடயங்கள் செய்ய இடமளிக்கின்றது. இதில் எதுவித சட்டப் பிழையும் இல்லை.

**வினா 7 : ஒரு தனிநபர் தானே விண்ணப்பத்தை தயார் செய்கிறார் என்றால் அவர் கவனத்தில் கொள்ள வேண்டிய முக்கிய விடயம் என்ன?**

விடை: ஆஸ்திரேலியாவில் குடிவரவு தொடர்பான விடயங்களைக் கையாளும் அரச திணைக்களம் Dept of Immigration and Border Protection ஆகும். ஒவ்வொரு நாடும் இந்த திணைக்களத்திற்கு ஆயிரக் கணக்கான விண்ணப்பங்கள் குடிவரவு தொடர்பில் சமர்ப்பிக்கின்றன. எனவே நீங்கள் ஒரு குடிவரவு தொடர்பான விண்ணப்பத்தினை சமர்ப்பிக்கும்போது மிகுந்த கவனம் செலுத்த வேண்டும். அனைத்து ஆவணங்களும் முதல் முறையிலேயே சமர்ப்பிக்கப்படவேண்டும். ஆங்கிலம் அற்ற வேறு மொழியில் உள்ள ஆவணங்கள் மொழி பெயர்க்கப்பட்டு தகுதி வாய்ந்தோரால் அத்தாட்சிப்படுத்தப்படவேண்டும். முக்கிய விடயம் என்னவெனில் குடிவரவுத் திணைக்களத்தில் வேலை செய்வோரை நீங்கள் சமர்ப்பிக்கும் அரைகுறையான விண்ணப்பங்கள் மூலம் கஷ்டப்படுத்தக் கூடாது.

**வினா 8 : ஒரு விசா விண்ணப்பத்தை தயாரிப்பவர் வேறு என்னனென்ன விடயங்களைக் கருத்தில் கொள்ளவேண்டும் என குடிவரவுத்திணைக்களம் எதிர்பார்க்கின்றது?**

விடை : ஒரு பொழுதும் பொய்யான ஆவணங்களைத் தயார் செய்து குடிவரவுத் திணைக்களத்தில் ஏமாற்ற முயற்சி செய்யக்கூடாது. பொய்யான ஆவணத்தைத் தயாரித்தீர்கள் என கண்டு பிடித்தால் வாழ்நாளில் ஒரு போதும் அவுஸ்திரேலியா விசாவைப் பெற முடியாமல் போகும்.

**வினா 9 : நீங்கள் ஒரு குடிவரவு ஆலோசகர் அல்லது ஒரு சட்டத்தரணி மூலம் விண்ணப்பம் ஒன்றை குடிவரவு தொடர்பில் செய்து மேற்குறிப்பிட்ட ஆலோசகர் தவறாக வழி நடத்தினார் என்றால் எங்கு சென்று அவர் தொடர்பில் முறையீடு செய்யலாம்?**

விடை : OMARA விடமும் மேலும் ஒவ்வொரு மாநிலத்தில் உள்ள சட்ட சங்கங்களிலும் (LAW Society) முறையிடலாம்.

**வினா 10: நான் ஒரு குடிவரவு சம்பந்தமான விண்ணப்பத்தினை குடிவரவுத்திணைக்களத்திடம் சமர்ப்பித்துள்ளேன். அதன் நிலை பற்றி எவ்வாறு அறியலாம்?**

விடை : நீங்கள் Visa Entitlement Verification Online (VEVO) ற்குச் சென்று உங்கள் விசா விபரங்களையும் நிபந்தனைகளையும் (conditions)பற்றி அறிய முடியும்.

**வினா 11 : VEVO என்னென்ன விடயங்களை குறிப்பிடும்?**

விடை: VEVO நடைமுறையிலுள்ள உங்கள் விசா பற்றிய பின்வரும் விடயங்களை வழங்கும்.

1. என்ன வகையான விசா?
2. விசா முடிவுறும் திகதி
3. அவுஸ்திரேலியாவில் பிரவேசிக்க வேண்டிய இறுதித் திகதி
4. எவ்வளவு காலம் வசிக்கலாம்?
5. விசாவிலுள்ள நிபந்தனைகள் பற்றிய விபரம்.

(அதாவது நீங்கள் என்னென்ன விடயங்களை அவுஸ்திரேலியாவில் செய்யமுடியும் - முடியாதவை பற்றிய விவரங்கள்)

# மாத ராசிபலன்



## மேடம்

வேகமும் விவேகமும் நிறைந்த மேஷ ராசி அன்பர்களே, இந்தக் காலகட்டத்தில் எதிர்பார்த்த உதவிகள் கிடைக்கும்.

தொழில் வியாபாரம் திருப்தியாக நடக்கும். எதிர்பார்த்த பண உதவி கிடைக்கும். உத்தியோகத்தில் இருப்பவர்கள் அலுவலக வேலையாக அலைய வேண்டி இருக்கும்.

குடும்பத்தில் சகஜநிலை காணப்படும். உறவினர்கள் மூலம் நல்ல தகவல் வந்து சேரும். கணவன் மனைவிக்கிடையே இருந்த இடைவெளி குறையும். மற்றவர்கள் ஆலோசனை கேட்டு உங்களை நாடி வருவார்கள். உங்கள் குடும்பத்தை விட்டு பிரிந்து சென்றவர்கள் மீண்டும் வந்து சேருவார்கள்.

அரசியல்வாதிகள், தாங்கள் சார்ந்துள்ள கட்சியின் தொண்டர்களுக்கும், கலைத்துறையினர் படிப்படியான வளர்ச்சியைக் காண்பீர்கள்.

## இடபம்

இந்தக் காலகட்டத்தில் வீடு – மனை – வாகனம் சம்பந்தமான காரியங்களில் எதிர்பார்த்த பலன்கள் கிட்டும். காரியத் தடை தாமதம் ஏற்படும். மனம் மகிழும்படியாக எல்லாம் நடந்து முடியும்.

தொழில் வியாபாரம் நன்றாக இருக்கும். உத்தியோகத்தில் இருப்பவர்களுக்கு அலுவலகம் தொடர்பான பயணம் செல்ல வேண்டி இருக்கலாம்.

குடும்பத்தில் இருந்து வந்த மனம் நோகும்படியான சூழ்நிலைகள் மாறும். அனைத்து விஷயங்களிலும் நீங்கள் அனுசரித்து செல்வது நல்லது. கணவன் மனைவிக்கிடையே எதிர்பாராத மனவருத்தம் ஏற்பட்டு நீங்கும்.

அரசியல்வாதிகளுக்கு சாதகமான காலமாக அமையும். உழைப்புக்கான அங்கீகாரம் கிடைக்கும். கலைத்துறையினருக்கு ஓரளவு முன்னேற்றம் கிடைக்கும்.

## மிதுனம்

இது நன்மை பயக்கக்கூடிய காலம். பணவரத்துக் கூடும். காரிய அனுகூலம் உண்டாகும்.

தொழில் வியாபாரம் முன்னேற்றம் காண புதிய திட்டங்களை தீட்டுவீர்கள். உத்தியோகத்தில் இருப்பவர்கள் உற்சாகமாகச் செயற்பட்டு வேலைகளை உடனுக்குடன் செய்து முடிப்பார்கள்.

குடும்பத்தில் சுப நிகழ்வுகள் இடம் பெறும். கணவன், மனைவிக்கிடையே மகிழ்ச்சி கூடும்.

கலைத்துறையினருக்கு நன்மைகள் நடக்கும் காலமிது.

அரசியல்வாதிகள் மனம் தளராமல் எதிரிகளைச் சமாளிப்பீர்கள்.

மாணவர்களுக்கு கல்வியில் முன்னேற்றம் காண்பீர்கள். நண்பர்கள் மத்தியில் மதிப்பு கூடும். விளையாடும் போது கவனம் தேவை.

## கடகம்

உறவுகளுக்கு முக்கியத்துவம் அளிக்கும் கடக ராசி அன்பர்களே, இந்தக் காலகட்டத்தில் எல்லாக் காரியங்களும் அனுகூலமாக நடந்து முடியும். எதிர்பார்த்த தகவல்கள் நல்ல தகவலாக வரும். விருப்பங்கள் கைகூடும். நண்பர்கள் மத்தியில் மரியாதையும், அந்தஸ்தும் உயரும். மற்றவர்களிடம் பேசும்போது கோபத்தை குறைத்து பேசுவது நல்லது. பணவரத்து இருக்கும்.

தொழில் வியாபாரத்தில் முன்னேற்றம் காணப்படும். அரசாங்கம் மூலம் நடக்க வேண்டிய காரியங்களில் சாதகமான நிலை காணப்படும். உத்தியோகத்தில் இருப்பவர்கள் தன்னம்பிக்கையுடன் செயற்பட்டு வெற்றி பெறுவார்கள்.

குடும்பத்தில் இருந்த பிரச்சினைகள் நீங்கும். கணவன், மனைவிக்கிடையே இருந்த மன வருத்தம் நீங்கும்.

## சிம்மம்

இந்தக் காலகட்டத்தில் எல்லாவகையிலும் நல்லதே நடக்கும். பணவரத்து அதிகரிக்கும். எதிர்ப்புகள் விலகும். நண்பர்கள் மூலம் உதவிகள் கிடைக்கும். விரும்பிய காரியங்களைச் செய்து சாதகமான பலன் கிடைக்கப் பெறுவீர்கள். உத்தியோகம் தொடர்பான பயணங்கள் செல்ல நேரலாம்.

குடும்பத்தில் வெளிநபர்களால் ஏதாவது குழப்பம் ஏற்படலாம். சொந்த விஷயங்களுக்கு அடுத்தவர் ஆலோசனைகளைக் கேட்பதை தவிர்ப்பது நல்லது.

கலைத்துறையினருக்கு பகீரதப் பிரயத்தனம் செய்வதன் மூலமாகவே நல்ல முன்னேற்றம் ஏற்படும். சிறிது முயற்சி செய்வதன் மூலம் சிறந்த வாய்ப்புகள் கைகூடும். மேலும் உங்கள் கௌரவம் அதிகரிக்கும்.

அரசியல்வாதிகள் வீட்டைவிட்டு வெளியே தங்க நேரிடலாம். பதவிகளில் முன்னேற்றம் உண்டாகும் காலமிது.

## கன்னி

உழைப்பின் மகத்துவத்தை உலகுக்கு உணர்த்தும் கன்னி ராசி அன்பர்களே, இந்தக் காலகட்டத்தில் நல்ல பலன்களைப் பெறுவதில் சிரமம் இருக்காது. வீணாக மனதை உறுத்திக் கொண்டிருந்த கவலை நீங்கும். அடுத்தவருக்கு உதவிகள் செய்யும் போது கவனம் தேவை.

தொழில் வியாபாரத்தில் இருந்த மந்த நிலை மாறும். விற்பனை அதிகரிக்கும். உத்தியோகத்தில் இருப்பவர்கள் புத்தி சாதூரியத்தால் வேலைகளைத் திறமையாகச் செய்து முடித்து பாராட்டு பெறுவீர்கள். பதவி உயர்வு கிடைக்கலாம்.

குடும்பத்தில் இதமான சூழ்நிலை காணப்படும். உறவினர்கள் வருகை இருக்கும். கணவன் மனைவிக்கிடையே ஒருவருக்கொருவர் விட்டுக் கொடுத்து செல்வது நல்லது.

கலைத்துறையினருக்கு நற்பெயரும் கீர்த்தியும் வந்து சேரும்.

## துலாம்

இந்தக் காலகட்டத்தில் எல்லாவகையிலும் நன்மை உண்டாகும். அடுத்தவர்களுக்கு உதவுவதில் ஆர்வம் காட்டுவீர்கள். நோய் நீங்கி உடல் ஆரோக்கியம் உண்டாகும். எதிர்ப்பாலினத்தாரால் செலவு ஏற்படும். கோபத்தால் சில்லறை சண்டைகள் ஏற்படலாம். பணவரத்துக் கூடும். காரிய அனுகூலம் உண்டாகும்.

தொழில் வியாபாரம் முன்னேற்றம் காண புதிய திட்டங்களைத் தீட்டுவீர்கள். உத்தியோகத்தில் இருப்பவர்கள் உற்சாகமாக செயல்பட்டு வேலைகளை உடனுக்குடன் செய்து முடிப்பார்கள்.

குடும்பத்தில் குதூகலமான சூழ்நிலை காணப்படும். கணவன், மனைவிக்கிடையே மகிழ்ச்சி கூடும். உங்கள் சொல்படி பிள்ளைகள் நடந்து கொள்வது மனதுக்கு இதமளிக்கும்.

## விருச்சிகம்

இந்தக் காலகட்டத்தில் எடுத்த காரியத்தை எப்படியும் செய்து முடித்து விடுவீர்கள். சுபச் செலவுகள் ஏற்படும். வேலை காரணமாக வீட்டை விட்டு வெளியில் தங்க நேரலாம். திட்டமிடுவதில் பின்னடைவு ஏற்படும். பணவரவு எதிர்பார்த்தபடி இருக்கும். பெரியோர் நேசம் கிடைக்கும். வாகன யோகம் உண்டாகும்.

தொழில் வியாபாரம் தொடர்பான விஷயங்கள் சாதகமாக நடக்கும். நயமாகப் பேசுவதன் மூலம் வாடிக்கையாளர்கள் எண்ணிக்கை அதிகரிக்கும். உத்தியோகத்தில் இருப்பவர்கள் கவனமாக செயற்படுவது நல்லது.

குடும்பத்தில் கணவன், மனைவிக்கிடையே நெருக்கம் அதிகரிக்கும். குடும்பத்துடன் விருந்து, கேளிக்கை நிகழ்ச்சிகளில் கலந்து கொள்ளும் சூழ்நிலை வரும். குழந்தைகள் உற்சாகமாக காணப்படுவார்கள்.

அரசியலில் உள்ளவர்களுக்கு பொறுப்பு வாய்ந்த பதவிகள் கிடைக்கும்.

## தனுசு

இந்தக் காலகட்டத்தில் நல்ல யோகமான பலன்களைப் பெறப் போகிறீர்கள். பணவரத்து அதிகரிக்கும். மனதில் ஏதாவது ஒரு கவலை உண்டாகும். சொத்துக்கள் சம்பந்தமான காரிய அனுகூலம் ஏற்படும்.

தொழில் வியாபாரத்தில் கூடுதல் லாபம் கிடைக்கும் என்ற தன்னம்பிக்கை ஏற்படும். உத்தியோகத்தில் இருப்பவர்கள் வீண் அலைச்சலைச் சந்திக்க வேண்டி வரும். அலுவலக வேலைகள் உடனே முடியாமல் இழுபறியாக இருக்கும். நல்ல பெயர் கிடைக்கப் பெறுவீர்கள்.

குடும்பத்தில் சுபகாரியங்கள் நடக்கும். கணவன், மனைவிக்கிடையே அன்பு அதிகரிக்கும். பிள்ளைகள் உங்கள் சொல்படி நடப்பது மனதுக்குத் திருப்தி தரும். உறவினர்கள் – நண்பர்கள் மூலம் நன்மை நடக்கும்.

## மகரம்

இந்தக் காலகட்டத்தில் வழக்கு சம்பந்தமான விஷயங்களில் சாதகமான பலன் கிடைக்கும். மனதிருப்தியுடன் செயலாற்றுவீர்கள். புத்திசாதூரியம் மூலம் காரிய வெற்றி கிடைக்கும். கொடுத்த வாக்கை நிறைவேற்றுவதன் மூலம் மற்றவர்களிடம் மதிப்புக் கூடும். பாராட்டுக் கிடைக்கும். உடற்சோர்வு உண்டாகும்.

தொழில் வியாபாரம் தொடர்பான காரியங்களில் இழுபறியான நிலை காணப்படும். உத்தியோகத்தில் இருப்பவர்கள் அலுவலகம் தொடர்பான பணிகளில் முழுமூச்சுடன் செயற்பட்டு முன்னேற்றம் காண்பார்கள்.

குடும்பத்தில் கணவன், மனைவிக்கிடையே இருந்த மனவருத்தம் நீங்கும்.

கலைத்துறையினருக்கு விருதுகள் கிடைக்கும். புதிய வாய்ப்புகள் கிடைக்கும்.

அரசியலில் உள்ளவர்களுக்கு அனுகூலம் கிடைக்கும். காரியவெற்றி உண்டாகும்.

## கும்பம்

இந்தக் காலகட்டத்தில் நல்ல பலன்களைப் பெறப் போகிறீர்கள். மனம் மகிழும் சம்பவங்கள் நடக்கும். மனக்கவலை குறையும். எல்லாவகையிலும் சாதகமான பலனும் கிடைக்க பெறுவீர்கள். சற்றுக் கூடுதலாக எதிலும் கவனம் செலுத்துவது நல்லது.

தொழில் வியாபாரத்தில் லாபம் அதிகரிக்கும். உத்தியோகத்தில் இருப்பவர்கள் கூடுதலாக உழைக்க வேண்டி இருக்கும். உழைப்புக்கு ஏற்ற பலன் தாமதமாகக் கிடைக்கும்.

குடும்பத்தில் இருந்த பிரச்சினைகள் நீங்கும். வீட்டுக்குத் தேவையான பொருள்களை வாங்கி மகிழ்வீர்கள். கணவன், மனைவிக்கிடையே உறவு பலப்படும்.

அரசியல்வாதிகள், கட்சியின் மேலிடத்தில், கணிசமான ஆதரவைப் பெறுவீர்கள்.

கலைத்துறையினருக்கு அனைத்து வேலைகளும் சுமுகமாக முடியும். உங்களைத் தேடிப் புதிய வாய்ப்புகள் வரும்.

## மீனம்

இந்தக் காலகட்டத்தில் கிரகநிலை உங்களுக்கு நல்ல பலனை அள்ளித்தரும் நிலையில் இருக்கிறது. நீண்ட நாட்களாக இருந்து வந்த உடல் உபாதை மறையும். வாகனத்தில் செல்லும் போது எச்சரிக்கை தேவை. தாயின் உடல்நிலையில் கவனம் அவசியம். திட்டமிட்டபடி காரியங்களைச் செய்ய முடியாமல் இருந்த தடங்கல்கள் நீங்கும்.

தொழில் வியாபாரம் தொடர்பான காரியங்கள் சாதகமாக நடந்து முடியும். வியாபாரப் போட்டிகள் குறையும்.

குடும்பத்தில் நிம்மதி காணப்படும். விருந்து நிகழ்ச்சியில் குடும்பத்தினருடன் கலந்து கொண்டு மகிழ்ச்சி அடைவீர்கள். கணவன், மனைவிக்கிடையே இருந்த கருத்து வேற்றுமை நீங்கும்.

அரசியல்வாதிகள், மேலிடத்தின் ஆதரவைப் பெறுவீர்கள்.

எதிரொலி
ஆஸ்திரேலியா ETHIROLI



ஊழிக்காலம்-2
45



# புயலுக்குப்பின்...



மணியடித்தால் தேநீர், மணியடித்தால் லைன், மணியடித்தால் உணவு என எல்லாவற்றுக்கும் மணியடித்தாலும் தொண்டை வெடிக்கக் கத்தவும் வேண்டும். அதி-காலை ஐந்து மணிக்கு எழுப்பும் மணி, ஐந்தரைக்கு தேநீர், ஏழு மணிக்கு காலை உணவு, பத்துமணிக்கு தேநீர், பன்னிரெண்டு முப்பது மணிக்கு மதிய உணவு, நான்கு மணிக்கு தேநீர், மாலை ஆறு முப்பதுக்கு இரவு உணவு.

பூந்தோட்டம் கூட்டுறவுப் பயிற்சிக் கல்லூரி அது. முன்புறம் அமைந்த மாடிக் கட்டடத்தின் கீழே ஒரு சிறிய அறை பார்வதிக்கென ஒதுக்கப்பட்டது. அதில் அவளுடன் கவிதாவும் சேர்ந்து கொண்டாள்.

வந்த மறுநாள் அங்குவந்த ராணுவ மேஜர் ஐம்பது வயது கடந்தவளாக இருந்தாள். பார்வதியின் வயதைக் கருத்திற் கொண்டு இந்த அறையை ஒதுக்கித் தந்தாள். எல்லோரையும் லைன் பண்ணச் சொல்லி அனைவருக்கும் அங்குள்ள நடைமுறைகளை விளக்கினாள்.

"பொறுப்பாளர் விடுமுறையில் சென்றிருப்பதால் நாளையே முக்கியமான விசயங்கள் பேசப்படும்" என்றாள்.

ஒரு கடமைக்காக காலை உணவை உண்டனர். மத்தியானமும் உப்புச்சப்பில்லாத உணவு, மாலை உணவு பரவாயில்லை. என்றாலும் ஆறரை ஏழு மணிக்கு வயிராற உண்ண முடியவில்லை. படுக்கைக்குப் போகும் போது பசித்தது. பார்வதி உறக்கமின்றி உழல, கவிதா ஒரு தேநீர் போட்டு பிஸ்கட்டும் கொடுத்தாள். மிக மோசமான நுளம்புக்கடி, விடியவிடிய உறங்கமுடியவில்லை.

பார்வதிக்கு அந்தப் புதியச் சூழல் இன்னும் ஒட்டவில்லை. காலையிலிருந்து வெறுமையாகக் கழிந்தது பொழுது. படிக்கவும் எதுவுமில்லை. சுற்றாடலைச் சுத்தப்படுத்த குழுக்களை அனுப்பினார்கள். பார்வதி உள்ளேயே அமர்ந்திருந்து எழுதினாள். எழுத நிரம்ப விடயங்கள் இருந்தன. எண்ணங்கள் மூளைக்குள் முட்டித்தள்ளிக்கொண்டு நின்றன. ஆயினும் எதை எழுதுவது ? எதை எழுதாமல் விடுவது ? என்று பார்த்தால், எல்லாமே ஒன்றும் விடாமல் பதிவு செய்துவிட வேண்டும் என்ற வெறியே அவளுள் இருந்தது.

இன்றுடன் ஒரு கொப்பி நிறைந்தது. மற்றவற்றுக்கு கொப்பி இல்லையே என வருந்த, கவிதா தன்னிடமிருந்த நோட்புக்கை கொடுத்தாள்.

மாலையில் பிள்ளைகளை விளையாட விட்டார்கள். சிலர் விளையாட்டுகளில் பங்குபற்றாமல் வேடிக்கை பார்த்தார்கள். யாருடைய மனதிலும் மகிழ்ச்சி இல்லை. இந்த முகாமைச்சுற்றிவர தமிழ் மக்கள் குடியிருந்தனர். நடை பாதையில் போவோர் வருவோரெல்லாம் வேடிக்கை பார்த்தனர். மூன்று பக்கமும் கிரவல்வீதி. முன்புறம் ஒரு துர்க்கையம்மன் கோவில் இருந்தது. அந்த வீதி பிரதான வீதி. இதில் பஸ் போக்குவரத்தும் இருந்தது. வளவுக்குள் நடுவே ஒரு பெரிய மண்டபம் இருந்தது. அதன் பின்னும் பக்கமாகவும் விடுதிக்கென அறைகள் கட்டப்பட்டிருந்தன.

இரண்டு குளியலறை. வெளியே மலசலகூடங்களை அடுத்தும் உள்ளே ஒரு குளியலறை, இரண்டு மலசலகூடங்களும் இருந்தன. உள்ளே வலது பக்கமாக அமைந்த ஆறு அறைகளுள் ஒன்றில் காவற்றுறைப் பெண்களும், மற்றவற்றில் போராளிப் பெண்களும் இருந்தனர். மற்றைய புறத்தின் ஆறு அறைகளிலும் போராளிப் பெண்கள் இருந்தனர். உள்ளிருந்த கழிப்பறை ,குளியல-றை இரண்டும் காவற்றுறைப் பெண்கள் உபயோகித்தனர்.

வெளியே ஆறு கழிப்பறைகளும் இரண்டு குளியலறையும் போராளிப்பெண்கள் உபயோகித்தனர். குளியறையில் ஒரே சமயத்தில் பலர் குளிக்கக்கூடியதாக இருந்தது. பெரிதாக நடுவே அமைந்திருந்த பெரிய மண்டபத்தில் கூட்டுறவுச் சமாச ஊழியர்கள் தமது அலுவலகத்தை நடத்தினர். அவர்களது அலவலக கோப்புகள், தளபாடங்கள் எல்லாம் அடைந்து கிடந்தன.

மேற்கே இன்னமொரு மாடிக் கட்டடம் இருந்தது. அதன் கீழ் ஒரு மினி பொலிஸ் அலுவலகம் இயங்கியது. அதன் மாடியில் இராணுவத்தினர் தங்கியிருந்தனர். அதனை அண்டியதாக வேலிக்கரையில் சமையலறை இருந்தது. அடிக்கடி சுகாதார உத்தியோகத்தர் பார்வையிட வருவதால் அவர் வரப்போகும் நாளுக்கு முதல் நாள் அந்த இடங்களைத் துப்பரவு செய்வர்.

வடக்கே பெரிய மாடிக்கட்டடம் இருந்தது. மாடியில் அலுவலகம் இயங்கியது. கீழே ஒரு புறம் பெரிய மண்டபம், மறுபுறம் அதிகாரிகள் தங்கியிருந்தனர். வவுனியா மாவட்ட புனர்வாழ்வு நிலையங்கள் அனைத்துக்கும் இதுவே தலைமைச் செயல-கம். இந்த இரண்டுக்கும் இடையில் சிறு கட்டடம். குசினியுடன் கூடியது. அந்தக் கட்டடத்தில் இடைநிலை அதிகாரிகள் இருந்தனர். அந்தக் குசினியில் இந்த அலு-வலக இராணுவத்தினருக்கு ஒரு சமையலாள் சமைத்தார்.

கிழக்கே நுழைவாசலை அண்டியதாக மாடிக்கட்டடத்தில் புனர்வாழ்வுகென்று விடப்பட்ட கல்விப்பொதுத்தராதர சாதா ரணதர உயர்தர வகுப்புக்களில் படிப்பவர்கள் தங்கியிருந்தனர். அவர்களுடைய கல்வியைத் தொடர அனுமதித்ததுடன் இரு சிறிய பாடசாலைக் கட்டடமும் இவற்றுக்கு ஓரமாக அமைக்கப்பட்டிருந்தது. இவை இரண்டும் ஓலைக் கொட்டகைகளே, ஏற்கனவே கூட்டுறவாளர்களால் இங்கு தொழிற்பயிற்சி வழங்கப்பட்டதாகவும் அதற்காக போட்டிருந்த கொட்டகைதான் இது என்றனர். தினமும் வெளியிலிருந்து ஆசிரியர்கள் வந்து கற்பித்தனர். எட்டரைக்கு ஆரம்பமாகும் வகுப்புகள் பகல் ஒரு மணிக்கு நிறைவடையும்.

போராளிகளின் குசினியில் இரண்டு சமையற்காரர்கள் இருந்தனர். ஒரு பெண், ஒரு இளைஞன் . இவர்கள் சமைத்தாலும் மரக்கறி, இறைச்சி, மீன் என்பவற்றை வெட்டவும், வெங்காயம் உரிக்கவும், அன்றாடம் ஒவ்வொரு போராளிகள் குழு செல்ல வேண்டும். இருபத்தைந்து பேர் கொண்ட குழுவில் ஒரு ஏழெட்டுப்பேர்வரை போவார்கள். மற்றவர்கள் ஏதாவது ஒரு நோயைச் சொல்லிப் படுத்து விடுவார்கள்.

படிக்கின்ற பிள்ளைகள் அனைவரும் மாடியில் தங்கியிருந்தனர். பெரிய மண்டபமாக தடுப்பற்ற ஹோல் இருந்தது. இந்தப் பெரிய மண்டபத்தின் முன்னும் பின்னும் விறாந்தைகள் இருந்தன. அந்த விறாந்தைகளில் சாதாரணப் போராளிகள் இருந்தனர். கீழ் போர்டிக்கோவுக்கு நேர் மேலே சென்றி போட்டு இரு பெண் ராணுவத்தினர் இருபத்து நாலு மணிநேரமும் மாறி மாறி காவல் இருந்தனர்.

மாடியிலிருந்து வீதி இருபத்தைந்து மீட்டருக்கும் குறைவான தூரமே. வீதியின் அப்புறத்தே இரு கடைகள் இருந்தன. எப்போதும் சனப்புழக்கம் இருந்தது.

மாடியில் நின்றவாறே சாதாரண தொனியில் கடையில் அல்லது கடைக்கு வந்திருப்பவர்களுடன் உரையாட முடியும். சென்றியை ஏமாற்றிவிட்டு மதிலுக்கு மேலாக கடையில் பொருட்கள் வாங்கியோரும் உண்டு.

வீடுகளிலிருந்து வரும் பழங்கள் ,தின்பண்டங்களை சென்றியில் நிற்போருடன் பகிர்ந்துண்ணும் பெண்களும்.. "அக்கே மெகன்சித? சுட்டத் புதியன்ட மம பலன்னங்" என்று கூறி அவளைப் படுக்க வைத்துவிட்டு போராளிகள் சென்றி பார்த்தும் உண்டு. போராளிகள் சென்றிபார்த்தால். அது டபுள் சென்றி. ஒன்று பொறுப்பாளர் யாராவது வருகிறார்களா? என்று பார்க்க .மற்றது தங்களுக்கு தாங்களே பார்க்கும் சென்றி.

அன்று மாலையில் ஒரு வாகனம் வந்தது. அதில் செட்டிகுளத்தில் நின்ற முழு ஆமிப் பெண்களும் வந்து சேர்ந்தனர். இவர்கள் வந்ததும் அந்த வாகனத்திலேயே இதுவரை நின்றவர்கள் மூடை முடிச்சுகளுடன் ஏறிச்சென்று விட்டனர். செட்டி குளத்திலிருந்து வந்தவர்களுடன் முன்னர் வந்த பிள்ளைகள் பேச்சுக் கொடுத்தனர்.

நாளைய நாளுக்காக இன்று ஏங்காதே. நேற்றைய நாளை எண்ணி இன்று வருந்தாதே, இன்றைய நாள் உனக்குக் கிடைத்த பெரும் சொத்து. அதை நல்ல வண்ணம் செலவிடு.

நாம் செலவிட்டாலும் செலவிடா விட்டாலும் அது செலவழிந்துதான் போகும். நேற்றைய விரதத்தை பார்வதி கைவிட வேண்டியதாகிவிட்டது. இங்கு தனிச்சமையல் சாத்தியமில்லை .எனவே ஏனைய விரதங்களும் நாசம் என்பது துலக்கமாகியது. இதை ஒரு சோதனையாகக் கொண்டு மனம் மாறுவேனா ,மனம் தேறுவேனா? பார்வதி விடைதெரியாத கேள்விகளில் மூழ்கினாள்.

'மாலை மூன்று மணி லைனாம்' என்று குரல் கொடுத்தார்கள். உளவளத்துணை நிபுணர்கள் வந்திருந்தனர். மெலிந்த தோற்றம், தாடி அரும்பிய முகம், அந்த மனிதர்தான் முக்கியமான உரையை வழங்க வந்தவராகத் தெரிந்தார்.

டொக்டர் யாருடைய முகங்களையும் பார்க்கவில்லை. அடிக்கடி தன் உள்ளங்கையை விரித்துப் பார்த்தபடியும், கூரையைப் பார்த்தபடியுமே பேசினார். அவர் பேச்சில் இரண்டு வாக்கியங்களுக்கு ஒரு தடைவை " எங்களை இங்கே வரவழைத்து இந்த வகுப்பை ஒழுங்கு செய்த மேஜர் விஜயரட்ணாவுக்கு மிகவும் நன்றி" என்று கூறிக்கொண்டே வந்தார்.

அந்த கூட்டம் முடிந்து வெளியே வந்தனர்.

இந்த முகாமுக்கு வந்ததிலிருந்து அடிக்கடி பேருந்துக்களில் பெருமளவு இளைஞர்கள் கொண்டுவந்து இறக்கப்பட்டு,பதிவுகள் மேற்கொள்ளப்பட்டு பின் வேறிடத்துக்கு ஏற்றி அனுப்பப்பட்டனர். வவுனியா புனர்வாழ்வு முகாம்களுக்கு இதுவே மத்திய நிலையம். செட்டி குளம், ஓமந்தை, பம்பமடு, கோமரசன்குளம், கோவில்குளம், மருதமடு போன்ற முகாம்களிலிருந்து புனர்வாழ்வுக்கு உட்படுத்தப்பட்டவர்களே இவ்வாறு அனுப்பப்பட்டனர்.

இவர்களின் உறவுக்காரப் பெண்களோ, தெரிந்தவர்களோ என இருந்த பெண்கள் அவர்களிடம் தமது முகவரியைக் கொடுத்த கடிதம் போடச் சொன்னார்கள். எங்கே போகிறீர்கள்,அங்கே நிலைவரம் என்ன? என்பதை எழுதும்படி கேட்டுக் கொண்டனர். போகும் போது இவர்களுக்கே தாம் எங்கே கொண்டு செல்லப்படுகின்றோம் என்பது தெரியவில்லை. எனினும் நாளாந்தம் மூன்று நான்கெனப் பேருந்துகள் சென்றன.

ஒரு வாரம் கடந்து விட்டது. கவிதாவுக்கு அவள் சித்தப்பா முறையா-னவன் ஒரு கடிதம் போட்டிருந்தான். தாங்கள் வெலிக்கந்தை என்னுமிடத்துக்கு கொண்டு வரப்பட்டுள்ளதாகவும், அது பொலநறுவைக் காட்டுக்குள் சன நடமாட்டமற்ற ஒரு இடம் எனவும் எழுதியிருந்தான். அவர்கள் அங்கே வேலைக்காக கொண்டு செல்லப்பட்டனர் என்று அடுத்ததாக ஒரு பிள்ளையின் அண்ணன் போட்ட கடிதம் தெரிவித்தது. இதைத்தான் மனநல மருத்துவரும் தெரிவித்திருந்தார்.


NS Systems
SECURITY
1300 108 555
REALTIME
SECURITY SYSTEM
PROTECTION
IP / HD CCTV Systems
Alarm Monitoring
Access Control
Video Intercom
Security Fog System
Smart Home
Data & Tele-communication
Security Alarm
Ducted Vacuum
Solar CCTV
Digital TV Antenna
UTECH SOLUTIONS
Corporate Group
Protect your Home & Family, Secure your Premises & Business.
1300 108 555 / 0447 533 555
www.nssystems.com.au / info@nssystems.com.au

Transco™ CARGO

=

#1 FREIGHT FORWARDER FROM AUSTRALIA TO SOUTH ASIA

ஒவ்வொரு வாரமும் இலங்கைக்கு ஏற்றுமதி செய்யும் ஒரே நிறுவனம்

ONLINE TRACKING
SMS & EMAIL ARRIVAL NOTICE NOTIFICATION
LIVE CHAT ON WEBSITE
TRANSCO APP

We love to deliver

IF YOU MISS THE CUT-OFF THIS WEEK
YOU CAN SEND IT NEXT WEEK
IT'S AS EASY AS THAT

Weekly shipments exclusive to Transco warehouses in Dandenong South and Campbellfield

206-208 Discovery Road
Dandenong South
(03) 9703 2255

45 Adrian Rd
Campbellfield
(03) 9357 7228

SYDNEY - 02 9897 0004
PERTH - 08 9452 7707
BRISBANE - 07 3219 0203
CANBERRA - 02 62821905
TASMANIA - 03 90174167
ADELAIDE - 08 8322 8825
DARWIN - 08 79790002

1300 1 TRANSCO (1300 187 267)
WWW.TRANSCOCARGO.COM.AU